# உலகம் பலவிதம்

கே. ஆர். ஜயலக்ஷ்மி அம்மாள்

ஜார்ஜ் டவுன் :: சென்னை

பதிப்புரிமை ] [ ரூ. 1/4

## சமர்ப்பணம்

எனக்குக் கல்வியையும், அறிவையும்,
உற்சாகத்தையும் ஊட்டிய
என் கணவருக்கு.

# முகவுரை

## டி. கே. சிதம்பரநாத முதலியார்

'**காரை** நிறுத்தி ஒருவரை, "சாமிப் பண்டாரம் தெருவுக்கு எப்படிப் போகவேண்டும்?" என்று டிரைவர் கேட்டான். அவர் நின்று பதில் சொல்லாமல், போலீஸ்காரன் கை காண்பிப்பது போல், ஏதோ கையைக் காட்டிவிட்டுச் சென்றார். அவர் காண்பித்த திக்கை நோக்கிக் கார் நகர்ந்தது.

'கொஞ்ச தூரம் சென்றபின் மறுபடி விசாரணை. கடைசியாய்த் தேடும் தெரு இதுதான் என்று ஒருவிதமாய் முடிவுக்கு வந்தோம். ஒரு கோடியிலிருந்து மற்றொரு கோடி வரையில், காரை ஊர்வலத்தில் விடுவது போல் மெதுவாய் ஓட்டிக்கொண்டு, வீடு வீடாய்க் கதவு நம்பர்களைக் கவனித்துக்கொண்டு வந்தோம். 32-ஆம் நம்பரே இல்லை!

'நகரத்தில் நம்பர் போடும் விசித்திரமே விசித்திரம்! குறுக்கே வரும் சந்துகளில் நம்பர் வரிசையை மடித்துக்கொண்டு வருவதொன்று! ஓரே நம்பருக்கு A, B, C என்று எழுத்துக்களைச் சேர்த்துக்கொண்டே போவது வேறு. தெருவின் நடுவில் கட்டைத்தொட்டி ஒன்று வரும். அதற்கு, நம்பர் இருக்கும் இடமே தெரியாது. இதெல்லாம் போதாதென்று வீட்டுக் கதவுகளின் மேல் புது நம்பர் ஒன்று; பழைய நம்பர் ஒன்று. இவ்வளவு தெளிவு!' — [ 'மேல் விலாசம்' : பக்கம் - 108 - 109. ]

இதுதான் தமிழ். இதுதான் நடை. இதற்கும், 'பரிமேலழகர்கள்,' 'நச்சினார்க்கினியர்கள்,' 'இறையனார் அகப்பொருள் உரை ஆசிரியர்கள்', இவர்களுக்கும் வெகுதூரம் அல்லவா! தெருவையும், வீட்டு நம்பரையும் கண்டுபிடிப்பதில், மோட்டார் வண்டிக்குள்ளிருந்த அம்மாளுக்கு ரொம்ப ரொம்பத் திகைப்பு. அவ்வளவு திகைப்பும் உண்டாய்விடுகிறது நமக்கும். ஆனால் மேலே சொன்ன மூன்று ஆசிரியர்களையும் இந்த விஷயத்தைப் பற்றி எழுதச் சொன்னால், வீடு தேடும் திகைப்பைவிட, நமக்கு அர்த்தம் தேடும் திகைப்பு பெரிதாய்ப் போய் விடும்.

* * *

தமிழ் பாஷையின் வேகம் நயம் எல்லாம், பேசும் பேச்சிலேயே கிடக்கிறது. விசேஷமாகப் பெண்டுகள் பேசும் பேச்சிலேயே கிடக்கிறது என்பது எடுத்துச் சொல்ல வேண்டாத காரியம். இந்த உண்மையை ஸ்ரீமதி கே. ஆர். ஜயலக்ஷ்மி அம்மாள் இந்தப் புஸ்தகத்தில் நன்றாய் ரூபித்துவிட்டார்.

நடை போகிற போக்கும் விஷயம் போகிற வேகமும் சேர்ந்து, நம்மை எளிதில் பற்றி இழுத்துக் கொண்டு போகிறது. மூர் மார்க்கெட்டின் சந்தடிக்குள் இருந்தும், கட்டுரைகளைப் படித்துவிடலாம், அனுபவித்து விடலாம். அவ்வளவு ரஸம் வாய்ந்த கட்டுரைகள்.

ஏதோ 'நவராத்திரிக் கொலு,' 'காபி', 'மேல்விலாசம்', 'குடிக்கூலி', 'சமையற்காரன்' போன்ற சாமான்ய விஷயங்களைக் கையாண்டிருக்கிறது. வானத்தையும், பாதாளத்தையும் அளந்துவிடவில்லைதான். பலர் அவை

களை அளந்து, எல்லாம் ஒரு பர்லாங்குக்குள் தான் என்று முடிவு கட்டிவிடுவார்கள். கொஞ்சம் யோசனை பண்ணினால், வானத்தையும் பாதாளத்தையும் எதற்காக அளந்தார்கள் அவர்கள், என்றுதான் படும்.

நம்முடைய ஆசிரியையோ சின்னஞ்சிறு விஷயங்களை எடுத்தே, அவைகளின் அகலம், நீளம், ஆழம் இன்னது என்று எடுத்துக் காட்டும்போது, புதிய கட்டிடத்துக்குள், கிரகப்பிரவேசத்தன்று அழைப்பு வந்து போன மாதிரியே யிருக்கும்.

*　　　*　　　*

மிஸஸ் பன் இருபது முப்பது வருஷத்துக்குமுன் உள்ள நம்முடைய சகோதரி. மேல்நாட்டு மோகம் அற்றுப்போன தற்காலத்தில் மிஸஸ் பன்கள் கிடையாது. ரொம்ப சந்தோஷம்.

மறதியைப் பற்றி எழுதியிருக்கிற கட்டுரை ஒரு எடுத்துக்காட்டுதான். விஷயங்களை ஆழ்ந்து துருவியும், அனுயாசமாகவும் கையாண்டிருக்கிறது.

அடுத்த வருஷம் வருகிற நவராத்திரிக் கொலுவுக்கு நீங்கள் போவதாயிருந்தால் கவனித்துக் கொள்ளுங்கள். 'குளம் கொஞ்சம் மெதுவாய் ஒழுக ஆரம்பிக்கும். மண் மலை சிறிது சிறிதாய்ச் சரிய ஆரம்பிக்கும். கொலுப் பார்க்க வந்தவர்களிடம், வாய் மாத்திரம் பேசுமே யொழிய, மனம் முழுவதும் குளத்திலும் மலையிலுமாய் இருக்கும்.' தாம்பூலத்தைச் சீக்கிரமாய் வாங்கிக்கொண்டு அப்படியே வீடு வந்து சேர்ந்துவிடுங்கள். வீட்டு அம்மாள் செய்யப்போகும் மராமத்துக்குக் குறுக்கே நிற்க வேண்டாம் நீங்கள்!

*　　　*　　　*

விகட வெண்பாக்கள் சில இருக்கின்றன. விருந்தோம்பல் சம்பந்தமாகப் பரிமாறுகிற தாம்பாளத்திலிருந்து சிதறி விழுந்தவை அவை. அவைகளில் ஒரு வெண்பாவைக் கொஞ்சம் பார்க்கலாம்.

முகத்தில் உல்லாச பாவத்தை வைத்துக்கொண்டு மனம் உவந்து ஒருவன் விருந்தளிக்கிறான்; அவனுடைய இல்லத்தில் உறைவது யார்? லட்சுமி தேவிதான் உறைவாள். அதுவும் மனம் உவந்து உறைவாள். அதாவது, அந்த வீட்டில் எல்லாருக்கும் எப்போதுமே ஆனந்தம் இருக்கும் என்பது பொருள். இது திருக்குறள். 'செய்யாள்' என்றால் லட்சுமி. 'செய்யாள்' என்ற வார்த்தைக்கு ஒரு பொருள் ஆனந்தம். வேறொரு பொருளும் இருக்கிறது. 'ஐவேஜு' என்பதுதான் அந்தப் பொருள். அது வெண்பாவில் விளங்கும்.

'அகனமர்ந்து செய்யாள் உறையும், முகனமர்ந்து
நல்விருந்(து) ஓம்புவான் இல்லத்தே ;—செய்யாள்
உறைந்தா லன்றிவிருந் தோம்பவல் லார்யார் ?
வெறுங்கை முழம் போடுமோ ?'

* * *

நல்ல தலைவாழை இலை போட்டு (சீமைப் பீங்கானில் அல்ல) விருந்தளிக்கிறார் ஸ்ரீமதி கே. ஆர். ஜயலக்ஷ்மி அம்மாள். தமிழர்கள் நன்றாய் அருந்துவார்கள் என்று நம்புகிறேன்.

# முன்னுரை

**உலகம் பலவிதம்!**

ஏழைக் காய்கறிக் கூடைக்காரி, பணக்கார மிஸஸ் பன், கர்நாடக சானுப் பாட்டி, எத்தனையோ ரகமான விருந்தாளிகள், சமையற்காரர்கள், பெற்ருேர்கள், சொந்த வீட்டுக்காரர்கள் முதலியோர் அடங்கியது இவ்வுலகம்.

இப்படிப் பலவிதமான உலகத்தின் சில விதங்களைப் பற்றி, குழந்தை தத்தி நடப்பது போல், ஏதோ நான் எழுத ஆரம்பித்தேன்.

'பேஷ்! நன்ருய் நடக்கிருய்!' என்று முதலில் என்னை உற்சாகப்படுத்தியவர் ஸ்ரீமான் பி. ஸ்ரீ. வேறொரு பெரியார், நடக்கப் பழகும் குழந்தைக்கு நடைவண்டி ஒன்றைக் கொடுத்தார். அவர்தான் தமிழுக்குத் தொண்டு புரிவதையே தமது வாழ்க்கையின் நோக்கமாய்க் கொண்ட ஸ்ரீமான் டி. கே. சி. இவ்விதம் உதவி புரிந்த பெரியார்களைப் பார்த்துக் குழந்தைக்கு என்ன சொல்லத் தெரியும்? அதைத்தான் எனக்கும் சொல்லத் தெரிகிறது.

வண்டி என்னமோ நடைவண்டிதான், ஆனல் ஆசை மாத்திரம் உலகம் முழுவதையும் சுற்றி வரவேண்டுமென்பது. நடைவண்டியைப் பிடித்து நடக்கும் குழந்தை தட்டித் தடுமாறித்தான் நடக்கும். இடறி விழுந்தாலும், 'பாவம் குழந்தை!' என்று சொல்லித் தூக்கிவிடவில்லையா? அதே விதமான அன்பையும் ஆதரவையும் தமிழறிஞர்கள் என்னிடம் காட்டுவார்களென்று நம்புகிறேன்.

இப்புத்தகத்தில் அடங்கிய கட்டுரைகளும் கதைகளும் அவ்வப்போது வெவ்வேறு பத்திரிகைகளில் வெளிவந்தவை. அவைகளை முதலில் தம் பத்திரிகைகளில் வெளியிட்டுதவிய அப்பத்திரிகை ஆசிரியர்களுக்கு என் வந்தனத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

செங்கல்பட்டு
*16-2-1942*

**கே. ஆர். ஜயலக்ஷ்மி**

# பொருளடக்கம்


| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | நவராத்திரிக் கொலு | | - | | பக்கம் 1 |
| 2. | குழந்தைகள் | - | - | - | 7 |
| 3. | விருந்தாளி | - | - | - | 21 |
| 4. | பத்திரிகை | - | - | - | 30 |
| 5. | மறதி - | - | - | - | 38 |
| 6. | சம்பாஷணை | - | - | - | 43 |
| 7. | இரவல் - | - | - | - | 50 |
| 8. | காய்கறிக் கூடைக்காரி | | - | - | 56 |
| 9. | சமையற்காரன் | - | - | - | 62 |
| 10. | ஸங்கீத ரஸிகன் | - | - | - | 69 |
| 11. | குடிக்கூலி | - | - | - | 75 |
| 12. | சொந்த வீடு | - | - | - | 82 |
| 13. | மிஸஸ் பன் | - | - | - | 89 |
| 14. | ரகசியம் - | - | - | - | 100 |
| 15. | மேல்விலாசம் | - | - | - | 106 |
| 16. | காமு - | - | - | - | 113 |
| 17. | காபி - | - | - | - | 121 |


குறிப்பு :—இந் நூலில் வரும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்கள் ; சம்பவங்களும் கற்பனையே.

3466

# 1. நவராத்திரிக் கொலு

வெவ்வேறு மாகாணங்களில் நவராத்திரியை வெவ்வேறு விதமாய்க் கொண்டாடுகிறார்கள்; ஆனால் நமது தமிழ்நாடு கலைகளில் சிறந்ததல்லவா? ஆகையால் தான் 'கொலு' வைத்து நாம் நவராத்திரியைக் கொண் டாடுகிறோம்.

கொலுவின் மூன்று அம்சங்கள்-வைப்பது, அழைப் பது, பார்ப்பது. ஒவ்வொன்றிலும் ரஸமான விஷயங் கள் இருக்கின்றன.

முதலாவது, கொலு வைக்கும் பத்து நாளைக்கும்-ஏன், அதற்கும் பத்து நாள் முன்பிருந்துகூட - வீட்டில் யஜமானனைவிட யஜமானிக்குத்தான் செல்வாக்கு அதி கம். கேட்ட பணத்தை யஜமான் கொடுப்பதுடன் சரி, மற்ற விஷயங்களெல்லாம் யஜமானியின் சட்ட திட்டப் படித்தான் நடக்கவேண்டும்.

கொலுப் பார்க்க வந்தவர்களை யெல்லாம் அனுப்பி விட்டு இனிமேல் யாரும் பார்க்க வரமாட்டார்களென்று நிச்சயமான பிறகுதான் சாப்பாட்டுக்கு இலை போடப் படும். தனக்கும் குழந்தைகளுக்கும் வேண்டிய உடை களை யஜமானி எடுத்துக்கொண்டு புருஷன் உடைகளைக் கொலுத் தட்டின்கீழ் பெட்டிக்குள் பத்திரமாய் வைத்து

விட்டாலும் புருஷன் சும்மா இருக்கவேண்டியதுதான். சமூகச் சீர்திருத்தக்காரர்களில் சிலர் ஸ்திரீகளுக்குச் சுதந்திரம் இல்லையென்கிறார்களே, அவர்கள் வீட்டில் கொலு வைப்பதில்லை போல் தோன்றுகிறது!

கொலு வைப்பதென்றால், சாமானியமான விஷயமா? எவ்வளவு தீவிரமாயும் நுட்பமாயும் ஆலோசிக்க வேண்டியிருக்கிறது!

எத்தனை படிகள் போடவேண்டும்? படியும் மிஞ்சி விடக் கூடாது; பொம்மையும் மிஞ்சிவிடக் கூடாது. இது முதல் கேள்வி. இதற்கு மேல் படிப்படியாய் எத்தனை பிரச்னைகள்! போலீஸ்காரன் பொம்மைகளை மேல் தட்டில் வைப்பதா, கீழ்த் தட்டில் வைப்பதா? செட்டியாரை எங்கே வைத்தால் கொலுவின் அழகு அதிகப்படும்? குளத்தின் ஆழம் எவ்வளவு இருக்க வேண்டும்? குளத்தில் ஆமையை மிதக்கவிடலாமா, கூடாதா? அவர்கள் வீட்டில் போன வருஷம் வைத்திருந்த 'லங்கா தஹனம்' ஸெட் எங்கே வாங்கினார்களோ, தெரியவில்லையே! இவ்விதம் எல்லையில்லாத விஷயங்கள் தீர்மானிக்க வேண்டியவையாய் இருக்கின்றன. சாவதானமாய் யோசிக்க நாளாவது இருக்கிறதா? அதுவும் இல்லை; மஹாலய அமாவாசை யன்று கொலு வைத்து ஆகிவிட வேண்டும்.

இவ்வளவு யோசனை செய்து வைத்தும் ஏதாவதொரு கோளாறு வந்துவிடுகிறது. குளம் கொஞ்சம் மெதுவாய் ஒழுக ஆரம்பிக்கிறது; மண் மலை சிறிது சிறிதாய்ச் சரிய ஆரம்பிக்கிறது. கொலுப் பார்க்க வந்தவர்

களிடம் வாய் மாத்திரம் பேசுகிறதே யொழிய, மனம் முழுவதும் குளத்திலும் மலையிலுமாய் இருக்கிறது.

பொம்மைக்குப் பொம்மை 'எலக்ட்ரிக் பல்ப்' மாட்டினால் வெகு அழகாய்த்தான் இருக்கிறது. ஆனால், மின்சார தேவதையின் மனம் சிறிது கோணிவிட்டால், திடீரென்று ஒரே இருள் மயம்; 'எலக்ட்ரிஷனு'க்கு உடனே டெலிபோன்; இல்லாவிட்டால் ஆள்மேல் ஆள் தூது; அந்தச் சமயத்திற்கென்று பெரிய மனிதர்கள் அப்போதுதான் கொலுப் பார்க்க வருவார்கள்; மூலையில் ஒரு கிழவி, 'அப்பவே சொன்னேனே! இந்த எலக்கட்ரீ வியாபார மெல்லாம் வேண்டாம்னு! கேட்டையா!' என்று ஆரம்பிப்பாள். குழந்தை, காதுத் திருகைக் காணேமென்று சொல்லிக்கொண்டு வரும். வீட்டுப் பூனை கொலுத் தட்டின் கீழ் எலியைப் பிடிக்க அப்பொழுதுதான் காலின் மேல் விழுந்தடித்துக்கொண்டு ஓடும்!

அரை மணி கழித்து 'எலக்ட்ரிஷன்' வருவான்; மேலும் கீழும் ஏறி இறங்குவான்; கம்பிகளை முன்னும் பின்னும் இழுப்பான். கொலுவில் மடமடவென்று இருட்டில் ஒரு சப்தம். வெளிச்சம் வந்த பிறகு பார்த்தால் படியிலிருந்து தரையில் தலைகீழாய் விழுந்த பொம்மைகள் ஒன்பது; படிக்குள்ளேயே விழுந்து கால் ஒடிந்தது எட்டு; கை முறிந்தது ஆறு; கழுத்து பிண்டது நான்கு; சில்லறை அடிபட்ட கேஸ்"கள் 22!

இவ்வளவு பிரயாசைப்பட்டுக் கொலு வைப்பது எதற்காக? அயலார் வந்து பார்த்து மெச்சிக்கொள்வதற்காகத்தானே? ஆகையால் கொலு வைப்பது மாத்

திரம் பெரிதல்ல; கொலு சிறியதாய் இருந்தாலும் அழைப்புப் பெரியதாய் இருக்கவேண்டும்.

வீட்டுக்கு வீடு போய் அழைப்பது கர்நாடக ஸம்பிரதாயம். சுத்தமாய் அச்சடித்து அழைப்புக் கடிதங்கள் போடுவதுதான் நாகரிகம். இந்த வருஷம் கொஞ்சம் பழைய வழக்கத்தை அனுசரிக்கலாமென்று ஆரம்பித்தேன். பின்புதான் தெரிந்தது கஷ்டம். வீடு வீடாய் ஏறியிறங்கும் கஷ்டம் ஒரு புறம் இருக்கட்டும். அதற்குப் பதிலாய் என் புது மாதிரிப் புடைவையை ஒரே நாளில் பலருக்கும் காண்பித்து பிரமிக்கச் செய்யும் திருப்தி இருக்கிறது. பிரதானமான கஷ்டம் வேறு. யார் யார் எங்கள் வீட்டுக் கொலுவை வந்து பார்க்க வேண்டுமென்று ஆவலாயிருந்தேனோ, அவ்வளவு பேர்களும் ஒருவர் பாக்கி இல்லாமல் நான் வீட்டில் இல்லாத சமயத்தில் வந்துவிட்டுப் போய்விட்டார்களென்றால், எனக்கு எப்படி இருக்கும்? நீங்களே யோசித்துப் பாருங்கள்!

ஆகையால் நவராத்திரிக்கு அழைப்புக் கடிதம் போடுவது போல் புத்திசாலித்தனம் வேறு எதுவுமில்லை. அதிலும் இரண்டொரு தேதிகளைக் குறிப்பிட்டு அன்று மாத்திரம் வந்தால் போதுமென்று தெரிவிப்பது மகா புத்திசாலித்தனம்.

கொலுப் பார்ப்பதிலும் சாமர்த்தியம் இருக்கிறது. பட்டிக்காட்டான் மிட்டாய்க் கடையைப் பார்ப்பது போல் பிரமித்து நின்றுவிடக் கூடாது; ஊமையைப் போல் பார்த்துவிட்டு ஒன்றும் பேசாமலும் வரக் கூடாது; அளவறிந்து, இடமறிந்து, வீட்டார்கள்

நோக்கமறிந்து சமயோசிதமாய் இரண்டொரு வார்த்தை புகழ்ச்சியாகச் சொல்வது ஒரு தனிச் சாமர்த்தியம். ஒரு வீட்டில் கொலுப் பார்க்கப் போயிருந்தேன். பொம்மைகளைச் சிறிய சிறிய கும்பல்களாய்ச் சேர்த்து வைத்திருந்தார்கள். ஒவ்வொன்றும் ஒரு புராணக் கதை, சரித்திரக் கதை, அல்லது நவ நாகரிக வாழ்க்கையின் அம்சம் இதைக் காட்டுவதாக வீட்டுக்காரரின் அபிப்பிராயம்.

ஒரு மரம்; அதன் கிளையில் ஒரு செலுலாய்ட் பொம்மை; அதன் கையில் ஓர் அட்டைக் கத்தி. இது காளிதாஸனின் ஆதி சரித்திரம். அதாவது, வீட்டு அம்மாமி அப்படிச் சொன்னாள். அது வேறொன்றாய் இருக்கக் கூடாதோ என்று நீங்கள் கேட்கலாம். நான் அதற்குப் பதிலாக உங்களை ஒன்று கேட்கிறேன்: பகுத்தறிவுப் போட்டியின் நிபந்தனைகளை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா? அதில் முடிவான தீர்மானம் யாருடையது? பத்திராதிபருடையதல்லவா? அது மாதிரிதான் இவ் விஷயத்திலும்.

அம்மாமி ஒவ்வொரு பொம்மைக் கூட்டத்தின் உட்கருத்தையும் தெரிவித்துக்கொண்டே வந்தாள். நான் என் ஆச்சரியத்தையும் சந்தோஷத்தையும் தக்கபடி வெளிப்படுத்திக்கொண்டே வந்தேன்.

ஓரிடத்திற்கு வந்தவுடன் அம்மாமி தயங்கினாள். பொம்மைகள் ஒன்றின் மேல் ஒன்றாய் விழுந்து கால் உடைந்தும் கை ஒடிந்தும் கிடந்தன. மின்சார விளக்கு அணைந்து கலவரமடைந்த பாகங்களில் இந்தப் பாகம் இன்னம் சீர்திருத்தப்படவில்லை போலும்!

பொம்மைகள் கலவரமாய்க் கிடந்தது போல் அம்மாமி முகம் சிறிது கலவரம் அடைய ஆரம்பித்தது. 'ஏன் அம்மாமி, இது ஜர்மன் சண்டைதானே? வெகு அழகாய் இருக்கிறது! விட்டத்திலிருந்து இரண்டு அட்டை ஏரோப்பிளேனை இதற்கு நேராய்த் தொங்க விட்டிருந்தால் இன்னும் அழகாய் இருக்கும்!' என்று வெகு யதார்த்தமான பாவனையில் சொன்னேன். அம்மாமிக்குப் பரம சந்தோஷம். முகம் மலர்ந்தது; என் சூக்ஷ்ம புத்தியை மெச்சிக்கொண்டாள். அதிகம் சொல்வானேன்? அன்று முதல் அம்மாமியும் நானும் பிராண சிநேகிதம்!

இப்படியாவது கொலுப் பார்க்கப் போகவேண்டுமா என்று கேட்பீர்கள்; போகத்தான் வேண்டும். கொலுப் பார்க்கப் போவதில் எவ்வளவோ நன்மை இருக்கிறது.

முதலாவது, அடுத்த வருஷம் நம் வீட்டுக் கொலுவிற்கு இன்னும் அழகு அதிகம் செய்வது (செலவு அதிகம் செய்வதுகூட) எப்படி யென்பது நான்கு வீடுகளுக்குப் போய்ப் பார்த்தால்தானே தெரியும்? தவிரப் புது சிநேகங்கள் பிடிக்கச் சந்தர்ப்பங்கள் கிடைக்கின்றன. 'லேடீஸ் கிளப்பு'களில் சேரச் சக்தியற்ற ஸ்திரீகளுக்கு வருஷத்தில் பத்து நாளைக்காவது நம் பெரியோர்கள் ஏற்படுத்திய 'லேடீஸ் கிளப்பு' அல்லவா நவராத்திரி விழா?

எல்லாவற்றிற்கும் மேலாக வீட்டிற்கு வீடு பிரவேசக் கட்டணம் இல்லாத ஒரு பொருட்காட்சிச் சாலை. 'எக்ஸிபிஷனுக்கு நாலணாச் செலவு செய்தால் இன்னும் எவ்வளவோ பார்க்கலாமே! அதுகூடச் செலவில்லாமல்

கோயில் கடைக்குப் போனால் அளவில்லாத பொம்மை களைப் பார்த்துவிட்டு வரலாமே!' என்று கேட்கலாம்.

இது ஒரு கேள்வியாகுமா? இப்படி யெல்லாம் நினைக்க ஆரம்பித்துவிட்டால் அப்புறம் கொலு ஏது? அழைப்பு ஏது? 'லேடீஸ் கிளப்பு' ஏது? தவிர, அழகான வஸ்துக்கள் உலகத்தில் எவ்வளவு இருந்தாலும் நமக்குச் சொந்தமா யிருந்தால்தான் நமக்குத் திருப்தி; நமக்குப் பெருமை.

இந்தக் காலத்தில் கட்டுரைகளுக்குப் பஞ்சமா? எல்லையில்லாமல், படிக்கப் படிக்க எவ்வளவு அழகாக இருக்கின்றன! அப்படி யிருந்தும் நான் சொந்தத்தில் ஒரு கட்டுரை எழுத ஆசைப்படவில்லையா? அதுபோலத் தான் கொலு வைப்பதும்.

## 2. குழந்தைகள்

குழந்தைகளால் அடையக்கூடிய இன்பங்களைப் பற்றிப் புலவர்கள் பாடிப் பாடி ஓய்ந்து போயிருக்கிறார் கள். ஆனால், நம்மால் குழந்தைகள் படும் பாட்டையும், குழந்தைகளால் நாம் படும் பாட்டையும் யார் பாடு வது? வசனத்திலாவது நான் எழுதிப் பார்க்கிறேன்.

ஒரு நாள் என் அகத்துக்காரர், எங்கள் தூர உற வினர் ஒருவர் வீட்டில் குழந்தை பிறந்திருப்பதாய்த் தெரிவித்தார். உடனே அவருக்கும் எனக்கும் பலவித மான யோசனைகள்.

முதலாவது, நான் போய்க் குழந்தையைப் பார்க்க வேண்டுமா? அப்படியானால் குழந்தையை வெறும்

கையோடு பார்க்கக்கூடாதே ! ஒரு ரூபாயைக் குழந்தை கையில் வைத்துவிட்டு, எடுத்துக்கொண்டால்போதுமா? அல்லது, தங்கக் காசாய்க் கால் ஸவரனுவது வைக்க வேணுமா ? இல்லாவிட்டால், ஒரு வம்புமில்லாமல் சொக்காய் ஒன்று தைத்துக்கொண்டு போய்விடலாமா? சொக்காயானுல் என்ன விலையில் வாங்கலாம் ?...?...?

கடைசியாய் ஒருவிதமான தீர்மானத்திற்கு வந்து, நடுத்தரமான விலையில் ஒரு சொக்காய் தைத்துக் கொண்டு, நடு மத்தியானத்தில் குழந்தையைப் பார்க்கப் புறப்பட்டேன்.

வண்டியில் போகும்பொழுது ஒரு சந்தேகம் உதித்துவிட்டது. குழந்தை ஆணு, பெண்ணு? இது தெரியாமல் என்ன செய்வது ? போனவுடன், 'பேரன் பிறந்திருக்கிருனு ?' அல்லது, 'பேத்தி பிறந்திருக்கிருளா ?' என்று குழந்தையின் பாட்டியை முகமன் கூறி விசாரிக்கவேண்டுமே ! ஒன்றுக்கொன்று அசந்தர்ப்பமாய்க் கேட்டு வைத்தால், பாட்டி, 'என்ன அகம்பாவமடி, இவளுக்கு ! எனக்குப் பிறந்திருப்பது பேரனு, பேத்தியா என்றுகூடத் தெரிந்துகொள்ளாமல், ஒப்புக்கு இவள் வந்து விசாரிக்காவிட்டால், யார் அழுதார்கள் ?' என்று மறுநாள் திண்ணைப் பிரசங்கம் ஆரம்பித்துவிடுவாளே ! என்ன செய்கிறது ?

இந்தச் சந்தேகம் நிவர்த்தி ஆவதற்குள் வண்டி அவர்கள் வீடு போய்ச் சேர்ந்துவிட்டது. குழந்தை ஆணு பெண்ணு என்பதை அக்கம்பக்கத்திலாவது, ஜவான், சமையற்காரன், வேலைக்காரி ஆகிய எவரிடத்திலாவது விசாரித்துத் தெரிந்துகொள்ளக்கூட

வழியில்லாமல், குழந்தையின் பாட்டி வாசலிலேயே நின்றுகொண்டிருந்தாள். 'வாடி, அம்மா! வா!' என்று எதிர் கூறி என்னை அழைத்தாள்.

குழந்தையின் திணை, பால் ஒன்றும் தெரியாமல், பாட்டியிடம் எப்படிப் பேச்சை ஆரம்பிப்பது? கொஞ்சம் அசடுவழிய நேர்ந்தது. கடைசியில் சாமர்த்திய மாய், 'பாட்டி! குழந்தை யார் ஜாடை?' என்று கேட்டேன்.

'யார் ஜாடையாய் இருந்தால் என்ன? கிளி, ஸ்வர்ண விக்ரஹம், பட்டுக் குஞ்சலம் மாதிரி இருக்கு என் கண்ணு!' என்று சொல்லிக்கொண்டே பாட்டி உத்ஸாகத்துடன் என்னை உள்ளே அழைத்துச் சென்றாள்.

என்னுடைய ஸந்தேக நிவர்த்திக்கு வழி இல்லை. கிளியில் ஆணும் உண்டு, பெண்ணும் உண்டு; ஸ்வர்ண விக்கிரகம் சுவாமியாயும் இருக்கலாம், அம்மனுயும் இருக்கலாம்; பட்டுக் குஞ்சலம் கேவலம் அஃறிணை; கண் ஓர் அவயவம். பாட்டியின் வர்ணனையிலிருந்து ஆணு, பெண்ணு என்பதை எப்படி நிச்சயிப்பது?

பாட்டி என்னைக் கூடத்தில் உட்கார வைத்து விட்டுத் தன் பெண்ணை அழைத்துவர உள்ளே சென்றாள். கூடத்தின் ஓர் ஓரத்தில் குழந்தை தொட்டிலில் தூங்கிக் கொண்டிருந்தது. என் சந்தேகத்தை நீக்கிக் கொள்ள இதுதான் சமயமென்று தொட்டிலிடம் சென்றேன். அது அவ்வளவு சுலபமான காரியமா? 'கத்திரி வெயில்' காலமாயிருந்தும், குழந்தைக்குக் கழுத்து முதல் கால் வரையில் நாகரிகமாய் அங்கி உடுத்

திப் படுக்க வைத்திருந்தார்கள். அதன் மேல் ஒரு ஸில்க் போர்வை.

பாட்டி வந்துவிட்டாள்; 'அம்மாளு (அதாவது பாட்டியின் பெண், குழந்தையின் தாய்) இதோ வந்து விடுவாள்' என்று தெரிவித்தாள். நான் ஏமாற்றத் துடன் பாட்டியின் பக்கத்தில் உட்கார்ந்தேன்.

'என்ன பெயர் வைத்திருக்கிறீர்கள்?' என்று (துப்பு) விசாரித்தேன். குழந்தையின் பெயர் தெரிந்து விட்டால், ஆணு, பெண்ணு? — என்று கண்டுபிடித்து விடலாமென்று என் எண்ணம்.

'சுந்தரம்' என்ருள் பாட்டி. என் தந்திரம் பய னற்றுப் போயிற்று.

ஏதாவது சம்பாஷணை நடத்த வேணுமேயென்று 'பிரசவம் சுகப் பிரசவம்தானே?' என்றேன். மகா மூடத்தனம்! பின்னுல் தெரிந்தது.

தன் பெண்ணுக்கு மசக்கை ஆரம்பித்தது முதல், பாட்டி சரித்திரத்தைத் தொடங்கி, பூச்சூட்டல், சீமந்த விமரிசைகளின் விவரங்கள் ஒன்றுவிடாமல் சொல்லி, கர்ப்பத்தின்போது எந்தெந்த டாக்டர்கள் பார்த் தார்கள், என்னென்ன மருந்துகள் கொடுத்தார்கள் என்பவற்றைச் சாங்கோபாங்கமாக வர்ணிக்க ஆரம் பித்துவிட்டாள்.

எனக்குத் தலையில் கிறுகிறுப்பு உண்டாய்விட்டது. 'இன்னும் யாராவது வரமாட்டார்களா?' என்று வாசல் பக்கம் திரும்பித் திரும்பிப் பார்த்தேன். கடைசியில் பால்காரன் கூப்பிடும் சத்தம் கேட்டது. பாட்டி பால் வாங்கப் போவாளென்று ஆவலுடன் எதிர்பார்த்தேன்.

பாட்டியோ, கூடத்திலிருந்தபடியே அம்மாளுவைப் பால் வாங்கச் சொல்லிவிட்டுச் சரித்திரத்தை விட்ட இடத்திலிருந்து தொடர்ந்தாள்.

முடிவில் தப்பிக்கும்பொருட்டு, பெண் அம்மாளு இன்னும் வராததைப்பற்றிப் பாட்டிக்கு ஞாபக மூட்டினேன். 'இதோ, அழைத்து வருகிறேன்' என்று பாட்டி நல்ல வேளையாய் எழுந்திருந்து உள்ளே போனாள்.

'ஆணா, பெண்ணா?' என்னும் கேள்வி இன்னும் என் மனத்தில் உறுத்திக்கொண்டே யிருந்தது. இவ்வளவு நாழிகை இருந்துவிட்டு இதைத் தெரிந்துகொள்ளாமல் போவதா என்னும் பிடிவாதமும் கொஞ்சம். பாட்டி தலை மறைந்தவுடன் பரபரப்புடன் தொட்டிலிடம் போனேன்.

எறும்பு, மூட்டைப் பூச்சி ஏதாவது கடித்துவிட்டதோ என்னவோ? குழந்தை 'வீல்' என்று ஒரு கத்தல் போட்டது.

உள்ளே குழந்தையைப் பெற்றவள் பேசும் குரல் என் காதில் விழுந்தது. 'என்ன அம்மா! உனக்குக் கொஞ்சம்கூட ஒண்ணும் தெரியலே! கண்டவாளைக் கூடத்திலே விட்டுவிட்டுக் குழந்தையைத் தனியாய்—' என்று மகா கோபத்துடன் சொல்லிக்கொண்டு ஓடி வந்த அம்மாளு, என்னைப் பார்த்தவுடன் தான் சொல்ல வந்ததை 'பிரேக்' போட்டுக்கொண்டு, குழந்தையை வெகு அருமையுடன் வாரி எடுத்துக்கொண்டாள்.

'கண்டவர்கள்' என்னும் கோஷ்டியில் சேர்க்கப் பட்டதைக் கேட்டவுடன் எனக்கு மனதுக்கு ஒரு

சலிப்பு வந்துவிட்டது. குழந்தை பிரமாதமாய் அழுது கொண்டிருந்தது. பாட்டி வந்தாள். 'பாட்டி! நான் போய் வருகிறேன், அவர் ஆபீஸிலிருந்து வந்துவிடுவார். ஒரு தட்டு கொண்டுவாங்கோ' என்றேன். தட்டில் சொக்காயை வைத்தேன். 'என் கண்மணிக்குப் போடுங்கோ! எடுத்துக்கொள்ளலாமென்றால், என்ன இருந்தாலும் குழந்தைதானே? கொஞ்சம் வேற்றுமுகமாயிருக்கு' என்று சொல்லிக்கொண்டே வெளியில் வந்து வண்டியிலேறி வீடு வந்து சேர்ந்துவிட்டேன்.

சாயங்காலம் ஆபீஸிலிருந்து வந்தவுடன், 'என்ன! குழந்தையைப் பார்த்தாயா? எப்படி இருக்கு?' என்றார் என் புருஷர்.

'கிளி! சுவர்ண விக்கிரகம்!'

'ஆணு, பெண்ணு?'

'இதோ வருகிறேன்' என்று உள்ளே போய் விட்டேன்.

* * *

குழந்தைக்குக் கொஞ்சம் பேச்சு வருவதாய் இருந்து விட்டால், அப்போது அனுபவம் வேறு தினுசு.

அஞ்சாவது வயசில் 'காகா' 'மாமா' என்று பேச ஆரம்பித்ததா யிருக்கும். குழந்தையின் தாயார், பாட்டி இவர்களுக்கும் இது தெரியாததில்லை. ஆனால், வீட்டுகது யாராவது வந்துவிட்டால், என்ன தடபுடல்! ஆண் குழந்தையாயிருந்தால, 'பாப்பா! நீ என்ன வேலைக்குப் போப்பறே?' என்று ஒரு கேள்வி போட்டுப் பாட்டி குழந்தையின் சமர்த்தை வெளிப்படுத்த முயலுவாள். 'சொல்லுடா, கண்ணூ! நீ என்ன உத்தியோகம் பண்

ணப்போறே சொல்லு' என்று பக்கவாத்தியம் வாசிப்பாள் குழந்தையின் தாயார்.

குழந்தையின் முகத்தைப் பார்த்தால் பரிதாபமாயிருக்கும். பாவம், அதற்கு ஒன்றும் தெரியாது. கடைசியில் இவர்கள் பண்ணும் உபத்திரவம் பொறுக்க முடியாமல், அன்றைக்கு வீட்டில் செய்த டிபனின் பெயரை ஞாபகம் வைத்துக்கொண்டு, 'பஜ்ஜீ' என்று அழ ஆரம்பிக்கும். உடனே பாட்டி 'ஜஜ்ஜியா? நீ ஜட்ஜு வேலை பண்ணப் போறையா!' என்று சீராட்டிக் குழந்தையை வாரி அணைத்துக்கொண்டு, 'இன்னம் மழலைச் சொல். "ஜ" வாயில் வருகிறதில்லை' என்று நமக்கு வியாக்கியானம் செய்வாள். குழந்தை அதி மேதாவி என்பதை நாம் அறிந்துகொண்ட பாவனையாய்ச் சந்தோஷக் குறியை உடனே முகத்தில் வரவழைத்துக் கொள்ளவேண்டியது நம் கடமை.

அநேகமாய்க் குழந்தை இருக்கும் எந்த வீட்டுக்குள் போனாலும், 'கண்ணா! மாமிக்கு "குட் மார்னிங்" சொல்லு,' 'எங்கே ஷேக்ஹாண்ட் கொடு, பார்ப்போம்!', 'உன் பேரென்ன சொல்லு'— இதே பாடம் தான். ஒரு வீட்டுக்குள் ஒரு நாள் பத்துப் பதினைந்து புது மனிதர்கள் ஒருவர் பின் ஒருவராய் வந்துவிட்டுப் போனால், குழந்தைகளுக்கு எவ்வளவு கஷ்டம், யோசித்துப் பாருங்கள்!

* * *

என்னுடைய ஒன்றுவிட்ட அத்தங்காரின் பெண், ஒரு நாள் தன் குழந்தையுடன் என் வீட்டுக்கு வந்திருந்தாள். கூட அவள் அத்தைப் பாட்டியும் வந்திருந்தாள். அத்தைப் பாட்டி அசல் நாட்டுப்புறம். நல்ல

புத்திசாலியாய்த் தோன்றிய குழந்தை அவளிடமே உட்கார்ந்திருந்தது. கொஞ்ச நேரம் ஏதோ பேசிக்கொண்டிருந்த பிறகு குழந்தையின் சாமர்த்திய விளம்பரம் ஆரம்பமாயிற்று. இதை நான் எதிர்பார்த்துச் சித்தமாகவே யிருந்தேன்.

'அம்மங்காவுக்கு உன் பேரென்ன சொல்லு, பார்ப்போம்' என்று கிரமப்பிரகாரம் ஆரம்பித்தாள் பாட்டி.

'எத்திம்மி' என்று மழலைச் சொல்லில் குழந்தை பதில் சொன்னதைக் கேட்க, உண்மையாகவே ஆனந்தமாயிருந்தது.

'உன் அப்பா பேர்?'

'தாஜ கோபா.'

'உன் அம்மா பேர்?'

"கல்லாணி."

இரண்டு வயசுக் குழந்தை முத்து முத்தாய்ப் பேசுவது வெகு அழகாய் இருந்தது. அத்தைப் பாட்டி மேலும் கேள்விகள் கேட்க ஆரம்பித்தாள். 'உன் அப்பாவை நீ எப்படிக் கூப்பிடுவே?'

'பதுவா!'

'உன் அம்மாவே?'

'மொத்தச்சி'!

அத்தைப் பாட்டி அப்படியே ஆனந்த சாகரத்தில் அமிழ்ந்துவிட்டாள். எனக்கோ, 'நல்ல குழந்தையை இப்படி நாசம் செய்கிறார்களே!' என்னும் துக்கம் நெஞ்சை அடைத்தது.

* * *

அதிக நெருக்கமில்லாத பந்துக்கள் தங்கள் குழந்தைகளுடன் வீட்டுக்கு வந்துவிட்டால், அப்போது வேறு விசித்திரமாயிருக்கும்.

ஒவ்வொரு குழந்தைக்கும் ' இது பிடிக்கும், இது பிடிக்காது, இந்த இந்த ஆகாரங்கள், இந்த இந்த டாக்டர்கள் சொல்லிய பிரகாரம் கொடுக்கப்படுகின்றன ' என்ற விஷயங்களுக்கெல்லாம் முதலில் ஜாபிதா கொடுக்கப்படும். வீட்டுக்கு வந்து குறைந்தது மூன்று நாள்கள் வரையில் ஒவ்வொரு குழந்தையும் தங்கள் ஊரில் செய்து காட்டிய லீலைகளைப்பற்றியும், அவைகளைக் கண்டு மகிழ்ந்தவர்களுடைய சரித்திரங்களைப்பற்றியும் பிரசங்கம் நடக்கும்.

குழந்தைகள் சாதுவாக இருந்தாலாவது பாதகமில்லை. ஒன்று கூரையின் மேல் ஏறிக் கீழே விழும். ஒன்று ஊஞ்சல் பலகையிலிருந்து ' பல்டி ' அடிக்கும். மற்ருென்று வீட்டிலுள்ள கண்ணுடிச் சாமான்களை ஒன்று பாக்கியில்லாமல் உடைத்து வைக்கும். புஸ்தகங்கள், மோட்டார்கார் ஹார்ன், சைகிள் மணி, கடிகாரம், கிராமபோன் முதலியவைகளுக்குக் குழந்தைகள் வந்தது முதல் நித்யகண்டம்தான். அவ்வளவு செல்வம்! நாம் சொல்லவும் முடியாமல், மெல்லவும் முடியாமல் தவிக்கவேண்டும்.

நாகபூரிலிருந்து என்னுடைய இளைய மாமனுருடைய பேத்தி என் வீட்டுக்கு வந்திருந்தாள். கூட, நான்கு வயதில் ஒரு பெண் குழந்தை. அதன் பெயர் வனராணியாம். குழந்தை நல்ல புத்திசாலி ; ஆனுல் ரொம்பவும் பலஹீனம் ; நடக்கும்போதே தடுக்கி விழுந்துவிடும்.

இப்படிப்பட்ட குழந்தையைத் தன் பெருமைக்காகத் தாயார் ஓயாது தொந்தரவு செய்தால், என்ன

பரிதாபம்! குழந்தைக்கு ஹிந்தி பாஷை தெரியுமாம். நாகபூரிலேயே பிறந்து வளர்ந்து கொண்டிருக்கும் போது, இது என்ன ஆச்சரியமோ, தெரியவில்லை. குழந்தையின் தாயார் குழந்தையின் பக்கத்தில் யாராவது இருக்கிறார்களா என்று கவனித்துக்கொண்டே யிருப்பாள். யாரையாவது கண்டுவிட்டால் போதும்; பிடித்தது அனர்த்தம். குழந்தையுடன் ஹிந்தியில் பேச ஆரம்பித்து விடுவாள். குழந்தை ஏதோ பதில் சொல்லும். முதலாவது, பாஷையே நமக்குத் தெரியாது. அதில் மழலைச் சொல்லும் சேர்ந்துவிட்டால், என்ன புரிகிறது ?

ஒரு வார்த்தை நாளடைவில் தெரிந்தது. யாராவது புதிதாய் வந்தால் தாயார் குழந்தைக்கு உடனே ஜாடை காண்பிப்பாள் ; இரகசியமாய்ச் சில சமயம் சிறுகக் கிள்ளுவாள். உடனே வனராணி எழுந்திருந்து கையைக் கூப்பிக்கொண்டு கண்ணில் ஜலம் ததும்ப, 'நமஸ்தே' என்று ஈன ஸ்வரத்தில் சொல்லும்.

ஒரு நாள் டாக்டர் வீட்டுக்குப் போகவேண்டி யிருந்தது. வனராணியும் தாயாரும் கூட வந்தார்கள். போய்த் திரும்பி வந்தோம். வனராணியின் தாயார் பூரித்துக்கொண்டு என் புருஷரிடம் ஆரம்பித்துவிட்டாள் : 'இன்றைக்கு டாக்டர் வீட்டில் என்ன நடந்தது தெரியுமா ? டாக்டர் அப்படிப் போகும்போதே, வனராணி "நமஸ்தே" என்றாள். உடனே அவர் குனிந்து "நமஸ்தே" என்று பதில்சொல்லிவிட்டு, ஷேக்ஹாண்ட் பண்ணிவிட்டுப் போனார்.' உடனே அவள் என் பக்கம் திரும்பி, 'இன்னியிலிருந்து வனராணியாலே டாக்டருக்கு உன்னிடத்திலே அதிக மதிப்பென்று வைத்துக்

கொள்' என்று ஒரு போடு போட்டாள். நான் அப்படியே பிரமித்துப் போய்விட்டேன். உண்மை தெரிந்தால் நீங்களும் பிரமிக்கத்தான் செய்வீர்கள்.

உண்மை என்னவென்ருல், டாக்டர் நாங்கள் இருந்த பக்கம் வருவதற்குப் பத்து நிமிஷத்திற்கு முன்பிருந்தே குழந்தைக்கு 'நமஸ்தே' பாடம் ஆரம்பம். புதிய இடத்தில் அவ்வளவு ஜனங்களைப் பார்த்துப் பயந்து போயிருக்கும் குழந்தை லேசில் மசிந்து வருகிறதா? 'சொல்லம்மா' என்று தட்டிக்கொடுப்பது, 'சொன்னுல் பிஸ்கெட் தருவே' னென்று ஆசைகாண்பிப்பது, 'சமர்த்தல்லவா நீ?' என்று ஸ்தோத்திரம் செய்வது, 'சொல்லுகிருயா? மாட்டாயா?' என்று கண்ணுல் உருட்டி மிரட்டுவது முதலிய ஸாம தான பேத தண்ட உபாயங்களால், குழந்தை ஒருவாருய் வழிக்குக் கொண்டுவரப் பட்டது. அதற்குள் டாக்டர் நெருங்கிவிட்டார். கனைப்பது போல் பாவனை செய்து, அதன் நடுவில் ஒரு 'உம்' கொடுத்தாள் தாயார். வனராணி பாதி அழுத குரலில் ஏதோ முணுமுணு வென்றது. இதுதான் நடந்த விஷயம். இன்னென்று சொல்ல மறந்துவிட்டேனே! டாக்டர் ஐரோப்பியன்!

* * *

என் வீட்டுக்கு வந்திருந்த ரோஜாவையும் அவன் தாயார் அம்புலுவையும் ஸினிமாவுக்கு அழைத்துச் சென்ற அன்றுதான் நான் ரொம்பக் கஷ்டப்பட்டு விட்டேன்.

ரோஜாவுக்கு வயசு ஐந்து. அவனும் அவன் தாயாரும் இதுதான் முதல் தடவை பட்டணத்திற்கு வருவது. ஆனுல், மதராஸில் 'பாஷன்' ஆக எல்லாம் நடந்து

கொள்ள வேணுமென்று அம்புலுவுக்கு ஆவல். தங்களை யாரும் கிராமத்தில் வசிப்பவர்கள் என்று நினைத்துக் கொள்ளக் கூடாதாம். அதில் என்ன தப்போ தெரிய வில்லை.

மூன்று மணி ஆட்டத்திற்குப் போவதாய் ஏற்பாடு. பன்னிரண்டு மணியிலிருந்து ரோஜாு சிங்காரிக்கப்பட்டான். இடையில் ஒரு வார்த்தை: பெயர் ரோஜாுவா யிருந்தாலும், குழந்தை ரோஜாப்பூ வர்ணமில்லை; ஏறக் குறைய நீலோத்பல புஷ்பத்தின் நிறம்.

ரோஜாுவுக்குத் தாயார் தலையில் சுட்டி வைத்துப் பின்னினாள். கை கால்களில் காப்புக் கொலுசு ; உடம்புக்கு ஒரு வெல்வெட் கோட் ; காலுக்கு பூட்ஸ்; தலைக்கு ஒரு சிறு ஹாட். முகத்தில் பவுடர் ஒத்தின பிறகு, ஒரு அழகிய சாந்துப் பொட்டு இடப்பட்டது. பௌடர் ஒத்துவது அவசியமாய் இருந்தது ; இல்லாவிட்டால் சாந்து இட்டிருப்பது தெரியாது !

'மூணு மணி ஆட்டத்தில் கதவை யெல்லாம் அடைத்துவிடுவார்கள். இவ்வளவு உடுப்புப் போட்டால் குழந்தைக்குப் புழுக்கமாய் இருக்குமே !' என்று என் அகத்துக்காரர்கூட நாஸுக்காய்ச் சொல்லிப் பார்த்தார்.

ஸினிமாவுக்குப் போய்ச் சேர்ந்தோம். இண்டர்வெலுக்குப் பிறகு கதையில் வெகு ரஸமான கட்டம். மெதுவாய் அம்புலு, 'ரோஜாுவின் கால் பூட்ஸ் ஒன்றைக் காணுமே !' என்று ஆரம்பித்தாள், நான் காது கேட்காதது போல் இருந்து பார்த்தேன். விடுவதாயில்லை. 'இருட்டில் என்ன செய்ய முடியும்? ஆட்டம் முடிந்த பிறகு பார்ப்போம்' என்றேன்.

அம்புலு சமாதானம் அடைவதாய் இல்லை. 'பூட்ஸ் எப்படி, எங்கே, எப்போது போயிருக்கும்?' என்னும் பிரச்னையைக் கிளப்பிவிட்டு, என்னை ஸம்வாதத்திற்கு இழுத்தாள். நான் பேசாமல் இருக்க முடியவில்லை. அக்கம்பக்கத்தில் இருந்தவர்கள் 'உஸ்! உஸ்!! உஸ்!!!' என்று சொல்ல ஆரம்பித்துவிட்டார்கள். வேறு வழியில்லாமல், 'இண்டர்வெலுக்கு வெளியே போனீர்களே! அங்கு எங்கேயாவது விழுந்துவிட்டதோ, பார்ப்போம்' என்று அம்புலுவை ரோஜா சகிதமாய் வெளியே அழைத்துக்கொண்டு வந்துவிட்டேன்.

ஆட்டம் முடிகிற வரையில் கேட்டிலிருந்து கக்கூஸ் வரையிலும் திரும்பித் திரும்பித் தேடிப் பார்த்தோம். அகப்படவில்லை.

ஆட்டம் முடிந்தது. கும்பல் திரள்திரளாய்க் கொட்டகையிலிருந்து வெளியே வந்தது. நாங்கள் கொட்டகைக்கு உள்ளே போனோம். பலர் ஏற இறங்க எங்களைப் பார்ப்பதை நான் கவனித்தேன். வயோதிகர் ஒருவர், 'ஏன் அம்மா? நகை ஏதாவது காணமல் போய்விட்டதா?' என்று அனுதாபத்துடன் விசாரித்தார். 'இல்லை, பூட்ஸ் தேடுகிறோம்' என்று பதில் சொல்ல எனக்குத் தைரியம் வரவில்லை. ஒன்றும் சொல்லாமல் உள்ளே போய்விட்டோம்.

உள்ளே சென்று தேடினோம், தேடினோம், தேடினோம். கேட்காரன், 'என்ன தேடுகிறீர்கள்? எதுவாயிருந்தாலும் போலீஸில் மாத்திரம் எழுதி வைக்க வேண்டாம், அம்மா! எப்படியாவது நாங்களே தேடிக் கொடுக்கிறோம், சொல்லுங்க அம்மா!' என்றான்.

தேடுவது ஒற்றைக்கால் பூட்ஸ் என்று அவனிடம் எப்படி வெட்கமில்லாமல் சொல்வது ? ஆனால் அம்புலுவோ, 'நேற்று வாங்கின பூட்ஸை இன்றைக்குள் தொலைத்துவிடுவதா ? அவனிடம் சொன்னால் என்ன ? சொல்லு' என்று என்னை வதைத்தாள். தவிர, மறு நாட் காலையில் மியூஸியம் பார்க்கப் போவதாய் ஏற்பாடு. அதற்கு ரோஜாவுக்கு டிரெஸ் பண்ணிக்கொண்டு போக பூட்ஸ் இல்லாவிட்டால் என்ன செய்வதென்று அம்புலுவின் கவலை.

கேட்காரன், தான் இரண்டு மூன்று தடவை கேட்டுப் பதில் கிடைக்காததைக் கண்டு சிறிது கோபத்துடன், 'சரி, வெளியே போங்க அம்மா ! அடுத்த ஆட்டத்திற்கு மணி ஆகிவிட்டது' என்று எங்களை வெளியே விரட்டிவிட்டான். நல்ல வேளையாய் பூட்ஸ் வேட்டை முடிந்தது. கேட்காரனை நான் மனமார மனத்துக்குள் வாழ்த்தினேன்.

நன்றாய் இருட்டிவிட்டது. அம்புலுவின் மனமும் இருண்டிருந்தது. வெறுப்புடன், 'இந்த ஒற்றை பூட்ஸை வைத்துக்கொண்டு என்ன ஆகப்போகிறது ?' என்று ரோஜாவின் காலில் இருந்த ஒற்றை பூட்ஸையும் வெடுக்கென்று கோபத்துடன் பிடுங்கி எறிந்துவிட்டாள். வண்டியில் வரும்போது, 'குழந்தைக்கு திருஷ்டியே காரணம் பூட்ஸ் தொலைந்து போனதற்கு. அந்த மட்டும் அதோடு போச்சே !' என்று அம்புலு தனக்குத் தானே மனத்தைத் தேற்றிக்கொண்டு வந்தாள்.

வீடு வந்து சேர்ந்தோம். என் எஜமானர், 'என்ன, ஸினிமா இத்தனை நாழி ஆச்சா ?' என்று கேட்டுவிட்டு,

'என்ன அம்புலு ! ஸினிமாவுக்குப் போகும் அவசரத்தில் முக்கியமானதை மறந்துவிட்டாயே ; அதோ பார் !' என்று காட்டினார். மேஜையின் மேல் இருந்தது என்னவென்று நினைக்கிறீர்கள் ? ரோஜாவின் ஒற்றைக் கால் பூட்ஸ் !

சகோதரிகளே ! உண்மையைச் சொல்லிவிடுகிறேன். நானும் ஒரு தாய்தான். ஆகையால் இந்தக் கட்டுரையை வாசித்தவுடன், 'நீ மாத்திரம் எப்படியோ ?' என்று என்னைக் கேட்டு வீணில் என்னைப் பொய் சொல்ல வைக்காதீர்கள்.

## 3. விருந்தாளி

'மோப்பக் குழையும் அனிச்சம் ; முகம் திரிந்து
நோக்கக் குழையும் விருந்து'

என்றார் திருவள்ளுவர்.

நோக்கினாலே குழைந்துவிடக்கூடிய விருந்தாளிகளைப் பற்றி எழுதினால் என்ன ஆகுமோ என்று பயமாய்த்தானிருக்கிறது. ஏதோ ஆரம்பித்துவிட்டேன். ஓரிரண்டு விஷயங்களைச் சொல்லிச் சீக்கிரம் முடித்துவிடுகிறேன்.

ஒரு ரகம் பணக்கார விருந்தாளிகள். இந்த ரகத்தைச் சேர்ந்த விருந்தாளிகள் எதிர் வீட்டுக்குச் சமீபத்தில் வந்தார்கள். எதிர்வீட்டு அம்மாமியின் குடித்தனம் சாமானியமான — அடக்கமான — குடித்தனம். முன் ஜாக்கிரதையாக எதிர் வீட்டு மாமா என் புருஷரிடம் ரூபாய் ஐம்பது கடன் வாங்கி வைத்துக்கொண்டிருந்தார்.

ஒரு நாள் காலை எதிர்வீட்டு வாசலில் கல்யாணம் போல் தடபுடலாய் இருந்தது. வாசலில் இரட்டை மாடு கறவை, வீட்டு யஜமான் வீட்டுக்கும் கடைத் தெருக்கு மாய் ஓயாமல் நடமாடுவது, டாக்ஸி மோட்டார் கார் ஒன்று - முதலிய இவைகளெல்லாம் பணக்கார விருந்தி னரின் விஜயத்தைத் தெரிவித்தன.

சுமார் ஒரு வாரத்திற்கப்புறம் டாக்ஸி கார் தென் படவில்லை. எதிர்வீட்டு மாமாவின் அலைச்சலும் குறைந் ததாய்த் தோன்றியது. அம்மாமி வழக்கம் போல் வாச லில் கைப்பால் வாங்கிக்கொண்டிருந்தாள். விருந்தாளி கள் புறப்பட்டுப் போய்விட்டனர்.

அன்று மத்தியானம் அம்மாமி என்னைத் தேடிக் கொண்டு வந்தாள்.

'உங்கள் ஆத்தில் சாணி மெழுகின முறம் இருக்கு மா ?' என்று விசாரித்தாள்.

'ஏன் ? இருக்கிறது.'

'கொஞ்சம் கொடு அம்மா ! புது முறம் வாங்கிப் போட்டு ஒரு வாரம் ஆச்சு ; மெழுக ஒழியவில்லை.'

நான் முதல் நாள் பார்த்த விஷயம் ஒன்று சடக் கென்று எனக்கு ஞாபகத்திற்கு வந்தது. 'நேற்றுத் தானே......'என்று ஏதோ அசட்டுத்தனமாய் வாயெடுத் தேன் ; உடனே அடக்கிக்கொண்டு, 'எப்படி முடியும் ? வீட்டில் விருந்தாளிகள் வந்திருக்கும்போது?' என்று அம்மாமிக்கு ஒத்துப் பாடினேன். அம்மாமிக்குப் பரம திருப்தி.

'அதிலும் விருந்தாளி யென்றால் சாமானியமான வர்களா ? நமது வீட்டைத் தேடி வரக்கூடியவர்களா? ' என்று உத்ஸாகத்துடன் ஆரம்பித்தாள் அம்மாமி.

'யார் அவர்கள்? ரொம்பப் பெரிய மனிதர்கள் போல்தான் எனக்கும் தோன்றியது.'

'அவர்கள்தான் ராவ் ஸாஹேப் வெங்கட சுப்பை யரும் அவர் குடும்பமும். நீ அவர்களைப்பற்றிக் கேள்விப் பட்டதில்லையோ?'

உண்மையில் நான் கேள்விப்பட்டதில்லை. ராவ் ஸாஹேப் உலகத்தில் எல்லையில்லாமல் வருஷா வருஷம், வருஷத்திற்கு இருமுறை, ஜனனங்கள் ஆகின்றன. இந்த ஜனன மரணக் கணக்கை யார் தாக்கல் செய்து வைத் துக்கொள்ள முடியும்? இருந்தாலும், 'கேள்விப்பட்ட தில்லை' என்று சொல்லி அம்மாமியின் உத்ஸாகத்தைக் குறைக்க மனமில்லாமல், 'உம்' என்று பொதுவாய் ஒரு பதில் கொடுத்தேன்.

'அவர்களுக்குத் திருச்சிணுப்பள்ளி ஜில்லாவில் ஏக போக கிராமம்' என்று தொடர்ந்தாள் அம்மாமி. 'ஒரு பிள்ளையை ஐ. ஸி. எஸ்ஸுக்குப் படிக்க அனுப்பப் போகிறார்கள். ஒரு மாப்பிள்ளை ஏதோ பெரிய வேலை யில் இருக்கிறான். அவர் அகமுடையாள் இருக்கிறாளே, மஹா பதவிசு. கைநிறைய வைர வளையல்கள்; அப்படி யிருந்தும் காப்பிப் பாத்திரத்தைத் தானே அலம்பு கிறாள்!'

'அவர்கள் உங்களுக்குச் சிநேகமா, உறவா?'

'சிநேகமாவது? — உறவுதான்! கிட்டின உறவு; என் அகத்துக்காரருடைய அம்மாஞ்சி வெங்கட சுப்பை யருக்கு ஸாக்ஷாத் அத்தான்' என்று அம்மாமி சுருக்க மாயும் நெருக்கமாயும் உறவைப் பொருத்திக் காட் டினாள்.

என் புத்திக்குச் சட்டென்று பிடிபடவில்லை. எனக்கு யார் இந்த உறவுமுறை ஆகிருர்கள் என்று சற்று நிதானித்து யோசித்தேன். கொஞ்ச நேரம் பிடித்தது. அதற்குள் அம்மாமிக்கு நேரமாய் விட்டது. கோரி வந்த காரியமும் முடிந்துவிட்டது போலிருந்தது.

'நான் வருகிறேன் ; அவர் ஆபீஸிலிருந்து வரும் சமயமாய் விட்டது' என்று சொல்லிக்கொண்டு புறப்பட்டுவிட்டாள்.

சாணி மெழுகின முறத்தை அம்மாமி மறந்துவிட்டாள். நானும் ஞாபகப்படுத்தவில்லை ; ஏனென்ருல் முதல் நாள்தான் அம்மாமி சாணி மெழுகின முறத்தில் வாசலில் குப்பை கொண்டுவந்து கொட்டியதை நான் பார்த்திருந்தேன்.

* * *

ஏழை விருந்தாளிகள் நம் வீட்டுக்கு வந்திருக்கும் போதுதான் நம் வீட்டில் அப்பளம், வடாம் எல்லாம் ஆகிப்போய்விடும், கவனித்திருக்கிறீர்களா ? விருந்தினர் வந்திருக்கும்போது இவை இல்லாமல் இருக்க முடிகிறதா ? போடுவது போடும்போது கொஞ்சம் கூடத்தான் இருக்கட்டுமே யென்று சுமார் இரண்டாயிரம் அப்பளத்திற்குப் பருப்பும், நாலு மரக்கால் அரிசி வடாத்திற்கும் போடுகிருேம்.

இவையெல்லாம் இட்டு முடியும் சமயத்தில் அவர்களுக்குச் சில நாட்களாய் ஜலம் வடிந்து கொண்டிருந்த கண் கொஞ்சம் மறைப்பது போல் தோன்றுகிறது. அல்லது சொத்தையாய் இருந்த பல் அசாத்தியமாய் வலிக்க ஆரம்பிக்கிறது ; பிடுங்கிஞல்தான் குணம் ஆகும்போலிருக்கிறது ; இந்த வைத்தியத்தை யெல்லாம் ஊருக்குப்

போகுமுன் செய்துகொள்ள முடியுமா என்று நம்மை யோசனை கேட்கிருர்கள். யார் செலவில்? நம் செலவில் தான், அதற்கென்ன சந்தேகம்?

நமக்குத்தான் சாமர்த்தியம் உண்டா? அவர்கள் மாத்திரம் ஏமாந்தவர்களா?

* * *

ராமாயணம் ரங்கு சாஸ்திரி மாமூல் விருந்தாளி கோஷ்டியைச் சேர்ந்தவர்; நல்ல ஸம்ஸ்கிருத பண்டிதர்; ராமாயணம் வெகு அழகாய்ச் சொல்லுவார். ஆனுல், மேளதாளங்களுடன் ஹரிகதை நடத்தும் இக் காலத்தில் வெறும் ராமாயண காலட்சேபத்திற்கு இவரை அழைப்பவர் யார்? பாவம், ரொம்பக் கஷ்ட ஜீவனம்.

அவரை ஒரு தடவை நீங்கள் யாராவது சந்தித்தால் போதும்; அன்றுமுதல் உங்களைத் தம் பிராண சிநேகிதராய் அவர் பாவித்துக்கொள்வார். அதன் பிறகு சாப்பாடு காப்பி வேளை தெரிந்துதான் வீட்டுக்கு வருவார்; அகாலத்தில் வந்து உபத்திரவம் கொடுக்கமாட்டார். நாம் உபசரிக்கவேண்டுமென்று 'பிகு' செய்துகொள்ளும் கெட்ட வழக்கம் அவரிடத்தில் கிடையாது. 'ஐயர்வாள் பிராண சிநேகிதமான பிறகு நான் உபசாரத்தை எதிர்பார்ப்பது நியாயமா? — இந்த அகம் நம் அகந்தானே!' என்று நாஸுக்காய் ஆரம்பித்து, வேண்டியவைகளைத் திருப்தியாகும் வரையில் கேட்டு வாங்கிச் சாப்பிடுவார்.

எங்கே சென்ருலும் தம்மை வேருகக் கருதியோ, பாவித்தோ அவருக்குப் பேசத் தெரியாது. அவர் யாரைப் பற்றிச் சொல்வதாய் இருந்தாலும், 'அவர் தங்களைப் போல் எனக்கு ரொம்ப ஆப்தமானவர்' என்று தான் ஆரம்பிப்பார்.

ஆவணி அவிட்டத்திற்கு முதல் நாள் இரவு வந்து, 'இந்தத் தடவை நம் அகத்தில் தர்ப்பிப்பதாய் உத்தேசம். அகத்தில் ஊருக்கு அனுப்பியிருக்கிறேன்' என்று சொல்லிவிட்டு, 'பட்டு இந்த மடிஸஞ்சியில் இருக்கிறது. இப்படி மாட்டிவைக்கலாம் இல்லையோ? எலி பயம் இல்லையே?' என்று நம்மைக் கேட்பதுபோல் கேட்டுக்கொண்டே, ஆணியில் மடிஸஞ்சியை மாட்டி விட்டால் நீங்கள் என்ன செய்ய முடியும்?

ஒரு நாள் இவருடைய காலட்சேபம் எங்கோ ஓர் இடத்தில் அபூர்வமாய் நடந்தது. அங்கு ஒரு கனவான் காலட்சேபத்தை ரொம்ப அனுபவித்தது போல், இவருக்குத் தோன்றியது. காலட்சேபம் முடிந்த பிறகு நம் சாஸ்திரிகள் கனவானுடைய வீட்டை விசாரித்துத் தெரிந்துகொண்டு, மறுநாள் காலை தமக்கு 'ஆப்த சிநேகிதர்' இன்னொருவரை ஏற்பாடு செய்துகொள்ளும் பொருட்டுக் கனவான் வீட்டைத் தேடிச் சென்றார். கனவான் வாசலிலேயே உட்கார்ந்திருந்தார். 'நமஸ்காரம்' என்று சொல்லிக்கொண்டு ரங்கு சாஸ்திரிகள் உள்ளே நுழைந்தார்.

கனவான் ஏற இறங்கப் பார்த்தார்; தமக்கு ஏதோ ஆபத்தென்று மோப்பம் பிடித்தார். 'யார் நீர்?' என்றார்.

'நேற்று காலட்சேபத்தில் தங்களைப் பார்த்தேன்' என்று ஆரம்பித்தார் சாஸ்திரிகள்.

'காலட்சேபத்திலா? — நான் சீட்டு ஆடும் வழக்கமே கிடையாதே!'

'இல்லை ; ராமாயண காலட்சேபத்தில் நேற்று தங்களைப் பார்த்தேன்—'

'ஒருகாலும் இருந்திருக்க முடியாது. இன்று காலையில்தானே ஐயா நான் வெளியூரிலிருந்து வந்திருக் கிறேன் ! நீர் யாரையோ அடையாளப் பிசகாய்ச் சொல் கிறீர்.'

ரங்கு சாஸ்திரி இதற்குச் சளைத்தவரா ? தம்மைப் பல வருஷங்களுக்கு முன் தம் வீட்டில் காலட்சேபத் திற்கு ஏற்பாடு செய்த தஞ்சாவூர் டாக்டர் சோமசுந்த ரம் இந்தக் கனவானுடைய மைத்துனன் என்பதை சாஸ்திரி முன்பே விசாரித்து வைத்திருந்தார். இந்த விஷயத்தைச் சமயோசிதமாய்க் கொஞ்சம் கைச்சரக்குச் சேர்த்து, ' தவிர, தஞ்சாவூரில் தங்கள் மைத்துனர் டாக்டர் சோமசுந்தரத்தின் வீட்டில் தங்களைப் பார்த் திருக்கிறேன்' என்று விட்டுப் பார்த்தார் ஓர் அஸ் திரத்தை.

'மாயவரத்திற்குத் தெற்கே நான் போனதே கிடையாது. எனக்கு மைத்துனனும் கிடையாது.'

' டாக்டர் ஒருகால் தங்கள் ஷட்டகரோ ?'

'எனக்கு ஷட்டகரும் கிடையாது — சரி, சரி ; இப் போது எனக்கு எல்லாம் புரிகிறது.'

'ஞாபகம் வருகிறதா ?' என்றார் ஆவலுடன் சாஸ் திரிகள், பாவம்.

'ஞாபகம் வருகிறது ;—மூளை வைத்தியர் டாக்டர் சோமசுந்தரம்தானே? '

'ஆம் ; அவர்தான்.'

'பைத்திய ஆஸ்பத்திரியில் வேலையிலிருந்து ரிடை யர் ஆனவர்? '

‘அவரேதான்!’

‘சாஸ்திரிகளே! நீர் மிகவும் ஸத்யஸந்தர். உம்முடைய வார்த்தையில் பூரண நம்பிக்கை எனக்கு இப்போது ஏற்படுகிறது. நீர் அவரிடம் போயிருப்பீர் என்பதில் சிறிதும் சந்தேகம் இல்லை. உமக்கு ஞாபகக் குறைவும் புத்தி மாறாட்டமும் இருப்பதற்கு அவர்தான் தகுந்த வைத்தியர்!’ என்று ஏளனமாய் ஆரம்பித்தார் கனவான்.

இந்தப் பிரம்மாஸ்திரத்தை எதிர்க்க ராமாயண சாஸ்திரியின் அம்பறாத் தூணியில் அஸ்திரம் இல்லை. அபஜயத்துடன் வெளியே வந்துவிட்டார்.

விருந்தோம்பலைப்பற்றிப் பெரியோரும் புலவர்களும் எவ்வளவோ விசேஷமாய்க் கூறியிருக்க, நான் என்ன விருந்தாளிகளைப்பற்றி இப்படி எழுதுகிறனே என்று என் சகோதரிகள் நினைக்கலாம். ஆனால், எதுவும் கால - தேச - வர்த்தமானங்களுக்குத் தகுந்தாற்போல் மாறுமென்பதை மறக்கக்கூடாது.

கீழ்க்கண்ட பத்து வெண்பாக்களைப் படித்துப் பார்த்தால் இது விளங்கும். இவ் வெண்பாக்கள் ஒவ்வொன்றிலும் முன் பாகம் திருவள்ளுவர் வாக்கு; பின் பாகம் — ?

## விருந்தோம்பல் - அன்றும் இன்றும்

இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு — **விருந்தோம்பல்**
**காசினியில் நம்மைக் கவுரவித் தேபலர்**
**பேசிப் புகழ்தற் பொருட்டு.**

விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று — விருந்திற்கு
**வேண்டும் மருந்தும் விருந்தோம்பு வார்தாமே**
**யாண்டும் அளித்தல் கடன்.**

வருவிருந்து வைகலும் ஓம்புவான் தன்வாழ்க்கை
பருவந்து பாழ்படுதல் இன்று — வருவிருந்து
**தான் வாழ்தற் காகத் தவறுது வைகலும்**
**யான் வாழ்க வென்று தொழும்.**

அகனமர்ந்து செய்யாள் உறையும் முகனமர்ந்து
நல்விருந் தோம்புவான் இல்லத்தே — செய்யாள்
**உறைந்தா லன்றிவிருந் தோம்பவல் லார்யார் ?**
**வெறுங்கை முழம்போடுமோ ?**

வித்தும் இடல்வேண்டும் கொல்லோ ? விருந்தோம்பி
மிச்சில் மிசைவான் புலனுக்கே — **மிச்சம்**
**விதைநெல்லு மின்றி விருந்தோம்பல் செய்தார்**
**இதை நம்பி ஏமாந் தவர்.**

செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு (ஏ)னில்-**தொல்விருந்தை**
**வேரூன்றிடாது வெளியேற்றி அன்பொழுக**
**வாரா விருந்தை அழை.**

இணைத்துணைத் தென்ப தொன்றில்லை விருந்தின்
றுணைத்துணை வேள்விப் பயன்(ஏ)-**அனைத்துமுண்மை!**
**வீட்டிற்கு வந்த விருந்தளவு வேண்டுமெனில்**
**காட்டுமே வீட்டுக் கணக்கு.**

பரிந்தோம்பிப் பற்றற்றேம் என்பர் விருந்தோம்பி
வேள்வி தலைப்படாதார் (ஏ) — விருந்தோம்பி
**வற்று விடில்யார்க்கும் பற்றிருக்கும் வற்றிடின்**
**அற்றிடுமே அக்கணமே பற்று.**

உடைமையுள் இன்மை விருந்தோம்பல் ஓம்பா
மடமை மடவார்கண் உண்டு — மடமையிலும்
இன்னம் மடமை இலாதான் விருந்தோம்பல்
தன்னிலைக்கு மிஞ்சிச் செயல்.

மோப்பக் குழையும் அனிச்சம் முகம்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து (எ)னினும்-நோக்கா(து)
இடத்தைக் கொடுத்தால் விருந்தினர் ஈந்தோர்
மடத்தைப் பிடுங்குதலும் உண்டு.

## 4. பத்திரிகை

**ப**த்திரிகை விஷயத்தில் சம்பந்தப்படுகிறவர்கள் (1) படிப்பவர்கள், (2) பத்திரிகைக்கு எழுதுகிறவர்கள். ஆசிரியரும், பத்திரிகை முதலாளியும்கூடச் சம்பந்தப்பட்டவர்கள்தான். அப்படிப் பார்க்கப்போனால் பழைய பேப்பரை விலைக்கு வாங்கும் மளிகைக்கடைச் செட்டியார்கூட ஒரு விதத்தில் சம்பந்தப்பட்டவர் தான். இத்தனை பேர்களையும்பற்றி எழுதுவதென்றால் சாத்தியமா? பத்திரிகையைப் படித்து மகிழும் மஹா ஜனங்களைப் பற்றியும், பத்திரிகைக்கு விஷயதானம் செய்யும் பெரியோர்களைப் பற்றியும் மாத்திரம் கவனிப்போம்.

பத்திரிகை படிப்பவர்களில் எத்தனையோ ரகம். ஒரு முக்கியமான ரகம் பத்திரிகையை மாமூலாய் இரவல் வாங்கி வாசிப்பவர்கள். இந்த ரகத்தில் சேர்ந்தவர்களில் சிலர், பக்கத்து வீட்டுக்குப் பத்திரிகை கொண்டு வந்து போடும் பையனை வழிமறித்துக்கொண்டு பத்திரிகையை முதலில் வாங்கிக்கொள்வதுண்டு. அவர்கள் படித்து

முடிந்து அவர்கள் வீட்டுக் குழந்தைகளின் கைகளி லிருந்து தப்பினுல்தான் நாம் பத்திரிகையைக் காண முடியும். அவர்களுக்கு மரியாதை தெரியாதென்று அர்த்தமா? பல வேலைகளால் பத்திரிகை படிக்கக்கூட ஒழிவு இல்லாமல் இருக்கும் பக்கத்து வீட்டுக்காரருக்குப் படிக்கும் சிரமத்தைக்கூடக் கொடுக்காமல் தாங்களே வாசித்து விஷயத்தைச் சுருக்கமாய்ச் சொல்லிவிடுகிருர் களே! எவ்வளவு அபிமானம், பாருங்கள்!

புஸ்தக விஷயத்தில் 'ஸாதக மறதி' சகஜம்; பத்திரிகை விஷயத்தில் இது சர்வ சாதாரணம். புஸ்த கத்தை இரவல் கொடுத்தால் ஒரு தடவைக்கு இரண்டு தடவையாய்த் தைரியமாய்த் திருப்பிக் கேட்கலாம். பத் திரிகையைக் கொடுத்தால் திருப்பிக் கேட்பது கொஞ் சம் சங்கடமான விஷயம். பூர்த்தியாய் இன்னும் படிக்க வில்லை என்று சொல்லித்தான் நாம் பத்திரிகையைத் திருப்பிக் கேட்கப் போகிருேம்; ஆனுல், அவர்கள், விலைக்குப் போடும் பழைய பேப்பர் கட்டின் எடை குறையாமல் இருக்கத்தான் நாம் கேட்பதாய் எண்ணிக் கொள்வார்களோ என்று பயம்.

பத்திரிகையை எடுத்தால் தேவை விளம்பரங்களை முதலில் வாசிப்பவர் சிலர். சிலருக்குத் தலையங்கத்தின் மேல் வெறுப்பு. வேறு சிலர் தலையங்கத்தை மாத்திரம் படித்துவிட்டு வைத்துவிடுவார்கள். சினிமாப் பக்கத் தின் மேல் சிலருக்கு மோகம். எனக்குத் தெரிந்த ஒருவர், 'ஹிண்டு' பேப்பரை எடுத்தவுடன் 'ஆபிச்சுவரி' (மரணச் செய்தி) இருக்கும் இடத்தைத் தேடி அதைப் படித்து விட்டுத்தான் மிகுதியைப் படிப்பார்; அவர் ருசி அப்படி!

முதல் பக்கத்தில் பத்திரிகையின் பெயரிலிருந்து ஆரம்பித்து, கடைசிப் பக்கத்தில் இன்ன அச்சுக்கூடத்தில் அச்சிடப்பட்டது என்பது வரையில் ஓர் அட்சரம் கூட விடாமல் படித்து முடிப்பதில் சிலருக்குத் திருப்தி. கொடுத்த காசுக்குப் பத்திரிகையிடம் பூர்த்தியாய் வேலே வாங்கிக்கொள்ளாமல் அவர்கள் விடுவார்களா?

சாப்பிட உட்கார்ந்துகொள்ளும்போது பத்திரிகையுடன் போய் உட்கார்ந்துகொள்வது பலருடைய வழக்கம். ஐயோ பாவம்! அவ்வளவு வேலே! பத்திரிகை வாசிப்பதற்குக்கூட அவர்களுக்கு நேரம் அகப்படுவதில்லே.

'ரீடிங் ரூமி'ல் பத்திரிகை வாசிக்க ஒரு தனிச் சாமர்த்தியம் வேண்டும். 'ஆனந்த விகடன்' போன்ற வாரப் பத்திரிகையோ அல்லது மாதப் பத்திரிகையோவானுல் கைக்கு அகப்படுவதே கஷ்டம்; ரீடிங் ரூமைத் திறப்பதற்கு அரை மணி முன்னதாய்ப் போய்க் காத்திருந்தால் ஒருகால் கிடைக்கலாம். தினசரிப் பத்திரிகையின் விளம்பரப் பக்கம் சுலபமாய்க் கிடைக்கும். மற்ற முக்கியமான பக்கம் அகப்படவேண்டுமானுல் உட்கார்ந்திருக்கும் ஒருவர் முதுகின் மேல் இன்னெருவர் சாய்ந்து கட்டிக்கொண்டு எட்டிப்பார்த்துக்கொண்டிருக்கும் இடத்தில் தேடினுல் அகப்படும். இல்லாவிட்டால், ஒருவர் பேப்பரைத் தூக்கிப் பிடித்து வாசித்துக்கொண்டிருக்க, எதிர்ப்புறத்தில் உட்கார்ந்திருப்பவர் மேஜையோடு மேஜையாய்த் தலேயை வைத்துக்கொண்டு பேப்பரின் பின் புறத்தைப் படித்துக் கொண்டிருந்தால் அது முக்கியமான பக்கம் என்பதற்கு அடையாளம்.

கூட்டுமுறையில் பத்திரிகைக்குப் பணம் கட்டி வாங்கி வாசிப்பது வெகு ரஸமான விஷயம். கூட்டுச் சேருகிறவர்கள் வெவ்வேறு தொழிலைச் சேர்ந்தவர்களாய் இருப்பது உத்தமம். அப்போதுதான் ஒருவருக்கொருவர் ஒழிவு நேரம் வித்தியாசப்பட்டு வரும்; பத்திரிகையை மாற்றிக்கொள்வது சௌகரியமாய் இருக்கும்.

கூட்டுச் சேருகிறவர்களில் பத்து மணிக்கு வேலைக்குப் போகிறவர் வீட்டிற்குப் பத்திரிகை காலையில் வரும். அவர் வேலைக்குப் போகுமுன் படித்துவிட்டு, கூட்டாளி நெ. 2-க்கு அனுப்புவார். இவர் காலையில் வேலைக்குப் போய்விட்டு ஒரு மணிக்குச் சாப்பாட்டிற்கு வருகிறவர், மாலை 7மணிக்குள் கூட்டாளி நெ. 3-க்குப் பத்திரிகை போய்ச் சேருவதாய் ஏற்பாடு.

ஒரு வாரத்திற்கு எல்லாம் ஒழுங்காய் நடக்கும். கூட்டாளிகள் பத்திரிகைச் செய்திகளைப்பற்றி ஒருவருக்கொருவர் வெகு உத்ஸாகமாய்ப் பேசிக்கொள்வார்கள்.

பிறகு ஒரு நாள் கூட்டாளி நெ. ஒன்றோ, கூட்டாளி நெ. இரண்டோ பத்திரிகையைக் குறித்த காலத்தில் அனுப்ப மறந்துவிடுவார். அல்லது பத்திரிகையில் சில பக்கங்கள் கிழிந்தோ, காணாமலோ போய்விடும். கூட்டாளி நெ. 3-க்கு மனது எப்படியிருக்கும்? நீங்களே யோசித்துப் பாருங்கள். அவரும் மூன்றிலொரு பங்கு பணம் கட்டவில்லையா?

ஒரு மாதம் ஆனதும் கூ. நெ. 1-ன் மனைவி ஒரு சிறிய பிரச்னையைக் கிளப்புவாள்: 'கூ. நெ. 3 மாத்திரம் பழைய பேப்பரை விற்றுப் பணத்தை எடுத்துக்

கொள்வதாய் ஏற்பாடா?' என்று தன் கணவரை விசாரிப்பாள்.

இதிலிருந்து ஆரம்பம். கூ. நெ. 3 மாத்திரம் பழைய பேப்பர்களைச் சேகரித்து விற்று மற்ற இருவருக்கும் கணக்குக் கொடுத்தால் போதுமா? அல்லது ஒரு நாளுக்கு ஒருவராய் மூன்று நாளுக்கு ஒரு முறை ஒவ்வொருவர் தாங்களே பழைய பத்திரிகையை எடுத்துக் கொண்டு விடலாமா? அப்படியானால் ஞாயிற்றுக்கிழமைப் பதிப்பில் பக்கங்கள் அதிகமாயிற்றே! பங்கு சரியாய் வருமா?

இவ்விதம் கூட்டுறவு முறையின் சட்டதிட்டங்களை நிர்ணயிப்பதில் ஊக்கம் அதிகரித்துப் படிப்பதில் ஊக்கம் குறைந்துவிடும். பத்திரிகை குறித்த காலத்திற்கு அனுப்பப்படுகிறதா? பக்கங்கள் உருப்படியாய் இருக்கின்றனவா? இவைகளை யெல்லாம் கவனிக்காமல் இருக்க முடியுமா? இவ்விதம் கூட்டுறவு கூடுமானவரையில் நடைபெறும்; மொத்தமாய் மூன்று மாதங்களுக்குப் பத்திரிகைக்குப் பணம் கட்டியிருந்தால் அந்த மூன்று மாத காலம் எப்படியாவது நடந்துதானே தீர வேண்டும்!

என் சினேகிதி ஒருத்திக்குப் பத்திரிகை வாசிப்பதில் வெகு உத்ஸாகம். அதுவும் சண்டையைப் பற்றிய செய்திகளை ஒன்றுகூட விடாமல் தான் படித்து வருவதாக அவள் அடிக்கடி சொல்லிக்கொள்வாள். சண்டை விஷயத்தைப் பற்றி யாராவது பேச ஆரம்பித்தால் போதும்; உடனே என் சினேகிதி பெரிய பிரசங்கம் செய்யத் தொடங்கிவிடுவாள். ஒரு நாள் இவள் என்

வீட்டிற்கு வந்திருந்தபோது, இவளைப் போல் வேறொரு பத்திரிகை உத்ஸாகி அங்கு வந்து சேர்ந்தாள்.

இருவரும் தங்கள் தங்கள் திறமையைக் காட்ட ஆரம்பித்தார்கள். சிறிது சிறிதாய்ப் போட்டி உண்டாயிற்று. இவர்கள் சம்பாஷணையிலிருந்து ராஜதந்திர யுத்த தந்திரங்களைப் பற்றி அன்றுதான் எனக்குப் பல விஷயங்கள் தெரிந்தன. ஹிட்லர், முஸோலினி, சர்ச்சில், சேம்பர்லின் என்று சரமாரியாய்ப் பெயர்கள் அடிபட்டன. சாதாரண சம்பாஷணை ஸம்வாதம் ஆயிற்று ; ஸம்வாதம் சச்சரவு ஆயிற்று ; சச்சரவு சண்டை ஆயிற்று ; சண்டையைப் பற்றிய பேச்சு சண்டையாகவே முடிந்தது. உங்களுக்கும் எனக்கும் இது வீண் சண்டையென்று தோன்றும். அவர்களைப் போல் அவ்வளவு சிரத்தையாய்ப் பத்திரிகை வாசித்திருந்தாலல்லவோ அதன் அருமை தெரியும்?

இப்படிச் சுக துக்கங்கள் பத்திரிகை படிப்பவர்களுக்கு மாத்திரந்தான் உண்டு என்று நினைக்கிறீர்களா? பத்திரிகை நிருபர்களுக்கும் உண்டு ; கட்டுரையாளர்களுக்கும் உண்டு.

பத்திரிகை நிருபர்களுக்குப் பல கஷ்டங்கள் இருந்தாலும் சில சந்தர்ப்பங்களில் அவர்களுக்குக் கிடைக்கும் ஆத்ம சந்தோஷம் வேறு யாருக்குக் கிடைக்கும்? ஓர் ஊரில் ஒரு பிரசங்கம் நடக்கும் ; அல்லது ஒரு சிறு நாடகம் நடைபெறும் ; இல்லாவிட்டால் ஒரு கல்யாணமாய் இருக்கலாம். இவற்றில் சம்பந்தப்பட்டவர்களில் யாராவது ஒருவர் தம் பெயர் பத்திரிகைகளில் வர வேண்டுமென்று ஆவல் கொண்டவராக இருந்தால்

இதற்குப் பத்திரிகை நிருபரின் தயவு இல்லாவிட்டால் முடியுமா? இப்படித் தன் தயவை நான்கு பேர் தேடி நிற்பதைக் காட்டிலும் வேறு என்ன பெருமையும் சந்தோஷமும் வேண்டும் நமது நிருபருக்கு?

பத்திரிகைக்கு எழுதுவதால் நிருபருக்கு லாபம் உண்டு; லாபத்தைக்கூடக் கோராமல் பத்திரிகைக்கு எழுதுகிறவர்கள் கட்டுரையாளர்கள்தான்.

இப்படி அவர்கள் எழுதுவதற்குக் காரணம் என்ன? படித்து, சிந்தித்து, அனுபவத்தில் பழுத்து, தங்களுக்குள்ளே பொங்கித் ததும்பிக்கொண்டிருக்கும் விஷயங்களை வெளிவிடாவிட்டால் உலகத்திற்கு அவ்வளவும் நஷ்டமாகிவிடுமே யென்னும் கவலையா? அதெல்லாம் ஒன்றுமில்லை. நாம் கையெழுத்தில் எழுதுவதையே மறுபடியும் அச்செழுத்தில் பார்ப்பதில் நமக்கு ஏற்படும் சந்தோஷந்தான்!

இந்த அல்ப சந்தோஷத்திற்காகத்தான் நாமும் இவ்வளவு பாடுபடுகிறோம். இந்த அல்ப சந்தோஷத்தைப் பத்திரிகை ஆசிரியர் நமக்குக் கொடுக்கக்கூடாதா?

கட்டுரையை எழுதிப் பார்த்தால் தெரியும் அதனுடைய இன்பம். தான் எழுதுவது அச்சில் வரப்போகிறதென்ற ஆசையில், பேப்பர் செலவு தோன்றுது; கை வலி தெரியாது; தூக்கம் விழிப்பதுகூட சகஜமாய்ப் போய்விடும். உலகமே நம் கட்டுரையை எதிர்பார்த்திருப்பதாய் ஓர் எண்ணம். பத்திரிகையில் நம் கட்டுரை வந்திருப்பது போல் கனவு. கனவிலும் கடவுளை நினையாதவர்கள் கட்டுரை ஒன்று எழுதிப் பார்க்கட்டும்; அவர்களையும் அறியாமல் கடவுளிடம் பக்தி உண்டாகி

விடும். அதாவது கட்டுரை அச்சில் வரும் வரையில். இதெல்லாம் ஆசிரியருக்குத் தெரிகிறதா ?

அப்படிப் பெரிய மனதுசெய்து நம் கட்டுரையைப் பத்திரிகையில் போட்டாலும், அதில் ஏதோ கொஞ்சம் குறைத்தோ, கூட்டியோ, மாற்றியோ போட்டால்தான் ஆசிரியருக்குத் திருப்தி !

நம் கட்டுரைகள் அச்சில் வர ஆரம்பித்துவிட்டால் அப்போது அனுபவம் வேறு. சிரத்தையாகக் கட்டுரைகளைக் கத்திரித்து வெகு பத்திரமாய் சேகரம் செய்வோம். வீட்டிற்கு யார் வந்தாலும் அவர்களுடன் சம்பாஷணை செய்யும்போது நமக்கு ஒரே நோக்கம்தான். எப்படியாவது நாம் கட்டுரை யெழுதும் விஷயம் வெளியாக வேண்டுமென்பது. சமயோசிதமாய் சம்பாஷணையை இதற்குத் தக்கபடி திருப்புவதில் நம்மையும் அறியாமல் நமக்கு ஒரு திறமை உண்டாகிவிடும். இவ்வளவு பாடு பட்டும், வந்தவர்கள் நம் கட்டுரைகளை வாங்கி வாசித்துப் பார்த்தால்தானே ! அவர்கள் கஷ்டம் அவர்களுக்குத் தெரியும் ! இந்தமாதிரிக் கட்டுரையாளர்கள் எத்தனை பேர்கள் அவர்களுக்குச் சிநேகமோ !

ஏனெனில், பத்திரிகை உலகம் வாயுவேக மனோவேகமாய் விரிவடைந்து வரும் காலம் இது. எந்தப் பக்கம் திரும்பினாலும் பத்திரிகைகள்தான்; கட்டுரையாளர்கள்தான். அந்த தைரியத்தைக் கொண்டுதான் நானும் கட்டுரை எழுதுகிறேன்.

## 5. மறதி

மறதி என்னும் விஷயத்தைப் பற்றி ஒரு கட்டுரை எழுதவேண்டுமென்று ஒரு சமயம் எனக்குத் தோன்றிற்று. ஆனல், எழுதுவதற்கு இப்போதுதான் சந்தர்ப்பம் வாய்த்தது. இவ்வளவு தாமதத்திற்குக் காரணம் என்ன என்கிறீர்களா?—மறதிதான்!

மறதியைப் பற்றி ஜனங்கள் தாழ்வாய் நினைக்கிறார்கள்; அது சரியல்ல. மறதி யென்பது ஒன்று இல்லாவிட்டால் உலகம் என்ன பாடு படும்? யோசித்துப் பாருங்கள்!

உத்தமி ஒருவள் பாவம், தன் கணவனை இழந்துவிடுகிறாள். அவள் பிரலாபத்தைக் கண்டு கல்லும் உருகிவிடும். ஐயோ, பாவம்! அவ்வளவு அந்நியோந்நியமான தம்பதிகள். தன் கணவர் செய்த ஒவ்வொரு காரியத்தைப் பற்றியும் நினைந்து நினைந்து அழுகிறாள். அவருக்கு இஷ்டமான வஸ்து எதைக் கண்டாலும் அவளுக்குத் துக்கம் பொங்கிக்கொண்டு வருகிறது. உறவினர்கள் இவள் துக்கத்தைப் பார்த்து என்ன நேர்ந்துவிடுமோ என்று பயந்து அயலூருக்கு அழைத்துச் சென்றுவிடுகிறார்கள்.

ஒரு வருஷம் கழிகிறது. அதற்கப்புறம்கூட அந்த உத்தமி அப்படியே அழுது கொண்டிருக்கிறாளா? இல்லை. அவள் மனம் தேறுவதற்கு மருந்தாய் இருந்தது எது?—மறதிதான்.

மறதி நமக்குத்தான் உண்டென்று நினைக்கிறீர்களா? தெய்வத்திற்கும் உண்டு; உண்டென்று கவி

களும் பக்தர்களும் சொல்லுகிறார்கள். அதைக்கொண்டு தான் நான் சொல்லுகிறேன்.

இல்லாவிட்டால் தியாகராஜர், 'ஜேஸினதெல்ல மறசிதிவோ' என்று பாடுவாரா? அல்லது 'சின்ன நாடிமாட மறசிதிவோ' என்றுதான் பாட முடியுமா? இந்த 'மறதி' ஒன்று இல்லாவிட்டால் இவ்வளவு அழகான கீர்த்தனங்கள்தான் நமக்குக் கிடைத் திருக்குமா?

ஆகவே 'மறதி'க்கு இவ்வளவு பெருமை இருப்பது இப்போது தெரிகிறதா? இன்னும் வேண்டுமானாலும் சொல்லுகிறேன், கேளுங்கள்: 'மறதி'யில் ஓர் உயர்ந்த ரகம் 'ஸாதக மறதி'.

இது விசேஷமாய் ஏற்படுவது புஸ்தக விஷயத்தில் தான். நல்ல புஸ்தகம் ஒன்றை இரவல் வாங்கிக்கொண்டு வருவோம். படித்து முடிந்தவுடன் திருப்பிக்கொடுத்து விடவேண்டுமென்பதுதான் உத்தேசம். ஆனால், எப் படியோ மறந்துபோய்க்கொண்டே யிருக்கும். சில மாதங்கள் ஆகிவிடும். இரவல் கொடுத்தவர்கள் திருப்பிக் கேட்க மறந்துவிடுவார்கள். நாம் இரவல் கொடுத்த புஸ்தகத்தைத் திருப்பிக் கேட்க மறந்துவிடுகிற தில்லையா? அது போலத்தான். இன்னும் கொஞ்ச நாளாகிவிட்டால் புஸ்தகத்தைத் திருப்பிக் கொடுப்ப தில் நம்மையும் அறியாமல் ஊக்கம் குறைந்துவிடு கிறது. நாளடைவில் யாரிடத்திலிருந்து புஸ்தகம் வாங் கினோமென்பதே மறந்துவிடுகிறது!

மறதியில் இவ்வளவு மேன்மை யிருந்தும் மனித னுக்கு மாத்திரம் மறதியுடன் என்றும் போராட்டம்

தான்! அதை ஜயிப்பதற்காகக் கைக்குட்டையில் முடி போட்டுக் கொள்வது, வேஷ்டியில் முடிபோட்டுக்கொள்வது, புடைவையில் முடிபோட்டுக்கொள்வது. ஆனால் மறதியை ஜயிப்பது அவ்வளவு சுலபமா? கைக்குட்டையையே எங்கேயாவது மறந்து வைத்து விடுவோம்; வேஷ்டியிலும் புடைவையிலும் போட்டுக்கொள்ளும் முடி மறுநாள் காலையில் ஸ்நானம் செய்யும்போது தான் ஞாபகம் வரும்; அப்போது முடிபோட்டது எதற்காக என்பது மறந்துபோய்விடும்.

'டயரி'யும் பென்ஸிலும் மறதியை வெல்லுவதற்கு ஏற்பட்ட நவீன ஆயுதங்கள். ஆனால், இவை ஏற்பட்ட பிறகு வேறொரு விதமான கஷ்டம். டயரியும் பென்ஸிலும் இருக்கும்போது ஞாபகசக்திக்கு அனுவசியமாய் வேலை கொடுக்க நமக்கு மனம் வருகிறதில்லை; சாதாரணமாய் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளக்கூடிய விஷயங்களைக்கூட டயரியில் குறித்து வைக்கும் வழக்கம் வந்துவிடுகிறது. முடிவில், டயரி கையில் இருக்கும் வரையில்தான் நமக்கு ஜயம்; இல்லாவிட்டால் மறதிக்குத்தான் ஜயம்.

ஒரு நாள் என் கணவர் ஆபீஸுக்குப் போகும் அவசரத்தில் ஒரு கவரை என்னிடம் கொடுத்து ஜாக்கிரதையாக வைத்துவைக்கச் சொன்னார். சாதாரணமாய் இப்படி அவர் ஒன்றும் என்னிடம் கொடுக்கமாட்டார். எனக்கு மறதி அதிகமென்பது அவருக்குத் தெரியும். எனக்கும் இது தெரியுமாகையால், அவர் கொடுத்த கவரை உடனே வெகு ஜாக்கிரதையாய் வைத்தேன்.

சுமார் ஒரு மாதத்திற்கப்புறம் திடீரென்று ஒரு நாள் அந்தக் கவரை என் கணவர் கேட்டார். நான்

வழக்கப்படி தேட ஆரம்பித்தேன். வேண்டாத சாமான்களெல்லாம் அகப்பட்டன ; கவர் அகப்படவில்லே.

ஆபீஸ் ரூமில் இருந்தபடியே என் கணவர் அநுதாபத்துடன், ' ஏன் ! அகப்பட வில்லேயா ? உன்னேப் பத்திரமாய் வைக்கச் சொன்னேனல்லவா ? ஏதாவது பெட்டிக்குள்தான் வைத்திருப்பாய், பார் ! ' என்ருர்.

பெட்டிகளே ஒவ்வொன்ருய்க் கொட்டிக் கவிழ்த்துத் தேடினேன் ; ஒன்றிலும் அகப்படவில்லே. இன்னும் ஒரு பெட்டிதான் பாக்கி. இந்தப் பாழும் மறதி இங்குமா என்னே வதைக்கவேண்டும் ? அந்தப் பெட்டியின் சாவியை எங்கு வைத்தேன் என்பதே மறந்துபோயிற்று.

பெட்டியோ நகைப் பெட்டி. சாவி யார் கையிலாவது அகப்பட்டு நகைகள் களவு போயிருக்குமோ என்று திகில் உண்டாகிவிட்டது.

இந்த விஷயத்தைக் கணவரிடம் சொல்லாமல் என்ன செய்கிறது ? சொன்னேன்.

' தலேவலி போகத் திருகுவலியாய் முடிந்ததா ? நீ எதைத்தான் மறக்காமல் இருக்கப்போகிருயோ !' என்று என்னேக் கண்டிக்க ஆரம்பித்தார். என் மறதிக்கு இன்னம் சன்மானம் கிடைத்திருக்கும் ; நகைகளேப்பற்றிக் கவலே அவருக்கும் உண்டாகிவிட்டபடியால் அத்துடன் நின்றது. உடனே சாவிக்காரனே வரவழைத்துப் பெட்டிக்குச் சாவி போடப்பட்டது.

பெட்டியைத் திறந்தோம். நல்ல வேளேயாய் நகைகள் வைத்தபடியே இருந்தன ; அத்துடன் ஒரு நீலக் கவரும் அடியில் இருந்தது. ' அதோ ! அந்த நீலக் கவர்தான் ' என்று என் கணவர் ஆவலுடன் கவரை எடுத்துக்கொண்டார்.

கவரைப் பிரித்துப் பார்த்தார்; அவர் முகத்தில் உத்ஸாகம் குறைந்துவிட்டது. 'ஏன்? நீங்கள் தேடிய கவர் அது அல்லவா?' என்றேன்.

அவர் பதில் சொல்லவில்லை. ஒன்றுக்கொன்று மறதியாய் ஏதோ ஒரு கவரை என்னிடம் கொடுத்து வைத்தாரென்பது எனக்குத் தெரிந்தது. மறதி யாரை விட்டது!

வாசலில் 'சாமீ!' என்று யாரோ ஒருவன் கூப்பிட்டான். 'யாரடா?' என்று கோபத்துடன் வெளியே சென்றார் என் கணவர்.

'நான்தானுங்க, வண்ணான். மூணும் சலவையிலே ஒங்க கோட்டு ஜேபியிலே இருந்துதுங்க இது!' என்று சொல்லி நீலக் கவர் ஒன்றை வண்ணான் கொடுத்தான்.

எனக்குக் கொஞ்சம் சிரிப்பு வந்துவிட்டது; அடக்கிக்கொண்டேன்.

என் கணவர் கௌரவத்தை விடாமல், 'மூன்றும் சலவையில் அகப்பட்டதை இப்போதுதான் கொண்டு வந்து கொடுக்கிறதா?' என்று வண்ணானை மிரட்டினார்.

'இல்லிங்க, மறந்து பூட்டேனுங்க!' என்றான் வண்ணான்.

மறந்துபோவதற்குச் சுதந்திரம் நமக்குத்தான் உண்டா? வண்ணானுக்கு இல்லையா?

மறதியைப்பற்றிச் சொல்லக்கூடியது இன்னம் எவ்வளவோ உண்டு. இந்தக் கட்டுரையை எழுத ஆரம்பித்தபோது ஏதேதோ எல்லாம் எழுதவேண்டுமென்று தான் எனக்குத் தோன்றிற்று. ஆனால், இதற்கு மேல் எழுத முடியாமல் நிறுத்தி விட்டதற்குக் காரணம் நான் சொல்லவேண்டுமா? இந்தக் கட்டுரையை வாசித்தபின் உங்களுக்கே அது தெரியும்.

# 6. சம்பாஷணை

மனிதன் சிருஷ்டிகாலம் முதல் சம்பாஷணை செய்து கொண்டுதான் வருகிறுன். ஆனுல் ஒரு வித்தியாசம். ஆதி காலத்தில் மனிதன், 'சம்பாஷணை செய்வோமா, செய்வோமா' என்று ஆவலாய் இருந்தான் ; இக் காலத்திலோ பல சமயங்களில் சம்பாஷணையிலிருந்து தப்பித்துக்கொண்டால் போதுமென்று தோன்றுகிறது. நான் சொல்வதில் உங்களுக்கு நம்பிக்கை யில்லாவிட்டால் என் சிநேகிதி கோமதியுடன் பேசிப் பாருங்கள் ; அப்போது தெரியும் !

கோமதி பள்ளிக்கூடத்தில் என்னுடன் வாசித்தவள் ; அவள் கணவருக்கு பம்பாயில் ஏதோ வேலை ; ஒரு சமயம் என் வீட்டிற்கு வந்து என்னுடன் சில நாள் தங்கினுள்.

'நாம் பள்ளிக்கூடத்தில் வாசித்த காலத்திற்கு இப்பொழுது மதராஸ் எவ்வளவு மாறியிருக்கிறது பார்த்தாயா ?' என்றேன் நான்.

'என்ன மதராஸோ ! பம்பாயிலிருந்து விட்டு வந்தால், ஏதோ நாட்டுப்புறத்திற்கு வந்தாப்போல் இருக்கிறது.'

இதிலிருந்து கோமதி ஆரம்பித்துவிட்டாள். பம்பாயில் குடிசை முதல் கோபுரம் வரையில் வர்ணனை, தான் வசிக்கும் வீட்டின் சிறப்பு, தன் கணவருடைய உத்தியோகத்தின் பெருமை, அவர் சொல்படி துரை ஆடுவது, தன் குழந்தைகள் படிப்பது, பாடுவது, ஹிந்துஸ்தானி சங்கீதத்தின் மஹிமை, தனக்குப் பொழுது

போகும் விதம், தனக்கென்று பம்பாயில் நெய்த புடைவையின் அழகு முதலியவைகளைப் பற்றியெல்லாம் பேசிக்கொண்டே வந்தது ரேடியோவைத் திருப்பி வைத்தது போல் இருந்தது. ஆனால், வெறும் ரேடியோ வைத்த இடத்தில்தான் இருக்கும்; இந்த ரேடியோ பின்னால் துரத்திக்கொண்டே வரும்.

ஒரு நாளாயிற்று, இரண்டு நாளாயிற்று, மூன்று நாளும் ஆயிற்று. காமதேனுவுக்குப் பால் சுரப்பது போல் கோமதியின் சம்பாஷணை சுரந்துகொண்டே வந்தது.

நான்காவது நாள் கோமதிக்கு ஒரு கடிதம் வந்தது; அவள் புருஷர் அவளை உடனே வரும்படி எழுதியிருந்தார். கோமதி புறப்பட்டுவிட்டாள். ஐயோ, பாவம்! இன்னும் என்னவெல்லாம் சொல்லவேண்டுமென்று எண்ணியிருந்தாளோ! என்ன மனக்குறையுடன் புறப்பட்டுப் போனாளோ!

* * *

சில பெரிய மனிதர்களுடன் பேசிப் பார்த்திருக்கிறீர்களா? அவர்கள் பேசும் விஷயம் பெரியதானாலும் சரி, சிறியதானாலும் சரி, அதில் எள்ளளவுகூடத் தவறுதல் வர இடம் கொடுக்கமாட்டார்கள்.

'மதுரைக்குப் போனவர்கள் அப்படியே ராமேசுவரம் போய்விட்டு வந்தீர்களாமே!' என்று ஒரு கனவானையும் அவர் மனைவியையும் நாம் விசாரிப்போம்.

'ஆம்; அவ்வளவு தூரம் போய் ராமேசுவரம் போகாமல் வருவதா என்று இவள் (மனைவி) ஆசைப்பட்டாள். சென்ற புதன்கிழமை மதுரையிலிருந்து புறப்பட்டோம்.—இல்லை, இரு; — புதன்கிழமையா?—

இல்லை ; புதன்கிழமை காலையில்தானே திண்டுக்கல்லுக்குப் போய்த் திரும்பிவந்தேன் ?—; வியாழக்கிழமை புறப்பட்டோம்' என்று கனவான் ஆரம்பிப்பார்.

'இல்லவே இல்லை. புதன்கிழமை யன்று சாயங்திரமே புறப்பட்டுவிடவில்லையா ?' என்று மனைவி உடனே திருத்தம் கொண்டுவருவாள்.

'அப்படியா ?' என்று ஆலோசிக்கத் தொடங்குவார் கணவர்.

'உங்களுக்கு ஞாபகமில்லையா ? வியாழக்கிழமை தான் புறப்படுவதாய் இருந்தோம். அப்புறம் பஞ்சாங்கத்தைப் பார்த்ததில் வியாழக்கிழமை நாள் நன்ருயில்லாததினுல் புதன்கிழமை சாயங்காலம் 8-மணிக்குப் புறப்படவில்லையா ?' என்று ஊர்ஜிதம் செய்வாள் அம்மாமி.

'வாஸ்தவந்தான். — சாப்பிட்டுவிட்டு ஒன்பது மணி வண்டிக்குப் புறப்பட்டோம்.'

'ஒன்பது மணி வண்டியாவது ! சரியாய் எட்டு அடித்தவுடன் ரயில் புறப்பட்டுவிட்டது !'

'தப்பும் தவறுமாய்ச் சொல்லாதே ! பையா ! 'ரயில்வே கயி'டைக் கொண்டுவா !'

பையன் ரயில்வே கயிடைத் தேடச் செல்வான். நமக்கு நேரமாய்க் கொண்டிருக்கும் ; எழுந்திருந்து வர முடியாது. சம்பாஷணையில் பாதியில் எழுந்திருந்து வரலாமா ? அதிலும் பெரிய மனிதர்களுடன் சம்பாஷணை செய்துகொண்டிருக்கும் பொழுது ?

'உங்களுக்குச் சாப்பிட நேரமாய் விட்டாப்போல் இருக்கிறதே !' என்று நாஸூக்காய் வேண்டுமானுல் நாம் சொல்லலாம் ; அதற்கு மேல் ஒன்றும் முடியாது.

* * *

கோபு ஒரு லோகஸஞ்சாரி. அவனுக்குத் தெரியாத விஷயமே கிடையாது ; அதாவது அப்படி அவன் மனத்தில் எண்ணம். யார் எதைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தாலும் சரி ; கோபு அங்கிருந்துவிட்டால், சம்பாஷணையில் கலந்துகொண்டால்தான் அவன் மனது நிம்மதியடையும்.

ஒரு நாள் என் புருஷரும் அவருடைய சிநேகிதர்களும் புது சினிமாப் படங்களைப் பற்றி ஏதோ பேசிக்கொண்டிருந்தார்கள். அப்போது கோபு அங்கு வந்து சேர்ந்தான். 'பெங்களூர் நாகரத்தினம் ஒரு புதுப் படத்தில் நடிக்கப் போகிறுளே, தெரியுமா?' என்று ஓர் அதிர்வெடி கிளப்பினுன்.

அங்கு இருந்தவர்களில் சிலர் 'கொல்' லென்று சிரித்து விட்டார்கள். ஒருவர் மாத்திரம் பொறுமையாய், 'பெங்களூர் நாகரத்தினத்திற்கு ரொம்ப வயதாகிவிட்டதே! தவிர, அவள் ஆத்மார்த்த விஷயங்களில் மனசைச் செலுத்தியிருக்கிறுள். நடிப்பது அவளாயிருக்க முடியாது' என்று சொல்லி, கோபு அத்துடனுவது நிறுத்திக் கொள்வானென்று எதிர்பார்த்தார்.

ஆனுல் கோபு, 'எனக்கு நிச்சயமாகத் தெரியும். "ரகுராமா" டாக்கீஸில் மானேஜராயிருக்கும் ராமுடுவே இதைச் சொன்னுன்' என்று ஆதாரம் காட்டி வாதிக்கத் தொடங்கினுன்.

அங்கிருந்த அத்தனை பேர்களும் ஒரு முகமாய் ஆக்ஷேபித்தார்கள். ஆனுல் கோபுவா சளைப்பவன்! கோபு சமாசாரம் அவர்களுக்குத் தெரியாது.

வார்த்தை தடிக்க ஆரம்பித்துவிட்டது. உள்ளே யிருந்த நான் அவசரமாய்ப் பழைய சினிமாப் பத்திரிகை ஒன்றைத் தேடி யெடுத்தேன். அதில் சங்கீத விதுஷி நாகரத்தினம், படம் ஒன்றில் நடிப்பதாயும், சுமார் இருபது வயது உள்ள அப் பெண்மணியின் போட்டோவும் விளம்பரம் ஆகியிருந்தது.

இதை வாசலில் இருந்த என் புருஷரிடம் அனுப்பினேன். அவர் விளம்பரத்தைக் கோபுவிடம் காண்பித்தார்.

கோபு படத்தைப் பார்த்துவிட்டு, 'உங்களுக்கு விளம்பர ரகசியங்கள் என்ன தெரியும், ஸார்! தியாகராஜ கைங்கரியத்தில் ஈடுபட்ட பிறகு பெங்களூர் நாகரத்தினம் தன் படத்தை ஒரு விளம்பரத்திலும் போடக்கூடாதென்று தடுக்கிறாளாம். அது உங்களுக்குத் தெரியுமா?' என்றான் கோபு.

சம்பாஷணையை மேலே ஒருவரும் நடத்தவில்லை. நடத்தி என்ன லாபம்? — கோபுவிற்குத் தான் சொன்னதை நிலைநாட்டிவிட்டதாய் எண்ணம்; பரம சந்தோஷம்!

இது ஒரு பிரகிருதி; தெரிந்தது கால், திரிப்பது முக்கால்!

* * *

ஒரு நாள் மாலை என் வீட்டிற்கு ஓர் அம்மாமி மோட்டார் காரில் வந்து இறங்கினாள். உள்ளே நுழையும் போதே, 'என்னை ஞாபகமிருக்கிறதோ இல்லையோ?' என்று கேட்டுக்கொண்டு வந்தாள்.

உண்மையில் எனக்கு ஞாபகமில்லை; எப்போதோ பார்த்த முகம் போல் இருந்தது; அவ்வளவுதான்.

'ஞாபகமில்லை' என்று ஒப்புக்கொண்டிருந்தால் ஒன்றும் தப்பு வந்திராது. ஆனால் அப்படி ஒப்புக்கொள்ளத்தானே நமக்கு மனம் வருகிறதில்லை!

'ஆஹா! ஞாபகமில்லாமலென்ன! வாருங்கள்!' என்றேன்.

அதற்கு மேல் என்ன பேசுவதென்று தோன்றவில்லை. கொஞ்சம் தடுமாறிய பிறகு, 'சௌக்கியம் தானே? பார்த்து ரொம்ப நாளாயிற்று' என்று பொதுவாய்க் கேட்டு வைத்தேன்.

'ஆமாம், வெகு நாளாயிற்று. போன கிறிஸ்துமஸ் ஸீஸனில் மியூஸிக் அகேடெமியில் சுப்புலக்ஷ்மி கச்சேரியில் அல்லவோ சந்தித்தோம்!'

எனக்குக் கொஞ்சம் தைரியம் வந்தது. அம்மாமியைத் தெரிந்துகொண்டு விட்டதனால் அல்ல; அது என்னமோ இன்னமும் சந்தேகம்தான். பேசுவதற்கு விஷயம் அகப்பட்டதே யென்று சந்தோஷம்.

ஜாக்கிரதையாய்ச் சங்கீத விஷயங்களைப்பற்றிப் பேச்சுக் கொடுத்து, கொஞ்ச நேரம் சம்பாஷணையை நகர்த்திக்கொண்டு வந்தேன்.

இப்படியே சம்பாஷணை போய்க்கொண்டிருக்கக் கூடாதா? அம்மாமிக்கு என்ன தோன்றியதோ என்னவோ! 'உன் பெண் சரஸ்வதிக்குக் கல்யாணம் ஆகிவிட்டதா? சீனு எத்தனாவது படிக்கிறான்?' என்றெல்லாம் என் குடும்ப விஷயத்தில் புகுந்து விசாரிக்க ஆரம்பித்தாள்.

பதில் சொன்னேன். அதேமாதிரி மரியாதைக்கு அம்மாமியின் குடும்ப விஷயங்களைப்பற்றி நான்

திரும்ப விசாரிக்கவேண்டாமா? எனக்கோ அம்மாமி யையே இன்னாரென்று தெரியவில்லை; அம்மாமியின் குடும்பத்தைப் பற்றி எப்படி விசாரிப்பது?

இவ்வளவு தூரம் பேசிய பிறகு இனிமேல் அம் மாமியை நீங்கள் யாரென்று கேட்கவும் முடியாது. கேட்பதானால் முதலிலேயே கேட்டிருக்கவேண்டும்.

சடக்கென்று ஒரு யோசனை தோன்றிற்று; எழுந் திருந்து 'ஸ்விட்ச்'சைப் போட்டு விளக்கை ஏற்றினேன். 'இந்த "பிளாக் ஔட்" வந்தாலும் வந்தது, வீட்டில் விளக்கு ஏற்றியும் ஒன்றுதான், ஏற்றாமலும் ஒன்று தான்' என்றேன்.

'வாஸ்தவம்தான்; தெருக்களில்கூட வெளிச்சம் மிகக் குறைவு; காரின் விளக்கையும் மங்க அடித்தா யிற்று. — எனக்கும் நாழிகை ஆகிவிட்டது; புறப்படு கிறேன்' என்று சொல்லிக்கொண்டு எழுந்திருந்தாள் அம்மாமி.

என் மனத்தின் மேலிருந்து ஒரு பெரிய பாரத்தை இறக்கினது போல் இருந்தது. 'பிளாக் ஔட்' உத்தரவு போட்ட சர்க்காரை என் மனமார வாழ்த்தினேன்.

அம்மாமி வெற்றிலை பாக்கு வாங்கிக்கொண்டு காரில் ஏறினாள். அம்மாமியை உபசாரமாய் வழியனுப்ப எண்ணி, 'இவ்வளவு இருட்டிவிட்டதா? இன்னம் மாம் பலம் போகவேண்டுமே நீங்கள்!' என்று அவசரப் பட்டு ஏதோ சொல்லிவிட்டேன்.

'நான் மாம்பலத்தில் இல்லையே, மயிலாப்பூரில் அல்லவா இருக்கிறேன்?' என்று பதில் சொன்னாள் அம்மாமி ஒரு புன்சிரிப்புடன்.

அந்தப் புன்சிரிப்பைப் பார்த்தேன்; எனக்குச் சந்தேகம் உண்டாகிவிட்டது. அம்மாமி உண்மையைத் தெரிந்துகொண் டிருப்பாளோ? — நான் நிதானித்துப் பதில் சொல்ல வாயெடுப்பதற்குள் கார் போய்விட்டது.

இல்லை, அந்தச் சிரிப்பு, பெரிய மனிதர்கள் விடை பெற்றுக்கொள்ளும் பொழுது சகஜமாய் வரவழைத்துக்கொள்ளும் புன்சிரிப்புத்தானோ என்னவோ, யாருக்குத் தெரியும்? அம்மாமியைத்தான் கேட்கவேண்டும்.

இப்படிச் சில சமயங்களில் சம்பாஷணை சகிக்க முடியாததாய்த்தான் போய்விடுகிறது. என்ன செய்கிறது? 'கட்டுரைகள் மாத்திரம் அப்படி ஆவதில்லையோ?' என்று கேட்பீர்கள். 'உன் கட்டுரையே அப்படி யில்லையென்பது என்ன நிச்சயம்?' என்றுகூட நீங்கள் என்னைக் கேட்கலாம். ஆனால், என் கட்டுரை உங்களுக்குப் பிடிக்காவிட்டால் உடனே புஸ்தகத்தை மூடிவைத்துவிடலாம்; நான் சம்பாஷணையில் ஆரம்பித்துவிட்டால், என் வாயை நானே மூடிக்கொண்டால்தானே உண்டு!

## 7. இரவல்

'கடன் வாங்கவும் வாங்காதே, கொடுக்கவும் கொடுக்காதே' என்று ஷேக்ஸ்பியர் மஹாகவி எங்கேயோ சொல்லியிருப்பதாய் இங்கிலீஷ் படித்தவர்கள் சொல்லுகிறார்கள். ஆனால் கவிச்சக்கரவர்த்தி ஒருவர், 'கடன் பட்டார் நெஞ்சம் போலும் கலங்கினான் இலங்கை வேந்தன்' என்று கடன் வாங்குவதைக் குறித்து மாத்திரம்தான் பாடியிருக்கிறார். இவ்விதம் பெரியோர்கள் கடனைப்பற்றிச் சொல்லியிருக்

கிறார்களே தவிர இரவலைப்பற்றி ஒருவரும் சொல்ல வில்லை ; அதனால்தான் நான் எழுதலாமென்று ஆரம் பித்தேன்.

'கடனாவது, இரவலாவது, இரண்டும் ஒன்று தானே ?' என்று நீங்கள் நினைக்கலாம். அப்படியில்லை. இரண்டிற்கும் வித்தியாசம் இருக்கிறது ; யோசித்துப் பார்த்தால் தெரியும்.

நான் உங்களிடம் ஒரு ஆழாக்கு நெய்யை வாங்கிக் கொண்டால் அது கடன் ஆகும் ; அல்லது பத்து ரூபாய் வாங்கிக்கொண்டால் அதுவும் கடன்தான். (அதாவது நான் திருப்பிக் கொடுப்பது நிச்சயமா யிருந்தால் !)

ஆனால், கடன் கொடுத்த நெய்யோ பணமோ திரும்பி வரும்போது, அதே நெய்யாகவோ அல்லது அதே ரூபாய்களாகவோ திரும்பி வருகின்றனவா ? இல்லை.

நம் நகையையோ, மோட்டார் காரையோ, புஸ்த கத்தையோ இரவல் கொடுத்தால் கொடுத்த சாமானே தான் திரும்பி வருகிறது.

கடனுக்கும் இரவலுக்கும் இப்போது வித்தியாசம் தெரிகிறதா ? இன்னும்கூடச் சில வித்தியாசங்கள் இருக்கின்றன.

கொடுத்த கடன் திரும்பி வருவது எப்போதும் கொஞ்சம் சந்தேகம்தான் ; என்றாலும் திரும்பி வருவ தானால் கொடுத்த அளவுப் பிரகாரம் வந்துவிடுவது அநேகமாய் நிச்சயம். இரவல் கொடுத்தால், கொடுத்த சாமான் முதலுக்கு மோசமில்லாமல் சாதாரணமாய்த்

திரும்பி வந்துவிடும்; கொடுத்த மாதிரியே திரும்பி வருமா என்பதுதான் சந்தேகம்.

ஆகவே, கடன் கொடுத்தால் கடன் திரும்பிவர வேண்டுமே யென்ற ஒரு கவலைதான்; ஒரு சாமானை இரவல் கொடுத்தால், அது கைக்கு வரும்போது எந் தெந்த விதமாய் உரு மாறி வருகிறதோ என்று பல விதமான கவலை.

இது மாத்திரமா? கடன் கொடுத்து அது வரா விட்டால் ஒரே துக்கம்; இரவல் கொடுத்த சாமான் ஒடிந்தோ கிழிந்தோ கெட்டுப்போயோ வந்தால் அதைப் பார்க்கும்போதெல்லாம் துக்கம்.

கடன் கொடுத்துப் பலருக்கு அனுபவம் இல்லா திருக்கலாம்; ஆனால் இரவல் கொடுத்துக் கவலையோ துக்கமோ படாதவர்கள் யாராவது ஒருவர் உண்டா?

காசுமாலையை இரவல் கொடுத்தால் ஒரு காசு உதிர்ந்துபோய் வரும். புஸ்தகத்தைக் கொடுத்தால் அட்டை கிழிந்து போகாமல் வருவது சந்தேகம். மோட் டார் கார் இரவல் போய் வந்தால் டயராவது 'பஞ்சர்' ஆகிவந்தால்தான் இரவல் கொடுத்ததற்கு அழகு. இரவல் கொடுத்த பாத்திரம் நசுங்காமல் திரும்பி வந்தால் நம் அதிர்ஷ்டமென்றுதான் நினைத்துக்கொள்ள வேண்டும்.

ஆனால், இரவல் கொடுப்பதிலும் அதிர்ஷ்டசாலி கள் இருக்கிறார்கள்; இரவல் வாங்கிக்கொள்வதிலும் அதிர்ஷ்டசாலிகள் இருக்கிறார்கள்.

ஒரு நாள் என் சிநேகிதி ஸரஸ்வதியின் வீட் டிற்குப் போயிருந்தேன். ஸரஸ்வதி எப்பொழுதும்

உடம்பை விட்டுக் கழற்ருமல் நகைகள் போட்டுக் கொண்டேயிருப்பாள். அன்று அவளைப் பார்த்தபோது ஏதோ மூளியாய் இருப்பது போல் தோன்றிற்று. கவனித்துப் பார்த்ததில் அவள் கையில் ஒரு வளை குறைவாயிருப்பது தெரிந்தது.

'ஏன் ஸரஸு! உன் கையில் வளை குறைவாய் மூளியாய் இருக்கிறதே! அழித்து ஏதாவது புது மாதிரி யாய்ச் செய்யக் கொடுத்திருக்கிருயா?' என்று விசாரித் தேன்.

'அழிக்கவும் இல்லை, ஒன்று மில்லை. கல்யாணத் திற்கென்று அலமு என் மிளகு வளையை இரவல் வாங் கிக்கொண்டு போனுள். பதினைந்து நாளாயிற்று. இன் னம் கொண்டுவந்து கொடுக்கப் போகிருள்! என்ன ஒடித்துப் பாழ் பண்ணிக்கொண்டு வரப்போகிருளோ?' என்று வெறுப்புடன் பதிலளித்தாள் ஸரஸு.

ஸரஸு பேசி வாய் மூடுவதற்குள் அலமுவே அங்கு வந்துவிட்டாள்; ஒரு காகிதப் பொட்டலத்தை ஸரஸு விடம் கொடுத்தாள். பிரித்துப் பார்த்ததில் பளபள வென்று மெருகு போட்டு ஒரு ஜதை மிளகு வளை இருந் தது.

நடந்த விஷயம் என்ன தெரியுமா? ஏற்கெனவே தேய்ந்து போயிருந்த மிளகு வளை, பாவம் அலமு கையில் வந்து ஒடிந்தது. அலமு தன் செலவில் பற்ற வைத்து மெருகு போட்டுக்கொண்டு வந்து கொடுத்தாள்.

மிளகு வளைக்கு ஒடியவேண்டிய காலம் வந்து விட்டது; ஸரஸுவின் கையில் இருந்தாலும் ஒடிந்து தான் போயிருக்கும். இரவல் கொடுத்ததினுல் அலமு

செலவில் ரிபேர் ஆகி மெருகு போட்டுப் பளபளவென்று கிடைத்தது.

இதுதான் இரவல் கொடுப்பதிலும் அதிர்ஷ்டம் என்பது.

சென்ற வருஷம் நவராத்திரிக் கொலுவுக்கு மைதிலியும் அவள் மாமியாரும் என் வீட்டிற்கு வந்திருந்தார்கள். மைதிலிக்கு ஐந்து வயது முதல் கல்யாணம் ஆகும் வரையில், அவளுடைய தாய் தகப்பன் எங்கள் வீட்டிலேயே குடித்தனம் இருந்தவர்கள்; மைதிலி எங்கள் வீட்டுப் பெண் போலவே வளர்ந்தவள். அவளுக்குக் கல்யாணம் ஆகி இரண்டு வருஷங்களாயின.

வீட்டிற்குள் நுழைந்த தக்ஷணமே மைதிலி தானுகவே எங்கள் வீட்டு ஜமக்காளம் ஒன்றைத் தன் மாமியார் உட்காருவதற்காக எடுத்து விரித்தாள்; ஒரு விசிறி தேடிக்கொண்டு வந்து தன் மாமியாருக்குக் கொடுத்தாள்; அங்கு வந்திருந்தவர்களுக்கெல்லாம் சந்தனம் குங்குமம் தானே எடுத்து வழங்கினுள்.

நைவேத்தியம் செய்த சுண்டலைக் காகிதத் துண்டுகளில் வைத்து நான் எல்லோருக்கும் கொடுத்தேன். தன் மாமியாருக்குக் கொடுத்ததை மைதிலி உடனே மரியாதையாய் மாமியார் கையிலிருந்து வாங்கித் தான் வைத்துக்கொண்டாள்.

என் பெண்ணிடம் பேசிக் கொண்டிருக்கும்போது கூட மைதிலி தன் மாமியாரையே அடிக்கடி பார்த்துக் கொண்டிருந்தாள். 'ஐயோ பாவம்! மாமியாரிடம் எவ்வளவு பயம் இந்தப் பெண்ணுக்கு!' என்று நான்கூட நினைத்துக் கொண்டேன். மாமியார் எழுந்திருந்தது

தான் தாமதம், உடனே மைதிலியும் எழுந்திருந்து விட்டாள். மாமியார் போன இடத்திற்கெல்லாம் வெகு பயபக்தியுடன் பின் தொடர்ந்து போய்க்கொண்டேயிருந்தாள் மைதிலி.

கடைசியில் மைதிலியும் அவள் மாமியாரும் புறப்பட்டுப் போனார்கள். மைதிலி அவள் மாமியாரிடம் காண்பித்த அன்பையும் மரியாதையையும் பார்த்து நான் பிரமித்துப் போய்விட்டேன். 'லக்ஷ்மீ! மைதிலியைப் பார்த்தாயா? உன் மாமியாரிடம் நீயும் அப்படி நடந்து கொள்ளவேண்டும்' என்றேன் என் பெண்ணிடம்.

'என் மாமியாரும் மைதிலியின் மாமியாரைப் போலிருந்தால் இதற்கு மேல் கூட நான் உபசாரம் செய்வேன்.—புடைவையில் அழுக்குப்பட, வேர்வை நனைய, சந்தனம்கொட்ட, சுண்டலின் எண்ணெய் பட யாருக்குத்தான் மனம் வரும்! என் புடைவையை என் மாமியார் இரவல் வாங்கிக் கட்டிக்கொண்டால் புடைவையை நான்தானே ஜாக்கிரதையாய்ப் பார்த்துக்கொள்ள வேண்டும்? புடைவையில் அழுக்குப்பட்டு விட்டால் மாமியாரைக் கேட்க முடியுமா?' என்று சொல்லிச் சிரித்தாள் லக்ஷ்மி.

இதோ பார்த்தீர்களா! புடைவை இரவல் வாங்கிக் கட்டிக்கொள்வதில் கூட அதிர்ஷ்டம் வேண்டும். அது மைதிலியின் மாமியாருக்கு இருந்தது.

மைதிலியின் மாமியாருக்கு அதிர்ஷ்டம்தான்; ஆனால் மைதிலியின் மனம் பட்டபாடு அவளுக்கல்லவோ தெரியும்! இதைப் பார்த்திருந்தால் கவிச்சக்கரவர்த்தி,

'இரவல் ஈந்தார் இதயம் போலும்
ஏங்கினன் இலங்கை வேந்தன்'

என்று கூடப் பாடியிருப்பாரென்று தோன்றுகிறது.

# 8. காய்கறிக் கூடைக்காரி

'கத்தரிக்காய்! வெண்டைக்காய்! பீர்க்கங்காய்! பீன்சுக்காய்!' என்று தெருவில் ஒரு ஸ்திரீயின் குரலோசை கேட்கிறது. எஜமானி வீட்டு வாசலில் வந்து, 'அடி, கூடைக்காரி! கொண்டு வா, பார்ப்போம்!' என்று கூப்பிட, அவள் பளுவான கூடையைச் சுமந்துகொண்டு வீட்டுக்குள் வருகிருள். இறக்க முடியாமல் தவித்துக்கொண்டு கூடையைக் கீழே இறக்கி வைக்கிருள்.

கூடையிலிருந்து, அறுந்து முடிச்சுப் போட்ட தராசையும், தேய்ந்த படிக்கல்லையும் கீழே எடுத்து வைத்துவிட்டு, கூடைக்காரி சரக்குகளைக் காண்பிக்கிருள். கிழிந்த துணி மூட்டைகள் ஒவ்வொன்ருய் அவிழ்க்கப்படுகின்றன.

'இதெல்லாம் எப்படி விலை?'

'அம்மா! கத்தரிக்காய் வீசை $2\frac{1}{2}$ அணு; பீன்சுக்காய் 5 அணு; பீர்க்கங்காய் 4 அணு; கீரைக் கத்தை காலணு.'

'நன்ணு யிருக்கடீ! ஒரே அடியாய்த் தலைகொண்டு போகிற விலையாய்ச் சொல்லுகிறையே! கத்தரிக்காய் ஒரே சொத்தை! வெண்டைக்காய் ஒரே முத்தல்; விரை போடலாம்! பீர்க்கங்காயோ மரமாயிருக்கு! பீன்ஸோ கேட்கவேண்டியதில்லை: ஒரே அழுகல்! கீரைக் கத்தை ஜடைக்கொச்சு மாதிரி இருக்கு!'

'இல்லீங்க, அம்மா! இதோ பாருங்கள்!' என்று உடனே கூடைக்காரி, காய்களை நகத்தால் கிள்ளியும்,

அமுக்கியும், ஒடித்தும், பிரித்தும் காட்டித் திருப்தி செய்ய எவ்வளவோ முயற்சி செய்கிறாள்.

எஜமானியம்மாளா ஏமாறுகிறவள்? நேற்றுத் தான் அவள் புருஷர் கொத்தவால்சாவடியிலிருந்து பாலொழுகும் வெண்டைக்காயும், வெண்ணெய்க் கட்டி போலக் கத்தரிக்காயும், வீசை $1\frac{1}{4}$ அணு வீதம் வாங்கிக் கொண்டுவந்தார்! கீரைக் கத்தை ஒவ்வொன்று இரண்டு கைகளுக்கு அடங்காத அவ்வளவு பெரிது; எதிர் வீட்டுப் பாட்டி காலையில்தான் அரையணுவுக்கு மூன்று வீதம் வாங்கிக் கொசுறு ஒன்றும் வாங்கியிருக்கிறாள். பச்சுப் பச்சென்று மார்க்கெட்டில் ஒரு அணுவுக்குச் சீரழிகிறது பீர்க்கங்காய். முதல்தரமான பீன்ஸ், மூர் மார்க்கெட்டில் வீசை இரண்டணுவுக்கு மேல் இல்லை.

ஒரு க்ஷணத்தில் இவ்வளவும் எஜமானி அம்மாளுக்கு ஞாபகம் போல் தோன்றுகிறது. இந்தத் தத்துவங்களை யெல்லாம் கூடைக்காரிக்கு எடுத்துச் சொல்லி அவளுக்கு அவ்வளவு பேராசை கூடாதென்று உபதேசம் செய்கிறாள்.

கன்னியம்மாள் பரிதாபத்துடன் ஒவ்வொரு காய் கறியும் அசல் விலை இவ்வளவென்று சத்தியம் செய்கிறாள். எஜமானியம்மாள் எள்ளளவும் அசைந்து கொடுப்பவளாயில்லை; மற்றவர்களைப்போல் தான் ஏமாந்தவள் அல்லள் என்பதைக் கூடைக்காரிக்குக் காண்பிக்கவேண்டாமா?

பளுவான கூடையை ஏற்றி இறக்கும் கஷ்டத்திற்கும், இத்தனை நேரம் பொழுது போக்கினதற்காகவும், ஏதாவது வியாபாரம் செய்யும்படி கூடைக்காரி

கெஞ்சுகிறுள். அரை மணி நேரம் ' வியாபாரம் ' இவ் விதம் முன்னும் பின்னும் இழுபடுகிறது.

கடைசியில் எஜமானி அம்மாள் மனம் கசிந்து, அஞ்சு பலம் கத்தரிக்காயும், இரண்டு கத்தைக் கீரை யும், கூடைக்காரி சொன்ன விலைக்குச் சரி பாதிக்கு வாங்கிக்கொண்டு, சில்லறை இல்லாததினுல், மறுநாள் வந்து காசு வாங்கிக்கொண்டு போகும்படி சொல்லி யனுப்புகிறுள்.

கூடைக்காரி கன்னியம்மாளின் மனம் எப்படி யிருக்கும்?

கன்னியம்மாள் கோடம்பாக்கத்தில் வசிப்பவள், குடியான ஜாதி. அவள் புருஷன் நோய் வாய்ப்பட்டு ஒரு வருஷமாய்ப் படுத்த படுக்கையா யிருக்கிறுன். மூன்று குழந்தைகளையும், தன்னையும், தன் புருஷனையும், காப்பாற்றும் பாரம் இவள் தலைமேல் விழுந்திருக்கிறது. காய்கறி வியாபாரம் செய்து, தினம் ஒன்றுக்கு நாலு அணுவாவது கிடைத்தால், அதை வைத்துக்கொண்டு கஞ்சி காய்ச்சிக் குடிக்கலாமென்றுதான் இந்தத் தொழி லில் இறங்கியிருக்கிறுள்.

வியாபாரத்திற்கு முதல் அஞ்சு ரூபாய்; அதுவும் கைவளையல்களை மார்வாடியிடம் மாதத்திற்கு ரூபாய்க்கு ஒரு அணு வீதம் வட்டிக்கு அடகு வைத்து வாங்கிய பணம். மாதா மாதம் வட்டி செலுத்துவதே கஷ்டம். தன் ஒன்பது வயதுப் பெண் குழந்தையை வீட்டில் கஞ்சி காய்ச்ச விட்டுவிட்டுத் தலையில் கூடையுடன், காலையில் முதல் கோழி கூவுமுன் கன்னியம்மாள் கொத்தவால்சாவடிக்குப் போகிறுள். கூடை நிறையக்

காய்கறிகளை வாங்கிப் போட்டுக்கொண்டு புறப்படு கிருள். அதன் பிறகு தெருத் தெருவாய், தலைச் சுமை யால் கழுத்து நோவ, 'கத்திரி வெயிலில்' காலில் பொடி ஒட்டப் பட்டணம் முழுவதும் திரியவேண்டி யதுதான்.

வீடு வீடாய் நுழைந்து கூடையை இறக்குவதும், ஏற்றுவதும்தான் வேலை. மாலை அஸ்தமனத்திற்கு நடைப்பிணமாய், மனம் நொந்து, அங்கம் சோர்ந்து, தன்னைப் படைத்த தெய்வத்தை நொந்துகொண்டே கன்னியம்மாள் வீடு திரும்புகிருள்.

'ஐயோ! இந்தக் கஷ்டம் எத்தனை நாள் பட வேணுமோ? உள்ளங்கால் வெள்ளெழும்பெடுத்து விட்டதே! செருப்பாவது வாங்கிக்கொள்ளலாமென் ருல், கையில் பணம் சேரவில்லையே! இன்று காலை எந் தப் பாவி கூடையில் கை வைத்தாளோ? வியாபாரம் சரியாக ஆகவில்லையே! அக்கிரகாரத்துக் கிழப் பாப் பாத்தி அம்மாளிடமாவது, முதல் போணி செய்யாமல் போனேனே!

'ஐயோ! என்றைக்கு மில்லாமல் இன்று ஏனே, இப்படி அதிகமாய்ப் பசி யெடுக்கிறதே! ஏதாவது வாங்கித் தின்னலாம் என்ருல், லாபத்தில் மிச்சம் ஒன் றும் இல்லாமல் போய்விடுமே!

'இந்த மகராசிகளெல்லாம் என்னிடம் வியாபாரம் செய்வதிலா, இவ்வளவு சிக்கனம் பார்க்கவேணும்? பட்டுச் சேலைகளிலும், சினிமாப் பார்ப்பதிலும், நகை நட்டுகளிலும், ஸோப்பிலும், பவுடரிலும் செலவு செய் யும் பணத்தில் நூறில் ஒரு பங்கு எனக்குக் கொடுத்

தால், நானும் என் குடும்பமும் வயிறு நிறையக் கஞ்சி குடித்துப் பிழைப்போமே!'

இவ்விதம் பலவாறுய்ச் சிந்தித்துக்கொண்டு, கண்களில் நீர் ததும்ப, உடல் வியர்க்க, வெயிலில் நடந்து போகிறுள், பாவம்!

வீடு வீடாய் அவள் ஏறியிறங்குகிறுள். எங்கே போனுலும் ஒரே பாடம்தான். மனம் அலுத்துப் போய் விட்டது; கைகால்கள் தளர்ந்து போய்விட்டன. 'ஐயோ! தெய்வமே! இப்படித் திண்டாடுவதைக் காட்டிலும், உயிர் போய்விட்டாலும் நன்றுயிருக்குமே!'

மணி இரண்டு. பசியின் களைப்பினுல் சோர்வடைந்து, அதற்கு மேல் ஒரு அடியும் எடுத்துவைக்கச் சக்தியில்லாமல் போய்விடுகிறது, ஏதோ வந்த விலைக்குக் கறிகாய்களை விற்றுவிட்டுத் தலைச் சுமையை யாவது குறைத்துக் கொள்ளலாமென்று தீர்மானித்து, ஒரு தனவந்தர் வீட்டில் நுழைகிறுள் கன்னியம்மாள்.

எஜமானி காய்கறிகளைப் பார்வையிட்டுவிட்டு, 'இந்தக் கூடைக் காய்கறி முழுவதையும் ஒரே விலையாய் எவ்வளவுக்குக் கொடுப்பாய்?' என்று கேட்கிறுள்.

'தாயே! எனக்குப் பசி காதை அடைக்கிறது. எப்படியாவது வந்த விலை போதுமுனு குடுத்துவிடறேன். இதோ, பாருங்க! ரெண்டு வீசை கத்தரிக்காய், மூணு வீசை வெண்டைக்காய், 12 பீர்க்கங்காய், மூணு வீசை பீன்சுக்காய்; எல்லாம் 12 அணு கொடுத்து விடுங்க, அம்மா!' என்று சொல்லுகிறுள்.

'நன்று யிருக்கடி! எல்லாரும் வாங்கிக் கழித்த மிச்சம்; சொத்தையையும், புழுத்தலையும் சேர்த்து என்

தலையில் கட்டப் பார்க்கிருயா? உன்னை நான் வலுவில் கூப்பிடவில்லை. நீயாக வந்தாய். உனக்காக வேணு மாஞல், நாலு அணு கொடுக்கிறேன்' என்று நெஞ்சில் பஞ்சைப் போட்டுத் துடைத்துவிட்டு, அம்மாள் சாமர்த் தியமாய் விலை பேசுகிருள்.

'ஐயோ! அசல் விலையே $1\frac{1}{4}$ ரூபாய் ஆச்சே — பதி ஞேரணுவாவது குடுங்க, அம்மா!'

'நாலணுவுக்கு மேல் ஒரு செல்லாக் காசும் கொடுக்க மாட்டேன்!' என்று சொல்லிவிட்டு முடுக்காய் உள்ளே போய்விடுகிருள் எஜமானி அம்மாள்.

கன்னியம்மாள் கடைசியாய்ப் பரிதாபமான குர லில், 'அம்மா! அம்மா! பசி எனக்குப் பொறுக்கலே; ஒருவாய் பழஞ்சோறு இருந்தால் போடுங்க, அம்மா' என்று கெஞ்சுகிருள்.

ஒன்றும் பதில் இல்லை. மறுபடியும் கெஞ்சுகிருள். எஜமானி அம்மாள் உடனே ரௌத்ராகாரமாய் வெளி யில் வந்து, 'சீ! எழுந்து போ! நீ வியாபாரம் பண்ண வந்தையா, பிச்சை எடுக்க வந்தையா? இது வீடா, அல்லது சத்திரம் சாவடி என்று எண்ணினையா? என் னடீ, படுக்கை! எழுந்திரு!! மரியாதையாய்க் கிளம் புகிருயா? அல்லது ஜவானைக் கூப்பிட்டுத் தலையிலே தண்ணியைக் கொட்டச் சொல்லட்டுமா?' என்கிருள் தர்ம தேவதை!

கன்னியம்மாள் பதறி எழுந்திருக்கிருள். தூக்க முடியாமல் தவித்துக்கொண்டு கூடையைத் தலையில் தூக்கி வைத்துக் கொள்கிருள். எஜமானி அம்மாள்

உள்ளே சென்றுவிடுகிருள். கன்னியம்மாள் கால் தடுமாற மெதுவாய் நகர்ந்து செல்கிருள்.

அவள் மனம் உடைந்துவிட்டது; உடல் ஆகாயத்தில் பறப்பது போல் ஓர் உணர்ச்சி; கண்கள் மயங்கி, கனவில் நடப்பது போல் நடக்கிருள். படியில் இறங்கும் பொழுது கால் இடருகிறது.

'ஐயோ!' என்று ஒரு சப்தம். மறுகணம் கன்னியம்மாள் தரையில் கிடக்கிருள். இனி அவளுக்குக் கஷ்டமில்லே. அவள் பிரார்த்தனேக்கு இரங்கிக் கடவுள் அவளுக்கு விமோசனம் அளித்துவிட்டார்!

## 9. சமையற்காரன்

**பெ**யரிலும் மணி; சமையலிலும் மணிதான். நாக்கும் மணி போல் அடித்துக்கொண்டிருக்கும். அவர் ஒரு கனவான் வீட்டில் சமையற்காரரா யிருந்தார். வயது 65. மீசை நரைத்தாலும் ஆசை நரைத்தவரல்லர்.

'உலகத்திலே பணம்தானே ஜீவநாடி!' என்று அவர் அடிக்கடி சொல்வதுண்டு. ஆனுல் ஒன்று: அவர் சமையலறையில் நுழைந்துவிட்டால், வீட்டு ஸ்திரீகள் அங்கே போகக்கூடாது; நாக்கு மணியடிக்க ஆரம்பித்து விடும்.

காரணம் வேறென்றுமில்லே; சாமான்களேக் கொட்டிப் பாழ் செய்யும் சுபாவம் அவருக்குக் கிடையாது. ஆனுல், கடைத் தேங்காயை எடுத்து வழிப் பிள்ளேயாருக்கு உடைப்பதில் மிகப் பிரியம். தம் நண்பர்களான வீட்டு ஜவான், வேலேக்காரி முதலியவர்களுக்குத் தினந் தோறும் வயிறு நிறையச் சாப்பாடு எஜமான் வீட்டி

லேயே கிடைக்கும்படி செய்ய வேண்டுமென்பது அவ ருடைய சித்தாந்தம். எஜமான் ‘அன்ன தாதா’ என்று பெயரெடுக்க வேண்டுமென்று எண்ணமாம்.

ஒரு நாள் வீட்டு எஜமானி இதைத் தடுக்கச் சிறிது பிரயத்தனப்பட்டாள். உடனே வந்தது அனர்த்தம். கரண்டியை அப்படியே வைத்துவிட்டு மடமடவென்று வெளியேறிவிட்டார் மணி ஐயர்.

இப்போது இவர் வேருேர் இடத்தில் அமர்ந் திருக்கிருர். சம்பளம் ரூபாய் 5 அதிகம். எஜமான் முன் கோபி. சமயம் கிடைத்தால் போதும்; ஸஹஸ்ர நாம அர்ச்சனையாய்க் கிடைத்துவிடும். ஆனுல் என்ன? ‘பிரபு! அடித்தாலும் காசால் அடிக்கிருர்!’ என்கிருர் மணி ஐயர்.

* * *

சமையற்காரர்களில் ‘ஜெண்டில்மென் குக்’ ஒரு ரகம். குமாஸ்தா வேலையைக் காட்டிலும் சமையல் வேலை லாபகரமென்று தெரிந்துதான் இவன் இந்தத் தொழிலில் இறங்கினவன். வீட்டில் எஜமான், எஜமானி இவர்களுக்கு அடுத்தபடி இவனே முக்கியமானவன். அதாவது, இவன் மனசில் அப்படி எண்ணம்.

எஜமான் எஜமானி எதிரில் இல்லாவிட்டால், அவர் களுடைய பந்துக்கள் யாராயிருந்தாலும் இவன் அபிப் பிராயத்தில் இவனுக்குத் தாழ்ந்தவர்களே! எப்பொழு தாவது பெரிய மனசு வந்தால், அவர்களைப் போனுல் போகிறதென்று தனக்குச் சமானமென்ருவது எண்ணு வான்.

வீட்டுக்கு வந்தவர் இவனை நம்பி எஜமான் இல்லாத சமயத்தில் சாப்பிட உட்கார்ந்தால், அவர்கள் பாடு திண்டாட்டம்தான். இலையில் தனக்கு இஷ்டமானதைப் பரிமாறிவிட்டு, ஜெர்மன் சண்டை, மதுவிலக்கு மசோதா முதலியவைகளைப்பற்றி 'லெக்சர்' செய்ய ஆரம்பித்து விடுவான்.

* * *

சாதுவான பரிசாரகன் வேண்டுமென்று தேடித் தேடி ஒரு கனவானுக்கு வெங்கு அகப்பட்டான். உத்தம குல ஸ்திரீகளின் குணங்களெல்லாம் அவனிடம் உண்டு! அதிர்ந்து பேசமாட்டான்; நிமிர்ந்து பார்க்கமாட்டான். ஏதாவது கேட்டால், பதில் சொல்வது கூட அரிது; ஒரு புன்சிரிப்புத்தான்.

வந்த அன்றே தனக்குச் சமையலில் அவ்வளவு பழக்கம் போதாதென்று வெங்கு ஒப்புக்கொண்டு விட்டான். முதல் நாள், வீட்டு எஜமானி கூட இருந்து வழிகளைக் காண்பித்துக் கொடுத்தாள். மறுநாள் அவனைத் தனியே விட்டுப் பார்க்க எண்ணி, தான் வெளியே வந்துவிட்டாள். உப்பு, புளி திட்டத்தை மாத்திரம் தன்னிடம் காண்பிக்கச் சொல்லியிருந்தாள். ரஸத்திற்குப் புளி அளவைக் காண்பித்துவிட்டுச் சமையலறைக்குள் சென்ற வெங்கு உடனே ஆச்சரியத்துடன் வெளியே ஓடிவந்து, 'அம்மா, வாங்கோ! வாங்கோ! அடுப்பு ஒரு தினுசாய் எரிகிறது' என்றான். உள்ளே சென்று பார்த்தால், ரஸத்திற்கு வைத்திருந்த பாத்திரத்தின் வழியாகத் தெரிந்தது அடுப்பின் ஜ்வாலை! பாத்திரம் ஈயப் பாத்திரம்.

* * *

கிருஷ்ணமாசார் ஸ்வாமி ஒரு அகத்தில் பரிசாரகர். பூர்வாச்ரமத்தில் வைதிக விருத்தியில் இருந்ததாய்ச் சொல்லிக்கொள்கிறார். ஊமைக்கு உளறுவாயன் சண்டப் பிரசண்டன் என்றபடி ஸம்ஸ்கிருத வாசனையே இல்லாத தம் எஜமானிடம் ஏதோ மந்திரம், பஞ்சாதி எல்லாம் தடபுடலாய்ச் சொல்லிக் காண்பிப்பார்.

காலையில் எழுந்திருந்து பன்னிரண்டு நாமங்களையும் பட்டையாய்ச் சாத்திக்கொண்டு சமையலறையில் நுழைவார். மகா ஆசாரம்; கண்டதையெல்லாம் சாணத்தைப் போட்டுச் சுத்தி செய்வார். ஸ்நானம் செய்யாமல் வீட்டு எஜமானி குழந்தைகள் ஒருவரும் உள்ளே பிரவேசிக்கக் கூடாது.

சொந்த சாளக்கிராமத்தைக் கொண்டுவந்து வைத்துக்கொண்டு தினந்தோறும் தவறாமல் ஆராதனம். வீட்டில் எந்தச் சிராத்தம் வந்தாலும், பிராமணார்த்தத்திற்குத் தம்மை ஒருவராகத் தாமே நியமித்துக்கொண்டு விடுவார். எல்லாருக்கும் அவரிடத்தில் ரொம்ப மரியாதை. ஆனால், முதல் பிள்ளை ராஜுவுக்கு மாத்திரம் அவரைக் கண்டால் வேடிக்கை!

ஒரு நாள் அதிகாலையில் ராஜு, பின் தெருவிலிருந்த குஞ்சாமணி ராயர் ஹோட்டலுக்குப் போனான். அது ஒரு சிறு ஹோட்டல். ஹோட்டல்காரரே முதலாளி, சமையற்காரன், பரிமாறும் பையன் எல்லாம்! அந்த ஹோட்டல் இட்டலி மிகப் பெயர் பெற்றது.

ராஜு வெகு நேரம் காத்திருந்தும், இட்டலி வராதது கண்டு ஆத்திரத்துடன் சமையலறையில் நுழைந்தான். அங்கு 'மீட் ஸேபு'க்குப் பின்புறம், கையில்

இட்டலி சட்னி சகிதமாய்ச் சேவை சாதித்தார் கிருஷ்ணமாசார்ய ஸ்வாமி.

'என்ன, ஸ்வாமீ! நீர் கூடவா? —' என்று ஆரம்பித்தான் ராஜு.

நொடிப் பொழுதில் ஸ்வாமி கையிலிருந்த இட்டலி 'மீட் ஸேபு'க்கு அடியே ஒளிந்துகொண்டது.

'என்னங்காணும், ராயரே! பூணூலுக்கு எப்போ பணம் கொடுக்கப் போகிறீர்?' என்று கிருஷ்ணமாசார் ராயரை மிரட்ட ஆரம்பித்தார்.

'பணமாய் வசூல் செய்ய முடியாவிட்டால், இட்டலியாய் வசூல் செய்து விடும்' என்று சொல்லிவிட்டு வெளியே ஓடிவிட்டான் ராஜு.

*　　　*　　　*

சமையற்காரருக்கு அரைகுறை இங்கிலீஷ் தெரிந்திருப்பது மகா உபத்திரவம். சீனு ஐயங்கார் இந்தக் கோஷ்டியைச் சேர்ந்தவர். வாசலில் யாராவது இரைந்து நியூஸ் பேப்பர் வாசித்துக் கொண்டிருந்தால், அன்று சாதம் பதமாய்க் கிடைப்பது சந்தேகம்.

சாப்பிடும்போது தீர்த்தம் வேணுமென்றால், 'ஹாட் வாட்டரா? கோல்ட் வாட்டரா?' என்றுதான் கேட்பார். ஓழிந்த நேரத்தில் குழந்தைகளுடன் இங்கிலீஷில் பேசித் தொந்தரவு செய்வதுடன், அவர்களுக்குத் தெரிந்த கொஞ்சம் இங்கிலீஷையும் பாழ் செய்வார் — சாமான்களைப் பாழ் செய்வது போதாதென்று.

ஒரு நாள் வீட்டில் 'ஷர்லீ டெம்பிளை'ப்பற்றி ஏதோ பேசிக்கொண்டிருந்தார்கள். பேச்சை அரைகுறையாய்க் கேட்டுக் கொண்டிருந்த சீனு ஐயங்கார், 'அது ஏதோ ஒரு வடதேசத்துக் கோவில் போல் இருக்

கிறது. என்ன இருந்தாலும் வடதேசத்தில் —' என்று மத்தியில் நுழைந்து ஒரு போடு போட்டார்.

வேறொரு நாள் வீட்டு எஜமானன் வைர வியாபாரி ஒருவனுடன் ஏதோ பேசிக்கொண்டிருந்து விட்டுச் சாப்பிடப் போய் உட்கார்ந்தவுடன், ஐயங்கார் வெகு பணிவாய், 'ஸார்! காரட்டு இப்போது ரொம்ப மலிவு; வீசை இரண்டணுவுக்கு மேல் எங்கு மில்லை' என்று சமயத்தில் எச்சரிக்கை செய்தார்.

* * *

செவிட்டுச் சமையற்காரன் அனுபவம் உங்களுக்கு யாருக்காவது உண்டா? இல்லாவிட்டால், நான் சொல்லுகிறேன், கேளுங்கள் : எனக்கு உண்டு.

பழைய சமையற்காரன் திடீரென்று நின்றுவிட்ட படியால், என் எஜமானர் அவசரத்திற்கு ராமுவை நியமித்தார். ராமு ஒரு டமாரச் செவிடு. முதல் இரண்டொரு நாள் காலையிலும் மாலையிலும் என்ன சமைக்க வேணுமென்பதைச் சொல்லிக்கொண்டு வந்தேன். அதன் பிறகு சமையலை மணைப் பலகையின் பின் புறத்தில் நாமக் கட்டியால் எழுதி வைப்பதென்று தீர்மானித்துவிட்டேன். பரிமாறும் பொழுது சகலமும் ஊமை - ஜாடையில்தான் நடைபெற வேணும். குழந்தைகள் சாப்பிட உட்கார்ந்தால், நானும் கூட இருந்து தீரவேணும். இல்லாவிட்டால், குழந்தைகள் கேட்பது ஒன்று, ராமு பரிமாறுவது வேறொன்ருக இருக்கும்.

ஒரு நாள் நான் வீட்டில் இல்லை. குழந்தைகளும் பள்ளிக்கூடம் போய்விட்டன. என் புருஷர் தனிமையில் சாப்பிட உட்கார்ந்தார். ராமு சாம்பாரைப் பரிமாறிவிட்டு இவர் பக்கமாய் முதுகைத் திருப்பிக்கொண்டு தயிரைக் கடைய ஆரம்பித்தான்.

கஷ்ட காலம். இவர் ஒரு மிளகாயைக் கடித்து விட்டார்! பக்கத்தில் டம்ளரில் தீர்த்தம் இல்லை. என்ன செய்வார், பாவம்! 'ராமூ! ராமூ!' என்று அலறுகிறார். ஒன்றும் பதில் இல்லை; ராமு ஏகாக்ராந்த சித்தனாய்த் தயிர் கடைந்த வண்ணம் இருக்கிறான்.

தவிக்கிறார் இவர்; அடித்தொண்டையிலிருந்து கத்துகிறார். கடைசியில் ஒன்றும் பிரயோஜனப் படாதது கண்டு, தலைவிதியே யென்று முகம் வியர்க்க, விழி பிதுங்க, ராமு எப்போது திரும்பிப் பார்ப்பானென்று அவன் முதுகையே பார்த்துக்கொண்டு விரக்தியுடன் இருந்துவிட்டார்!

வேறு என்ன செய்ய முடியும்? ராமுவும் திரும்பினான். தயிரும் கடைந்து முடிந்தது; கடைசியில் தீர்த்தமும் கிடைத்தது.

* * *

முன் காலத்தில் இருந்தவர்களுக்கு இப்படிப்பட்ட ரஸமான அனுபவங்கள் கிடைத்திருக்குமா? எப்படிக் கிடைத்திருக்கும்? அந்தக் காலத்தில்தான் சமையல் வேலை ஸ்திரீகளின் பொறுப்பாய் இருந்ததே! இல்லாவிட்டால் திருவள்ளுவர் தம் மனைவியைப்பற்றிப் பாடும்பொழுது 'அடிசிற்கினியாளே!' என்று ஆரம்பிப்பாரா?

'அடிசிற் கினியானே! அன்புடையானே!
குடிதனைத் தாங்கி நின்ற குன்றே!—நொடியில்
மறைந்தனையே எம் மேல் மனமிரக்கமின்றி!
இறந்தவரே நாங்கள் இனி'

என்று இந்தக் காலத்தில் ஓடிப்போய்விட்ட சமையற்காரனைக் குறித்து வேண்டுமானால் பாடலாம்.

# 10. ஸங்கீத ரஸிகன்

ஸங்கீதம் வெகு மலிவாய்க் கிடைக்கும் காலம் இது. மூலைக்கு மூலை ஸங்கீத சபைகள்; நாலு அணு கொடுத்தால் நாலு மணி நேரம் சினிமாவில் ஓயாமல் ஸங்கீதம்; அதுகூடச் செலவில்லாமல் கடற்கரையில் ரேடியோ ஸங்கீதம். ஒரு தம்பிடி ஊசிதான் செலவு; எவ்வளவு பெரிய வித்வானையும் நமது வீட்டுக்கு வந்து (பிளேட்டில்) ஒரு பாட்டுப் பாட வைத்துவிடலாம்!

தற்சமயம் ஸங்கீதம் கிடைப்பது அவ்வளவு சுலபம்; ஆனால், ஸங்கீத ரஸிகனாவது அவ்வளவு சுலபமல்ல. என்றாலும் கொஞ்சம் பிரயாசைப்பட்டால் ரஸிகத் தன்மை இருப்பதாய்க் காண்பித்துக்கொள்ளலாம்.

பதினைந்து நாட்களுக்கு ஒரு தரம் ஒரு 'வானொலி'ப் பத்திரிகையை வாங்குங்கள். வீட்டிலோ, காப்பி ஹோட்டலிலோ, கடற்கரையிலோ, ரேடியோவுக்கு எதிரில் உட்காருங்கள். 'அந்நவுன்ஸர்' சொல்லச் சொல்ல பத்திரிகையை ஒப்பிட்டுப் பார்த்துக்கொண்டு ரேடியோவைக் கேட்டுக்கொண்டு வாருங்கள். மூன்று மாதங்களில் நீங்கள் அரைப் பங்காவது ஸங்கீத ரஸிகர் ஆகாவிட்டால் என்னைக் கேளுங்கள்.

கூடவே இன்னொன்றும் செய்யவேண்டும். 'ஆனந்த விகட'னில் 'ரேடியோ எப்படி?' என்னும் பாகத்தைத் தவறாமல் வாசித்துக்கொண்டு வரவேண்டும்; பொது ஜனத்தின் கடைந்து எடுத்த அபிப்பிராயம் எப்படியிருக்கிறது என்பது அங்கேதான் கிடைக்கும்.

இதற்குள் அநேகமாய் உங்களுக்குப் பிரபல வித்வான்களின் பெயர் - ஜாபிதா பாடமாகி விடும். 'ரேடியோ எப்படி?' யின் நிருபரது உதவியால் பொது ஜன நோக்கத்தின் போக்கும் தெரிந்துவிடும்.

இனிமேல் உங்கள் ரஸிகத் தன்மையைப் பகிரங்கப்படுத்த ஆரம்பிக்கலாம். 'ஆனந்த விகடன்' நிருபர் தோரணையில் ஆரம்பித்துவிடாதீர்கள். நினைத்தபடியெல்லாம் சொல்லும் உரிமை பத்திரிகைக்காரருக்கு உண்டு ; உமக்கும் எனக்கும் கிடையாது ; ஞாபகமிருக்கட்டும்.

இந்த மூன்று மாதங்களுக்குள் ஸங்கீத சபை மெம்பராய்ச் சேர்ந்துவிடுங்கள்.

பிரபல வித்வான் கச்சேரிக்கு வராத ஒருவர், 'இன்று கச்சேரி எப்படி? ஸார்!' என்று கேட்டால் கீழ்க்கண்ட மாதிரி பதில் சொல்ல முதலில் பழகிக் கொள்ளுங்கள்: 'ஐயங்கார் கச்சேரியைப்பற்றிக் கேட்கவும் வேணுமா? பிரம்மானந்தம்! ஆனாலும் கொஞ்சம் வயதாகிவிட்டது!' 'சுப்புலக்ஷ்மிக்குத் தெரியாமலா "இசைவாணி கோகிலகானம்" என்று பட்டம் கொடுத்தார்கள்? என்ன இருந்தாலும் ஸ்திரீ - கண்டம் ஸ்திரீ - கண்டம்தான் ஸார்!' — விவரங்கள் ஏதாவது கேட்க ஆரம்பிக்கு முன் அவ்விடத்தை விட்டு நகர்ந்துவிடுங்கள்.

இரண்டாந்தர வித்வான் கச்சேரியைப்பற்றிச் சொல்லுவதாயிருந்தால், 'பாதகமில்லை, சுமாராய் இருந்தது!' என்று பொதுவாய்ச் சொல்லிவிடுங்கள். அதிக நேரம் தாமதித்து வார்த்தையை வளரவிடவேண்டாம்.

அதாவது, பொதுஜன அபிப்பிராயத்தை எதிரொலிக்க முதலாவது பழகிக்கொள்ளுங்கள். சொந்த ஒலியைக் காட்டவேண்டாம். காலிப் பாத்திரத்தின் ஒலி என்று எவனுவது ஒரு குறும்பன் சொல்லி வைப்பான் !

உமக்கு வயது என்ன? சுமார் 70 இருக்குமா? அப்படியானுல் ரஸிகத் தன்மையைக் காண்பிக்க வேறொரு வழி இருக்கிறது. யாருக்கும் எதற்கும் ஒரே பாடம்தான். 'என்ன இருந்தாலும் பழைய காலத்துப் பாட்டு பாட்டுத்தான், ஸார் ! ஒரு மஹா வைத்திய நாதையர் என்ன ! திருக்கோடிக்காவல் கிருஷ்ணையர் என்ன ! ஒரு மாமுண்டியா பிள்ளை என்ன ! அவர்கள் விஷயத்துக்கு இதெல்லாம் ஈடா, எதிரா ? அந்த ஸங்கீதத்தையெல்லாம் இந்தக் காது கேட்டாய்விட்டது. உம் ! இந்தக் காலத்து ஸங்கீதத்தையும் கேட்டுக்கொண்டுதான் இருக்கிறது !' என்று சொல்லிவிட்டு அஸ்வாரஸ்யமாய்த் தலையை யாட்டவேண்டும்.

கச்சேரியில் உட்கார்ந்தால், தக்கபடி தலையாட்டுவது ரஸிகனுடைய ஓர் இன்றியமையாத அம்சம். கண்களை மூடிக்கொண்டு, சிறிது சிறிது யானை போல் தலையை அசைத்து, சமயோசிதமாய் ஒரு 'த்ஸு ! த்ஸு !' வோ, அல்லது ஒரு 'ஆஹா' வோ போடுவது உயர்ந்த ஸங்கீத ரஸிகனின் லட்சணம். எப்படி யெப்படித் தலையாட்டவேண்டு மென்பதை வருணிப்பது கஷ்டம். கச்சேரிக்குப் போனுல் அங்கு வரும் ரஸிகர்களைப் பார்த்து வெகு சுலபமாய்க் கற்றுக்கொள்ளலாம்.

கொஞ்ச நாள் வரையில் கச்சேரியில் இடம் பார்த்து உட்காருவது நலம். நன்ருய்த் தெரிந்தவர் பக்கத்திலாவது, ஒன்றும் தெரியாதவர் பக்கத்திலாவது உட்கார வேண்டும்.

தெரிந்தவர் பக்கத்தில் உட்கார்ந்தால், ‘இது என்ன ராகம்?’ என்று நம்மைக் கேட்டுவிடுவார்களோ என்னும் பயமில்லை. தெரியாதவர் பக்கத்தில் உட்கார்ந்தாலும் அந்தப் பயமில்லை. ஏனெனில் அப்படிக் கேட்டுத் தங்கள் ‘தெரியாமை’யைக் காட்டிக்கொள்ள யாராவது இஷ்டப்படுவார்களா?

நம்மைப் போல் ரஸிகளுகிக்கொண்டு வரும் ‘ரெண்டும் கெட்டான்’ ஆசாமி பக்கத்தில் உட்கார்ந்தால்தான் ஆபத்து. நடுவில் இது என்ன ராகமென்று கேட்டு வைப்பான். நமக்கும் அது விஷயத்தில்தான் சந்தேகம். இவ்வளவு தூரம் பிரமாதமாய்த் தலையை ஆட்டிக்கொண்டிருந்துவிட்டு, ‘தெரியாது’ என்று சொல்ல முடிகிறதா? சாமர்த்தியமாய்த் தப்பித்துக் கொள்ளவேண்டும்.

பாட்டு அனுபவிப்பதை நடுவில் கெடுத்துக் கொண்டு பேச இஷ்டமில்லாதது போல் அபிநயித்துக் கையை அமர்த்தி ஜாடை செய்வது ஒரு விதம்; இது ‘காம்போதி மேளம்’ என்று ஸங்கீத பரிபாஷையில் ஏதோ சுருக்கமாய்ச் சொல்லி நிறுத்திவிடுவது வேருெரு விதம். வேறு விதியில்லாமல் நேரிடையாய்ப் பதில் சொல்லவேண்டி வந்துவிட்டால், தோன்றிய ராகத்தின் பெயரைக் கேட்டவனுக்கு மாத்திரம் சொல்லவும். அன்னியர் நாலு பேர் காதில் படும்படி சொல்ல வேண்

டாம். வேண்டுமானல், அவர்கள் கஷ்டப்பட்டுத் தெரிந்துகொள்ளட்டுமே! நாம் ஏன் வீண் ஆபத்திற்கு உள்ளாக வேண்டும்?

ஸங்கீத சபை ஒன்றுக்கு ஒருவர் பொக்கிஷதாராய்த் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவ்வளவு பெரிய பதவி கிடைத்த பிறகு தமக்கு ஸங்கீதத்தைப் பற்றி ஒன்றும் தெரியாமல் இருப்பது தவறு என்று அவருக்குத் தோன்றியது. உடனே ரஸிகராகத் தலைப்பட்டார்.

சபையின் கமிட்டி மீட்டிங்கில் ஒரு தீர்மானம் கொண்டுவந்து அதைச் சாமர்த்தியமாய்ப் பொக்கிஷதார் நிறைவேற்றிக்கொண்டார். சபையின் மெம்பர்கள் கச்சேரிக்கு முன் புரோகிராம் அச்சடித்துக் கொடுக்க வேண்டுமென்று தொந்தரவு செய்வதாய் ஒரு கமிட்டி மெம்பர் சொன்னர். அதற்குப் பணம் இல்லையென்று பொக்கிஷதார் எதிர்த்தார்; அதற்குப் பதிலாய்க் கச்சேரியில் ஒரு போர்டை (கரும் பலகையை)த் தொங்க விட்டு, வித்வான் பாடப் பாட அதில் ராகத்தையும் தாளத்தையும் எழுதினல் போதுமென்று யோசனை சொன்னர். இதற்குச் செலவு அதிகம் இல்லாததால், அனைவரும் ஆமோதித்தார்கள். ஆனல், போர்டில் எழுதுவது யார்? இந்த உத்தியோகத்தை வெகு உற்சாகத்துடன் பொக்கிஷதார் ஏற்றுக்கொண்டார்.

அடுத்த கச்சேரியில் போர்டு தொங்கவிடப்பட்டது. பொக்கிஷதார் முன் ஜாக்கிரதையாக வித்வானிடம் அவர் பாடப் போகும் பாட்டுக்களின் ராகங்களையும் தாளங்களையும் ரகசியமாய்க் குறித்து வாங்கிக் கொண்டார்.

கச்சேரி ஆரம்பமாயிற்று. பொக்கிஷதார் போர்டின் பக்கத்தில் நின்றுகொண்டார். பாடகர் பாட்டை ஆரம்பிக்கவேண்டியதுதான் தாமதம்; உடனே பாட்டின் ராகமும் தாளமும் போர்டில் வந்துவிடும்.

மெம்பர்களுக்குப் பரம சந்தோஷம். அத்துடன் 'நம் பொக்கிஷதார் இவ்வளவு ஞானஸ்தரா? இத்தனை நாளாய் நமக்குத் தெரியாதே!' என்று ஆச்சரியத்துடன் ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டார்கள்.

அடுத்தடுத்துக் கச்சேரிகள் நடந்தன. பொக்கிஷதார் தம் காரியத்தை வெகு அழகாய் நடத்தி வந்தார். ஜனங்களுக்கு நாளுக்கு நாள் அவரிடம் மதிப்பு அதிகரித்துக்கொண்டே வந்தது.

ஒரு நாள் ஒரு பெரிய வித்வானுடைய கச்சேரி நல்ல ஞானஸ்தரான ஒரு கனவான் முன் வரிசையில் உட்கார்ந்திருக்கிறார். கச்சேரி பிரமாதமாய் நடந்துகொண்டிருக்கிறது. பொக்கிஷதார் போர்டில் எழுதிக்கொண்டேயிருக்கிறார்.

கனவான் வித்வானை ஏதோ ஒரு கீர்த்தனத்தைப் பாடும்படி கேட்டார். கீர்த்தனையின் பெயர் காதில் விழுந்ததுதான் தாமதம்; உடனே பொக்கிஷதார் கனவானைக் கண்களில் தீப் பொறி பறக்கத் திரும்பிப் பார்த்தார். இப்படிக் கேட்பது ஸங்கீத சபையின் சட்டத்திற்கு விரோதமல்லவா?

என்ன இருந்தால் என்ன? கேட்டது கேட்டாயிற்று. கேட்டவரும் பெரிய கனவான்; அவரைத் தடுத்துச் சொல்ல ஒருவராலும் முடியாது. பாடகரும்

கேட்டபடி ‘பரியாசகமா’ என்னும் கீர்த்தனத்தைப் பாட ஆரம்பித்துவிட்டார்.

ஜனங்கள் ஆவலுடன் போர்டைப் பார்த்தார்கள். போர்டில் ஒன்றும் இல்லை !

பல்லவி முடிந்து அனுபல்லவி ஆரம்பம் ஆயிற்று. பொக்கிஷதார் ஜேபியிலிருந்து ஒரு காகிதக் கத்தையை எடுத்துச் சபையின் பக்கம் முதுகைத் திருப்பிக்கொண்டு அவசர அவசரமாய்ப் புரட்டிக் கொண்டிருந்தார்.

சரணம் ஆரம்பம் ஆயிற்று ; முடியவும் முடிந்தது. போர்டு காலியாக இருந்தது ; போர்டின் பக்கத்தில் பொக்கிஷதார் நின்ற இடமும் காலியாக இருந்தது !

இந்தச் சம்பவத்தின் நீதி உங்களுக்குத் தெரிந்த தல்லவா ? ‘உனக்குத் தெரிந்ததா ?’ என்று என்னைக் கேட்பீர்கள். எனக்கும் தெரியும் ; தெரிந்ததால்தான் சபையில் போர்டில் எழுதாமல் காகிதத்தில் கட்டுரை யாய் எழுதினேன்.

## 11. குடிக்கூலி

‘ஒருவன் பல வீடுகள் கட்டுவதாம் ! மற்றவர்கள் அவைகளில் வாடகை கொடுத்து வசிப்பதாம் ! என்ன அநியாயம் ! ஒவ்வொருவனுக்கும் சொந்தத்தில் ஒரு வீடு கட்டாயம் இருக்கவேண்டும்’ என்று மேல் நாட்டார் சிலர் கிளர்ச்சி செய்துவருகிறார்களாம்.

ஆனால், குடிக்கூலி வீட்டின் வேதாந்தம் அவர்க ளுக்கு என்ன தெரியும் ? ஜீவாத்மா பல ஜன்மங்கள் எடுப்பதும், வெவ்வேறு சரீரங்களில் புகுவதும் நமக்கல் லவோ தெரியும் ? இதற்கு மிகவும் பொருத்தமான உப

மானம் என்ன வென்று யோசித்துப் பாருங்கள் : வீடு வீடாய்க் குடித்தனம் போவதுதான் ! இத்துடனு ? வீடு குடி புகும்போதும் கஷ்டம் ; காலி செய்யும்போதும் கஷ்டம் ; ஜீவனின் ஜனனுவஸ்தை, மரணுவஸ்தைகளைப் போல. இந்த வேதாந்த ஸாரம் குடிக்கூலி வீடு என்பது இல்லாவிட்டால் நமக்கு இவ்வளவு சுலபமாய் விளங் குமா ?

சொந்த வீடு இல்லை யென்று பலர் வருத்தப்படு கிறூர்கள். ஒரு விதத்தில் இது சரியன்று. நமக்குச் சொந்த வீடு இருந்துவிட்டால் அதிலேயேதான் நாம் வசிப்போம். வாடகை கொடுத்து இன்னும் சௌகரிய மான வீட்டிற்குக் குடிப் போக நமக்கு வசதியிருந் தாலும் அப்படிச் செய்ய நமக்கு மனம் வருகிறதா ?

எல்லாவற்றிற்கும் மேலாய், வீடு தேடும் ரஸமான அனுபவம் குடிக்கூலி வீடுகள் இல்லாவிட்டால் நமக்கு எப்படி ஏற்படும் ?

தெருவில் போய்க்கொண்டிருக்கும் ஒருவன் முகத் தைப் பார்த்தவுடனேயே, அவன் வீடு தேடுகிறுனென்று சொல்லிவிடலாம். அது ஓர் அலாதிக் களை ; இருபுற மும் 'டு லெட்' போர்டு இருக்கிறதா என்று கண்கள் தேடிக்கொண்டே யிருக்கும். ஒரு விடுமுறை நாள் காலையிலோ மாலையிலோ, காலில் புழுதி படிந்த செருப்பு, முகத்தில் ஓர் ஆயாசமான தோற்றம், இடப்புறமும் வலப்புறமும் மாற்றி மாற்றிப் பார்வை — இந்த லட்ச ணங்களுடன் தெருவில் ஒருவனைக் கண்டால், 'உங் களுக்குக் குடிக்கூலிக்கு வீடுவேண்டுமா ?' என்று தைரிய மாய் அவனை நாம் கேட்டுவிடலாம்.

இந்தத் தேஜஸுடன் தெருவில் வந்துகொண்டிருக்கும் சுப்பு 'டு லெட்' தொங்கவிட்டிருக்கும் ஒரு வீட்டுக்குள் நுழைகிறான். வீட்டு விசாரணை ஆரம்பமாகிறது ; இடம் காட்டப்படுகிறது ; வாடகையின் விவரம் சொல்லப்படுகிறது. வீடு கூட்டுகிறவள் சம்பளம், விளக்கு சார்ஜ், கக்கூஸ்காரி சம்பளம் முதலியவைகளில் சுப்பு ஏற்கவேண்டிய பாகத்தை வீட்டுக்காரர் தெரிவிக்கிறார். சுப்பு ஒப்புக்கொண்டு அட்வான்ஸைக் கொடுக்கிறான். பணத்தை வாங்கிக்கொண்ட வீட்டுக்காரர், 'உங்களுக்கு எத்தனை குழந்தைகள் ஸார்?' என்று விசாரிக்கிறார். சுப்பு கபடமில்லாமல் ஈசுவரன் தனக்கு அளித்திருக்கும் சந்ததி ஐந்து என்று தெரிவிக்கிறான். வீட்டுக்காரர் முகத்தில் உற்சாகம் குறைந்துவிடுகிறது. அதிகம் சொல்வானேன்? அட்வான்ஸை வீட்டுக்காரர் திருப்பிக் கொடுத்துவிடுகிறார்.

'இவர் வீட்டுக்குக் குடித்தனம் வருகிறவன் மலடாய் இருக்கவேண்டும் போலிருக்கிறது!' என்று முணுமுணுத்துக்கொண்டே சுப்பு வெளியே வருகிறான். பெரிய சம்சாரத்தால் ஏற்படும் வேறு கஷ்டங்கள் போதாவா? வீடு தேடுவதில்கூடவா இதனால் கஷ்டம் ஏற்படவேண்டும்?

மறுபடியும் வீட்டு வேட்டை! இருட்டும் வரையில் சுப்பு அலைந்து அலைந்து தேடுகிறான்; இரவுக்குள் வீடு தேடி அட்வான்ஸ் கொடுத்துவிட்டு வருவதாய் அவன் தன் மனைவியிடம் காலையில் உறுதிவாக்குக் கொடுத்து வந்திருக்கிறான். அவன் மனைவிக்கும் குடியிருக்கும் வீட்டுக்காரன் மனைவிக்கும் பெரிய மனஸ்

தாபம். மறுதினமே வீட்டைக் காலி செய்வதாய்ச் சபதம் ஏற்பட்டிருக்கிறது.

சுப்பு, திரிந்து திரிந்து மாலை 8-மணிக்கு ஒரு வீட்டை ஏற்பாடு செய்துகொண்டு, வீடு திரும்பி முக மலர்ச்சியுடன் தன் மனைவிக்குச் சந்தோஷ சமாசாரத்தைத் தெரிவிக்கிறான். அம்மாமிக்குப் பிரம்மானந்தம். தன் கணவன் சாமர்த்தியத்தைப் புகழ்ந்து பரவசமாகிறாள். இரவெல்லாம் சாமான்கள் கட்டப்படுகின்றன. மறுநாள் சூரியோதயத்திற்குப் பிரயாணம்.

புது வீட்டில் வந்து சாமான்களைப் பங்கு பாடு செய்து சமைத்துச் சாப்பிடும்போது மணி 3 ஆயிற்று. மாலை ஐந்து மணிக்குப் 'பிசு பிசு'வென்று தூற ஆரம்பித்தது ; 8 மணிக்குள் பெரிய மழை. குடித்தனத்திற்கு விட்ட பாகத்தில் ஒரு அறைக்கும் மேலே கூரை இல்லையோவென்று சந்தேகிக்கும்படி ஆகிவிட்டது ; அவ்வளவு ஒழுக்கு !

அம்மாமிக்குக் கோபம் பொங்கிவந்தது ; 'நீங்கள் வீடு பார்த்தது வெகு அழகாய் இருக்கிறது!' என்று சீறினாள்.

'எனக்கு மூக்கில் வேர்க்குமா ஒழுகுமென்று ?' கொஞ்ச நேரம் சிறு குடும்பச் சண்டை. சண்டைக்கப்புறம் வேறு வீடு பார்க்க வேண்டுமென்று தீர்மானம். அதுவும் மறுநாளே.

'வீட்டுக்காரன் அட்வான்ஸைத் திருப்பிக் கொடுக்க மாட்டான். அப்படித்தான் ஒப்பந்தம். ஒரு மாதத்தை எப்படியாவது கழித்துவிடுவோமே' என்று சுப்பு சொல்லிப் பார்த்தான்.

‘நன்றாயிருக்கிறது! வருகிறது மழைக்காலம். அட்வான்ஸ் போனால் போகிறது. ஓரத்தாளோடு வாழலாம், ஒழுக்கோடு வாழ முடியுமா?’

மறுநாள் மறுபடியும் வீடு தேட ஆரம்பம்! ஒண்டுக் குடித்தன மாகாத்மியத்தில் ஒரு படலம் இது.

தனி வீடு மாறுவது இவ்வளவு அவசரத்தில் ஏற்படாது; ஆற அமர நடக்கும்.

என்னுடைய வீட்டுக்கு பந்துக்கள் பலர் வந்திருந்தார்கள்; வீட்டின் அசௌகரியம் கொஞ்சம் கொஞ்சமாய்ப் புலப்பட்டது; அதாவது வந்தவர்கள் வீட்டின் அசௌகரியங்களை எடுத்துக்காட்ட ஆரம்பித்தார்கள். திரும்பத் திரும்பச் சொன்னால் எதுவும் வேரூன்றுவது சகஜம்தானே? வீடு மாற்ற வேண்டுமென்று தீர்மானம் ஏற்பட்டுவிட்டது.

‘வீடு பார்ப்பதைத் திருவல்லிக்கேணியில் கோயிலுக்குச் சமீபமாய்ப் பாருங்கள்’ என்றார், என் வயது முதிர்ந்த மாமனார். பள்ளிக்கூடம் கிட்ட இருக்கவேண்டுமென்றாள் என் பெண். சமையல் அறையில் குழாய் இருக்கவேண்டுமென்றேன் நான். பீச்சுக்கு அருகாமையாய் இருப்பது நல்லது என்றார்கள் வீட்டிற்கு வந்த விருந்தாளிகள். வேலைக்காரன் தனக்கு அதிக தூரமாய் இல்லாதிருக்கும்படி பணிவாய்க் கேட்டுக்கொண்டான். இதற்குப் பின் சமையற்காரன், டிரைவர், சிநேகிதர்கள் எல்லாரும் அவரவர்கள் சௌகரியத்தை என் கணவரிடம் சொல்லிக்கொண்டார்கள். என் கணவர் தம்முடைய சௌகரியம் என்னவென்பதை மறந்துவிட வேண்டியதாயிற்று.

என் கணவர் வீடு தேட ஆரம்பித்தார். வீடு வீடாய்ப் பார்த்து வந்து அவைகளைப்பற்றி எங்களிடம் சொல்வார். ஒரு வீடு எல்லோருக்கும் பிடித்திருந்தது ; ஆனால், பழகின கார் டிரைவர், வீடு அவ்வளவு தூரத்தில் இருந்தால் தான் நின்றுவிட வேண்டுமென்பதைத் தெரிவித்தான். வேறொரு வீடு நன்றாய் இருந்தது. தெரு நன்றாய் இல்லை. இரண்டும் நன்றாயிருந்த மற்றொரு வீட்டிற்கு அக்கம் பக்கம் நன்றாயில்லை. ஒரு வீட்டிற்கு எல்லாம் தீர்மானித்து அட்வான்ஸ் கொடுக்கப்போகும் சமயத்தில், வீடு 'ஆகி' வந்ததில்லை யென்று யாரோ சொல்லிவிட்டார்கள்.

ஒவ்வொரு வீட்டையும் முதலில் பார்ப்பது என் புருஷர். பிறகு பார்க்கவேண்டியது நான், என் குழந்தைகள், என் மாமனார், என் விருந்தாளிகள் ஆகிய எல்லோரும். 'ஊர் கூடிச் செக்குத் தள்ளி' ஆகவேண்டும். யாராவது ஒருவர் ஆட்சேபித்தால் தீர்மானம் தடைபட வேண்டியதுதான். என் புருஷருடைய பொறுமையே பொறுமை! அவரும் வீடு வீடாய்ப் பார்த்துச் சொல்லிக்கொண்டே வந்தார்.

கடைசியில் ஒரு வீட்டை எல்லாருமாய் போய்ப் பார்த்தோம் ; என் மாமனார் மாத்திரம் வரமுடியவில்லை. வீடு தேடித் தேடி அலுத்துப்போன எங்களுக்கு இந்த வீட்டுக்கு இணை எந்த வீடும் இல்லை யென்று தோன்றியது. எல்லா விதத்திலும் சௌகரியம்.

வீட்டுக்காரன், 'உங்களுக்குப் பிடித்திருந்தால் அட்வான்ஸ் இப்போதே கொடுத்துவிடுங்கள். பல பேர்கள் வந்து கேட்டுக்கொண்டிருக்கிறார்கள்' என்றான்.

நான் ரகசியமாய் என் கணவரிடம், ‘இதெல்லாம் வெறும் பிகு. மாமனுர் நாளைக் காலை வந்து பார்த்துச் சொல்வதற்குள் முழுகிப் போய்விடாது’ என்றேன்.

‘நாளைக் காலையில் வந்து அட்வான்ஸ் கொடுக்கிறேன், ஸார்! கையில் பணம் கொண்டுவரவில்லை’ என்று என் கணவர் சொல்லிவிட்டு வீட்டுக்காரனிடம் விடைபெற்றுக்கொண்டார்.

இரவு ஒன்பது மணிக்கு எல்லாரும் வீடு திரும்பினேம். என் மாமனுர் நாங்கள் கொடுத்த வர்ணனையிலிருந்தே திருப்தி அடைந்துவிட்டார்; தாம் வீட்டைப் பார்க்கவேண்டியது அவசியமில்லையென்று சொல்லிவிட்டார்.

மறுநாள் காலை நல்ல சகுனம் பார்த்துக்கொண்டு பணத்துடன் என் கணவர் புறப்பட்டார். நான் சாமான்கள் கட்ட ஆரம்பித்தேன். அயல் அண்டை வீட்டுக்காரர்களிடம் நான் வீடு மாற்றப் போவதைத் தெரிவித்தேன்.

சுமார் பத்து மணிக்கு என் கணவர் திரும்பி வந்தார்.

‘ஏன் இத்தனை நேரம்? வீட்டைச் சுத்தம் செய்ய ஏற்பாடு செய்துவிட்டு வந்தீர்களா?’ என்றேன்.

‘அதனுல் தாமதம் இல்லை; நான் போகும் முன்பே வீட்டைச் சுத்தம் செய்துகொண்டிருந்தார்கள்.’

‘வீட்டுக்காரன் ரொம்ப நல்ல மாதிரி. நேற்றே நான் சொல்லவில்லையா? வீட்டை நன்ருய் வைத்துக் கொள்ளுகிறவன்; நாமும் வெகு சுத்தமாய் வைத்துக் கொள்ளவேண்டும் அந்த வீட்டிற்குப் போனுல்.’

'போனால்தானே? அந்த "நல்ல மாதிரி" வீட்டுக்காரன் நேற்று இரவே வேறு ஒருவரிடம் அட்வான்ஸ் வாங்கிக்கொண்டு விட்டானாம். காலையில் வீட்டைச் சுத்தம் செய்துகொண்டிருந்தது அவர்கள்.'

எனக்கு ஒன்றும் சொல்லத் தோன்றவில்லை.

'இன்று சாயந்திரம் எங்கே வீடு பார்க்கலாம்?' என்றார் என் கணவர் வெகு சாந்தமாய்.

அன்றையிலிருந்து வீடு மாற்றும் எண்ணத்தை நான் விட்டுவிட்டேன்.

'விவாகத்தைச் செய்து பார், வீட்டைக் கட்டிப் பார்' என்பது பெரியோர் பழமொழி. அந்தக் காலத்தில் குடிக்கூலி வீடுகள் கிடையாது போல் இருக்கிறது. இருந்திருந்தால், 'விவாகத்தைச் செய்து பார், வீட்டைத் தேடிப் பார்' என்றுதான் பழமொழி ஏற்படுத்தியிருப்பார்கள்.

## 12. சொந்த வீடு

சொந்த வீட்டால் ஏற்படும் சந்தோஷம் சொந்த வீட்டில் வசிப்பதில் அவ்வளவு இல்லை; சொந்த வீடு ஒன்றைத் தேடிக்கொள்வதில்தான் இருக்கிறது.

சொந்த வீடு ஒன்று வேண்டுமென்ற எண்ணம் வரவேண்டியதுதான் தாமதம்; நகை மேல் ஆசை குறைந்துவிடும்; புடைவை மேல் ஆசை குறைந்துவிடும்; ஆகாரத்தைக்கூடக் குறைத்துக்கொண்டு பணம் சேர்க்க ஆரம்பித்துவிடுவோம்.

பணம் கொஞ்சம் சேர்ந்த பிறகு ஒரு சஞ்சலம்: கட்டின வீடாய் வாங்குவதா? அல்லது நிலம் வாங்கி

வீடு கட்டுவதா? நமக்கு இருக்கும் குழப்பம் போதா தென்று நம் நண்பர்கள், உறவினர்கள் எல்லோரும் வெகு சிரத்தையாய் அப்போதுதான் யோசனை சொல்ல வருவார்கள். இதற்கிடையில் வீட்டு வியாபாரத் தரகன் எப்படியோ மோப்பம் பிடித்துக்கொண்டு நம் வீடு தேடி வந்துவிடுவான்.

தரகனுக்குக் காப்பி ஹோட்டல் செலவு, வண்டிச் சத்தம் உள்பட யாவும் நாம் கொடுத்து, தெருத் தெரு வாய் அவனுடன் பிரயாணம் ஆரம்பமாகும்.

ஒரு வீட்டிற்குச் சமையல்கட்டு நன்ருயிராது; இன் ெனாரு வீட்டிற்கு வெளிப்பார்வை அழகாய் இராது; வேெறாரு வீடு சந்து குத்தலோ என்று சந்தேகம்.

ஒரு பெரிய பங்களா மலிவாய்க் கிடைக்கும்போ லிருக்கிறது. அவ்வளவு சரசமாய்க் கிடைப்பது எப்படி யென்று நமக்குச் சந்தேகம் உண்டாகிவிடுகிறது. வீட் டுக்காரன் கடன் உபத்திரவத்தால் வந்த விலை போது மென்று வீட்டை விற்றுவிடுவதாய்த் தரகன் சொல்லு கிருன். இதில் நமக்கு நம்பிக்கை ஏற்படுவதில்லை. அக்கம் பக்கத்தில் விசாரணை செய்து யாராவது ஒருவர் அந்த வீடு ஆகிவந்ததில்லை யென்று சொன்ன பிறகுதான் நமக் குத் திருப்தி. ஏனென்ருல், குறைந்த விலைக்கு வந்த ஒரு நல்ல வீட்டை ஏமாந்துபோய் நாம் விட்டுவிட்டதாய் இருக்கக்கூடாதல்லவா? தவிர, தரகன் நம்மை ஏமாற் றப் பார்த்ததாகவும், அதற்கு அகப்படாமல் நாம் தப்பித் துக்கொண்டு விட்டதாகவும் எண்ணுவதில் வேெறாரு விதத் திருப்தி.

எல்லாம் பொருத்தமாய் வீடு இருந்தால் கையில் இருக்கும் பணம் போதாது. இப்படி அலைந்து அலைந்து சலித்துக் கடைசியில் கையிலுள்ள பணத்திற்குள் நிலம் வாங்கி வீடு கட்டிக்கொள்வதென்று தீர்மானம். மாதக் கணக்காய் நம்முடன் அலைந்த தரகாளிக்குக் காப்பியும் டிபனும்தான் லாபம்.

வீடு கடைக்கால் எடுத்தது முதல் கிருகப்பிரவேசம் ஆவதற்குள் எந்தெந்த விதமாய் மாறுமென்பது நம்மால் சொல்ல முடியாது. பார்க்க வருகிறவர்கள் ஒவ்வொருவரும் ஒரு யோசனை சொல்லுவார்கள். தன் வீட்டு மாட்டுத் தொழுவத்திற்குப் புதிதாய்க் கூரை போட்டுக்கொண்டவன்கூட ஒரு இஞ்சினீயராகி விடுவான், ஒரு அபிப்பிராயம் சொல்லுவான்.

ஆனால், வீடு கட்டி முடியும் வரையில்தான் இவ்விதம் பார்க்க வருகிறவர்களால் சொந்தக்காரர்களுக்குக் கஷ்டம். வீடு முடிந்த பின் பார்க்க வருகிறவர்களுக்குத்தான் கஷ்டம்.

* * *

ஸப் ஜட்ஜ் ஒருவர் வீடு கட்டினார். அவர் மனைவி சாரதா எனக்கு சிநேகம்; தன் வீட்டை வந்து பார்க்கும்படி என்னை அழைத்துக்கொண்டேயிருந்தாள். ஒரு நாள் மத்தியானம் 3 மணிக்குச் சென்றேன்.

சாரதாவிற்கு அளவில்லாத சந்தோஷம்; என்னை வெகு அன்புடன் வரவேற்றாள். ஹாலில் உட்கார்ந்தபடியே வீட்டுக்கு நிலம் வாங்கினது முதல் கிருகப்பிரவேசம் வரையில் எல்லாவற்றையும் சொல்லி முடித்தாள். இந்த வீடு கட்டிய பிறகு சாரதா ஒரு இஞ்சினீயர்

உத்தியோகத்திற்குத் தகுதியானவள் என்று எனக்குத் தோன்றிவிட்டது ; கடைக்காலின் பலம், செங்கல் நோட்டம், மரப் பரீட்சை, கர்டர் ஏற்றுவது, சிமின்டின் ரகசியங்கள், கான்கிறீட்டின் மர்மங்கள், பெயிண்டின் தராதரங்கள் இவைகளைப்பற்றி யெல்லாம் அப்படி ஒரு போடு போட்டாள் சாரதா.

அடுத்தபடி வீட்டிற்குள் திக்கு விஜயம் ஆரம்பமாயிற்று. வாசல் 'போர்ட்டிகோ'விலிருந்து கொல்லைப் புறக் கடைசி வரையில் ஒரு அங்குலம் விடாமல் சாரதா எனக்குக் காண்பித்தாள். கூடம், தாழ்வாரம், இரண்டாம்கட்டு முதலிய கர்நாடக விஷயங்களெல்லாம் இங்கு கிடையா. 'போர்ட்டிகோ, டிராயிங் ரூம், டிரெஸ்ஸிங் ரூம், ஸேப் ரூம், கிச்சன், டயினிங் ஹால், பெட் ரூம், கிளாஸெட்' என்றெல்லாம் இங்கிலீஷ் மயமாய் அடுக்கிக் கொண்டே வந்தாள் சாரதா. சில வார்த்தைகளுக்குத் தான் அர்த்தம் தெரிந்தது; அதுவும் அந்தந்த அறைகளில் இருந்த சாமான்களைப் பார்த்த பிறகுதான். உதாரணமாய், அடுப்பைப் பார்த்தவுடன் கிச்சன் என்றால் என்னவென்று தெரிந்தது. தெரியாத பெயர்களை யெல்லாம் ஜாக்கிரதையாய் ஞாபகத்தில் வைத்துக்கொண்டேன்.

கடைசியாய் கக்கூஸ் அருகாமையில் வந்தோம்; உள்ளே வந்து பார்க்கும்படி சாரதா என்னை அழைத்தாள். நான் தயங்கினேன் ; சாரதா என்னை விடுவதாயில்லை. தான் கட்டியிருக்கும் பம்பாய் கக்கூஸைக் காண்பிக்காவிட்டால் அவள் மனம் திருப்தி அடையுமா? உள்ளே அழைத்துச் சென்று சங்கிலியை இழுத்து

ஜலம் அடித்துக்கொண்டு போகும் விதத்தைக் காண் பித்தாள்.

வீட்டின் கட்டிடத்தைப் பார்த்து முடிந்தது. வீடு கட்ட என்ன செலவாயிற்று என்றேன்; இருபத்தைந்து ஆயிரம் என்று சொல்லிக்கொண்டே தோட்டத்தைக் காண்பிக்கப் புறப்பட்டாள் சாரதா. எனக்கு இதற் குள் கால் ஓய்ந்துபோயிற்று; காதும் ஓய்ந்துபோ யிற்று; எப்படித் தப்பிக்கலாமென்று யோசனை செய்ய ஆரம்பித்தேன். நல்ல வேளையாய் ஸப் ஜட்ஜ் வெளியி லிருந்து திரும்பி வந்தார். சாரதா எனக்கு விடை கொடுத்து அனுப்பினாள்.

வீட்டிற்கு வந்தவுடன் என் கணவர், ஸப் ஜட் ஜின் வீட்டைப்பற்றி விசாரித்தார். ஞாபகத்தில் வைத் துக்கொண்டு வந்த இங்கிலீஷ் வார்த்தைகளுக்கு முத லில் அர்த்தத்தைக் கேட்டுத் தெரிந்துகொண்டேன். வீட்டைப்பற்றி அதிகமாய் என்னால் வர்ணிக்க முடிய வில்லை. கக்கூஸில் ஜலம் கொட்டும் விதத்தை மாத்திரம் சாங்கோபாங்கமாய்ச் சொல்லி முடித்தேன்.

* * *

வெங்கோப ராவ் வீட்டைப் பார்க்கப் போன போது அனுபவம் வேறு.

வெங்கோபராவ் சர்க்கார் உத்தியோகத்தில் சொற் பச் சம்பளத்திலிருந்து ரிடையர் ஆனவர். அவர் உத்தி யோக காலம் முழுவதிலும் அவருக்கு ஒரே நோக்கம் தான்: வீடு கட்டுவதற்கு உபயோகமாகக்கூடிய சாமான் களை மலிவாய்ச் சிறுகச் சிறுகச் சேகரிக்க வேண்டு மென்பது. இஞ்சனீரிங் டிபார்ட்மெண்டில் எல்லாரும்

அவருக்கு சிநேகம். எந்த இடத்தில் என்ன ஏலம் நடந்தாலும் அங்கே வெங்கோப ராவைக் காணலாம். ரிடையர் ஆவதற்குள், எறும்பு அரிசி சேர்ப்பது போல், வெங்கோப ராவ் அகப்பட்ட சாமான்களையெல்லாம் சேகரித்துக்கொண்டார். பென்ஷன் வாங்கிக்கொண்ட பிறகு சேகரித்த சாமான்களை அணுவளவு கூட வீணுக்காமல் வீட்டில் வைத்துக் கட்டி முடித்தார்.

வெங்கோபராவ் வீட்டைப் பார்க்கப் போன நான், 'தாத்தா, வாசல் பார்வையில் இவ்வளவு சிறிய ஜன்னலாய் வைத்திருக்கிறீர்களே?' என்று கேட்டேன். எனக்குக் கேட்காமல் இருக்க முடியவில்லை; வாசற்படி கோபுரவாசல் போல் இருந்தது; ஜன்னல் புருக்கூடு போல் இருந்தது.

'என்ன செய்வது, அம்மா? கதவும் ஜன்னலும் வெவ்வேறு சமயத்தில் ஏலத்தில் மலிவாய்க் கிடைத்தன. காசு கொடுத்து வாங்கினதை உபயோகிக்காமல் வீணுக்க மனம் வருகிறதா?' என்ருர் வெங்கோப ராவ்.

இதிலிருந்து ஆரம்பம். அகப்பட்டபோது சாமான்களைச் சரசமாய் வாங்கி, கடைசியில் வீணுக்காமல் சிக்கனமாய் வீடு கட்டி முடிக்கும் விதம் எப்படியென்று தெரியவேண்டுமாஞல் வெங்கோப ராவ் வீட்டைப் பார்க்கவேண்டும்.

நான்கு அடி அகலம் உள்ள ஒரு அங்கணத்திற்கு இரண்டு அடி கனத்தில் ஒரு பிரம்மாண்டமான தூலம்; பார்ப்பதற்கு விகாரம்தான். ஆஞல், தூலம் மலிவாய் ஏலத்தில் கிடைத்தது. வாள்காரனுக்கு வீணுய்க் கூலி கொடுப்பானேன்?

வீட்டில் ஒரு பாகம் சீமை ஓடு ; ஒரு பாகம் நாட்டு ஓடு ; வேண்டாத ஒரு பாகத்தில் தளவரிசை ; முன் புறம் அறைகளுக்குச் சதுரச் செங்கல் ; சாமான் உள் ளுக்குச் சலவைக்கல் ; — காரணம், மலிவாய் வாங்கிப் போட்டிருந்த சலவைக்கல் அந்தச் சிறிய அறை அள விற்குத்தான் சரியாய் இருந்தது ; தவிர, வாங்கின சல வைக்கல்லைப் பிரயோசனப்படுத்தாமல் இருக்கலாமா ?

வான வில்லில் எவ்வளவு விதமான வர்ணங்க ளுண்டோ அவ்வளவையும் வெங்கோப ராவ் வீட்டில் காணலாம். பாவம், வெங்கோப ராவுக்கு வெவ்வேறு தினுசான பெயிண்ட்கள்தான் மலிவாய்க் கிடைத்தன.

வெங்கோப ராவுக்குத் தாம் வீடு கட்டியதைப்பற்றி எல்லா விதத்திலும் திருப்தியே. ஆயினும் மர ஏணி ஒன்றைப்பற்றி மாத்திரம் தீராத வருத்தம். மாடிக்கு ஏறும் வழிக்கு நேராய், ஒரு மர ஏணி சுவரோடு சுவ ராய்த் தூக்காக நிறுத்தப்பட்டிருந்தது. ஏணி வழியாய் மாடிக்கு ஏற வேண்டுமானால் ஸர்க்கஸில் ஏறுவது போல்தான் ஏறவேண்டும். பக்கத்தில் ஒரு மனிதன் உயரத்திற்கு மர ஏணித்துண்டு ஒன்று கிடந்தது.

மர ஏணியின் விருத்தாந்தத்தை வெங்கோப ராவ் மிகுந்த துக்கத்துடன் தெரிவித்தார். ஏணியை ஏலத் தில் மலிவாய்ப் பிடித்துப் போட்டதினால் வந்த கஷ் டம் இது.

ஏணி ரொம்பப் பெரிதாய் இருந்தது ; அறுப்பதற் குத் தச்சனுக்குக் கூலி கொடுக்காமல் அப்படியே உப யோகிக்கக் கூடியதாயில்லை. வெங்கோப ராவ் தச்சனை வேண்டிய அளவிற்கு ஏணியை அறுக்கச் சொன்னார்.

தளம் 10 அடி உயரம்; ஒரு அங்குலம் கூட ஏற்றத் தாழ்வு இல்லாமல் வெங்கோபராவின் தச்சன் 10 அடி நீளத்திற்கு ஒரு துண்டு போட்டான்!

வீட்டைப் பார்த்து முடிந்ததும் வழக்கப்பிரகாரம், 'வீடு எப்படி இருக்கிறது?' என்று கேட்டார் வெங்கோப ராவ்.

'நன்ருயிருக்கிறது; வெகு சிக்கனமாய் முடித்திருக்கிறீர்கள்' என்று பதிலளித்தேன்.

'வாஸ்தவம்தான். வீடு அழகிற்கும் அயலார் பார்த்து மெச்சிக் கொள்வதற்குமா கட்டுகிரேும்? வெயில் மழை மேலே படாமல் இருக்கவேண்டும், அவ்வளவுதானே!' என்ருர் வெங்கோப ராவ்.

சாரதா வெங்கோப ராவ் வீட்டைப் பார்த்தால் என்ன சொல்லுவாள்? வெங்கோப ராவ் சாரதா வீட்டைப் பார்த்தால் என்ன சொல்லுவார்?

## 13. மிஸஸ் பன்

**மி**ஸஸ் பன் என்ருல் யாரோ வெள்ளைக்காரச்சியென்று நினைக்கிறீர்களா? இல்லை. மிஸஸ் பன் = மிஸஸ் கே. ஆர். எஸ். பன் = மிஸஸ் கே. ராமஸுப்பன்.

மிஸ்டர் கே. ராமஸுப்பன் ஒரு ஸப் கலெக்டர். மிஸஸ் பன் சென்னை பிரபல வக்கீல் பத்மநாபன் அவர்களின் குமாரி. நாமகரண காலத்தில் அவள் வெங்கடஸுப்ப லக்ஷ்மியாய் இருந்தாள். பள்ளிக்கூடத்தில் பீ. வி. எஸ். லக்ஷ்மியாய் விளங்கிஞள். ஆஞல், கன்னிகா தான காலத்தில் மறுபடியும் வெறும் வெங்கடஸுப்ப லக்ஷ்மிதான்.

ராமஸுப்பன் ஐ. ஸி. எஸ். பரீட்சை தேறி ஸப் கலெக்டர் ஆனான். வெங்கடஸுப்பலக்ஷ்மிக்கு மிஸஸ் பன்னாக மாற ஆவல் உண்டாயிற்று. ராமஸுப்பன் மிஸ்டர் பன் ஆனான்; மனைவி மிஸஸ் பன் ஆனாள்.

ராமஸுப்பன் குன்னக்குடி கிராமத்தில் ஓர் ஏழைக் குடும்பத்தில் பிறந்தவன்; கிராம வாழ்க்கையில் ஊறினவன்; புத்தி மேன்மையாலும், அதிர்ஷ்ட வசத்தாலும், ஐ. ஸி. எஸ். பரீட்சையில் தேறி ஸப் கலெக்டர் ஆனான்.

வெங்கடஸுப்பலக்ஷ்மி பால்யம் முதல் நகரவாசி; மிஸஸ் பன்னாக மாறின பிறகு அவளுக்கு ஒரு நாள் திடீரென்று கிராமவாசத்தின் மேல் அபிமானம் உதித்தது. காரணம்ஏதோ தெரியவில்லை. நாகரிக ஸ்திரீகளின் விருப்பு வெறுப்புகளுக்கு யார் காரணம் கூற முடியும்?

மிஸஸ் பன் தன் எண்ணத்தைக் கணவனிடம் தெரிவித்தாள். ராமஸுப்பன் முதலில் சந்தோஷமடைந்தான்; இளம் பிராயத்தில் தான் வாழ்ந்த கிராம வாழ்க்கையின் மேல் அவனுக்கு எப்பொழுதும் பிரியம் உண்டு; ஆனால் நகரத்தில் மலர்ந்த புஷ்பமான தன் மனைவி கிராமத்திற்குப் போனால் ஒருகால் வாடிவிடுவாளோ என்னும் பயமும் ஒருபுறம் இருந்தது; தன் பயத்தை மனைவியிடம் தெரிவித்தான். மிஸஸ் பன்னோ தன் மன உறுதி மாறுவதாயில்லை. உடனே ஒரு வாரம் லீவு போட்டுவிட்டு கிராமத்திற்குப் புறப்பட ராமஸுப்பன் ஏற்பாடு செய்தான்.

ஒரு கல்யாணத்திற்கு வேண்டிய அளவு சாமான்கள், ஒரு டவாலி ஜவான், ஒரு சமையற்காரன் முதலிய ஏற்பாடுகளுடன் ஸப் கலெக்டர் தம்பதிகள் ரயில் ஏறி

ஞர்கள். ராமஸுப்பனுடைய சொந்தக் கிராமமாகிய குன்னக்குடி கிராமத்தில் ஒரு வாரம் தங்குவதாய் உத்தேசம்.

குன்னக்குடி கிராமத்திற்கு ரங்கபுரம் ரயில்வே ஸ்டேஷனில் இறங்கவேண்டும். அங்கிருந்து கிராமம் ஆறு மைல் தூரம்.

ரங்கபுரம் ஸ்டேஷனுக்கு, ரயில் இரவு மூன்று மணிக்கு வந்து சேர்ந்தது. சாமான்கள் இறக்கப்பட்டன; சிப்பந்திகள் இறங்கினுர்கள்; மிஸஸ் பன்னை எழுப்பிக்கொண்டு ராமஸுப்பனும் இறங்கினுன்.

'"வெயிடிங் ரூம்" எங்கே?' என்று விசாரித்தாள் மிஸஸ் பன். 'இந்தச் சிறிய ஸ்டேஷனுக்கு வெயிடிங் ரூம் கிடையாதே' என்று பணிவுடன் தெரிவித்தார் ஸ்டேஷன் மாஸ்டர்.

'வெயிடிங் ரூம் இருந்தாலும் பிரயோஜனமில்லை. இப்பொழுது வண்டி யேறினுல்தான் பொழுது விடிய கிராமம் போய்ச் சேர முடியும்' என்ருன் ராமஸுப்பன்.

'ஆறு மைல் தூரம் என்றுதானே சொன்னீர்கள்? கால் மணியில் போய்விடக் கூடாதோ?'

'காரில் போனுல் கால் மணியில் போய்விடலாம். நாம் போகவேண்டியது மாட்டு வண்டியிலல்லவா?' என்று கூறி, ராமஸுப்பன் தன் மனைவியை ஸ்டேஷனுக்கு வெளியில் இருந்த இரட்டை மாட்டு வண்டிக்கு அழைத்துச் சென்ருன்.

வண்டியில் கால் வைத்து ஏறுவதற்குப் படியில்லை. மிஸஸ் பன் வண்டியிடம் வந்து தயங்கி நின்ருள்.

பாவம், அவளுக்கு இந்த மாதிரி வண்டிகளில் ஏறிப் பழக்கமில்லை; தவிர சரீரமும் கொஞ்சம் ஸ்தூலம். கடைசியில், வேறு வழியில்லாமல் வண்டிக்காரன் மாடுகளை அவிழ்த்து விட்டு வண்டியின் முன்புறத்தைத் தூக்கிப் பிடித்துக்கொண்டான். நுகத்தடியை வண்டிக்காரனும், சக்கரங்களை ஜவானும் சமையற்காரனும், பின்புறத்தை ராமஸுப்பனும் தாங்க மிஸஸ் பன் ஒரு விதமாய் வண்டி ஏறி முடித்தாள். ராமஸுப்பன் பின்னால் தாவி ஏறிக்கொண்டான். எருதுகள் ஒய்யார நடை போட, வண்டி நகர்ந்தது.

வண்டி யேறியவுடன் மிஸஸ் பன் மறுபடியும் தூங்கிவிட்டாள். கண் விழித்தபோது மணி ஏழு இருக்கும். ‘இன்னம் கிராமம் வரவில்லையா?’ என்றாள்.

‘இன்னம் ஒரு மைல்தான். குறுக்கு வழியாய் ஜவானும் சமையற்காரனும் முன்பே போயிருப்பார்கள். அங்கு காப்பி தயாராய் இருக்கும்’ என்று ராமஸுப்பன் தைரியம் சொன்னான்.

கடைசியில் வண்டி கிராமம் வந்து சேர்ந்தது. வண்டியின் பின்னால் ஒரே கும்பல். மிஸஸ் பன்னுக்கு ஒன்றும் புரியவில்லை; கலவரமாக இருந்தது.

வீட்டு வாசலுக்கு வண்டி வந்து சேர்ந்தது. மிஸஸ் பன் வண்டியிலிருந்து எட்டி யெட்டிப் பார்த்தாள்; இறங்க முடியவில்லை. கிராமத்தில் நாற்காலி முக்காலி ஒன்றும் அவசரத்திற்கு அகப்படவில்லை. ராமஸுப்பன் ஒருபுறம் தாங்க, புடைவை வண்டியில் மாட்டிக்கொண்டு கிழிபட, மிஸஸ் பன் இறக்குமதி செய்யப்பட்டாள்.

'பியூன்! டூத் பேஸ்ட் அண்டு பிரஷ்' என்று உத்தரவு பிறந்தது. டவாலி ஜவான் கையை உதறிக் கட்டை விரலைக் கடித்துக்கொண்டான். நல்ல வேளை யாய் எஜமானி அம்மாள் இதைக் கவனிக்கவில்லை.

சந்தர்ப்பத்தை அறிந்த ராமஸுப்பன், 'லக்ஷ்மீ! காப்பி ஆறிப்போகிறது. பிரஷ் எங்கு இருக்கிறதோ, தேட நேரமாகும். இதோ, இந்தக் குச்சியால் பல் தேய்த்துக் கொள். நானும் குச்சியால்தான் தேய்க்கப் போகிறேன். பல்லுக்கு ரொம்ப உறுதி. டவுனில் தேடினால்கூடப் பல் குச்சி அகப்படுவது கஷ்டம்' என்று சொல்லி ஒரு பல் குச்சியைக் கொடுத்தான்.

குச்சி வேப்பங்குச்சி. மிஸஸ் பன் கிராம வாழ்க்கை யின் ருசியை முதல் முதலாக அறிந்தாள்.

காப்பி குடித்தாயிற்று.

'வெயிலுக்கு முன் நான் போய் ஆற்றில் ஸ்நானம் செய்துவிட்டு வந்துவிடுகிறேன். உனக்கு இங்கே வெந் நீர் வைத்திருக்கிறது; அதில் ஸ்நானம் செய்துவிடு நீ' என்றான் ராமஸுப்பன்.

'எனக்குக்கூட வெகு நாளாய் ஆற்றில் ஸ்நானம் செய்ய வேண்டுமென்று ஆசை. நானும் வருகிறேன்' என்று மிஸஸ் பன்னும் புறப்பட்டாள்.

ஆற்றில் பலர் ஸ்நானம் செய்து கொண்டிருந்தார் கள்; படித்துறையில் ஜனக்கூட்டம்.

மிஸஸ் பன் பட்டணத்தில் ஏகாந்தமாய் 'பாத் ரூமில்' குளிப்பவள். இப்படி வெட்ட வெளியில் பலர் எதிரில் குளிக்க அவளுக்குப் பிடிக்குமா? ஆகையால்

ஆற்றில் கும்பல் கலையும் வரையில் காத்திருப்பதாய்த் தீர்மானித்து, கரை மேல் உட்கார்ந்துவிட்டாள்.

ராமஸுப்பன் குழந்தைப் பருவத்தில் நீந்தி விளையாடின ஆறல்லவா அது? தன்னையும் அறியாத குதூகலத்துடன் நீரில் குதித்து நீந்தி விளையாடி ஸ்நாநம் செய்ய ஆரம்பித்தான்.

ராமஸுப்பன் ஸ்நாநத்தை முடித்துக்கொண்டு மிஸஸ் பன்னை ஸ்நாநம் செய்யக் கூப்பிட்டான். மிஸஸ் பன் நகருவதாயில்லை; ஆனால் வீட்டிற்குப் போவதாயும் இல்லை. 'சற்றுக் கும்பல் கலையட்டுமே!' என்றாள் மிஸஸ் பன்.

கும்பலும் கலைவதாயில்லை. மணியும் பன்னிரண்டாயிற்று. எவ்வளவோ ஆவலுடன் வந்த மிஸஸ் பன் ஸ்நாநம் செய்யாமல் மனக்குறையுடன் வீடு திரும்பினாள். பன்னிரண்டு மணிக்கு மேல், பாவம் அவளுக்குப் பசி தாங்குமா?

வீட்டிற்குள் நுழைந்ததும் ஜவானின் முகம் ஒரு விதமாய் இருந்தது. என்னவென்று விசாரித்ததில் சமையற்காரனுக்குத் தேள் கொட்டி விட்டதாய்த் தெரிந்தது; சமையல் ஆகவில்லை.

மிஸஸ் பன்னுக்குக் கோபம் பொங்கிக்கொண்டு வந்தது; உடனே ஆற்றங்கரைக்கு ஓடி வந்து ஏன் தெரிவிக்கவில்லையென்று ஜவானைச் சீறினாள்; நாட்டுப்புறத்து வீடுகளின் அசுத்தத்தைப்பற்றி ஒரு பிரசங்கம் செய்தாள்.

என்ன சொல்லி என்ன? சாப்பாட்டிற்கு ஏதாவது ஏற்பாடு ஆகவேண்டும். ஸப் கலெக்டர் மனைவிக்கும் சமையலுக்கும் வெகு தூரம்.

ராமஸுப்பன், அந்த ஊரிலிருந்த தன் அத்தை குப்பிப் பாட்டிக்குச் சொல்லி அனுப்பி, சாப்பாடு தயார் செய்யச் சொன்னான். சுமார் 2-மணிக்கு குப்பிப் பாட்டி சாப்பாட்டிற்கு அழைத்துப் போக வந்தாள்.

'சாப்பாட்டை இங்கு கொண்டுவந்துவிட முடியாதா?' என்றாள் மிஸஸ் பன்.

குப்பிப் பாட்டியின் முகம் சிறிது சிவந்தது: 'நான் சாப்பாடு ஹோட்டல் வைக்கவில்லையடீ அம்மா —' என்று ஏதோ ஆரம்பித்தாள்.

'வரவழைப்பதனால் இன்னம் நேரம்தானே ஆகும்?' என்று சமரசப்படுத்திக்கொண்டு ராமஸுப்பன் தன் தர்மபத்தினியுடன் குப்பிப் பாட்டி வீட்டிற்கு விருந்திற்குப் போனான்.

சமையல் வற்றல் குழம்பும் சாதமும்; இலை தையல் இலை; நெய் ஓரே நாற்றம்; மோர் நீர்மோர். மிஸஸ் பன் சாப்பிடும் கஷ்டத்தைப் பார்த்து ராமஸுப்பன் பரிதாபப்பட்டான்; என்ன செய்ய முடியும்!

நாகரிக ஸ்திரீகளிடம் எப்போதுமே ஒரு பிரத்தியேகமான அபிமானம் தலை வலிக்கு உண்டு; இவ்வளவு ஆயாசமடைந்த மிஸஸ் பன்னையா இது விடும்? பிரமாதமாய் ஆரம்பித்துவிட்டது.

காப்பி போடுவதானால் சமையற்காரன் இன்னம் எழுந்திருந்தபாடில்லை. மிஸஸ் பன்னுக்கோ தலை தூக்க முடியவில்லை. ராமஸுப்பன் 'ஸ்டவ்'வை மூட்டிக் காப்பி போட ஆரம்பித்தான். இதைப் பார்த்துக்கொண்டிருந்த குப்பிப் பாட்டி அவனைத் தடுத்து, தான் காப்பி

போட்டு அனுப்புவதாய் காப்பிப் பொடியை வாங்கிச் சென்றாள்.

கொஞ்ச நேரத்தில் ஒரு பித்தளைக் கூஜாவில் காப்பி வந்து சேர்ந்தது. மிஸஸ் பன் ஆவலுடன் கூஜாவைத் திறந்தாள்; ஆசையுடன் டம்ளரில் கொட்டி உறிஞ்சினாள்; ஒரு வாய்தான் சாப்பிட்டாள்; உடனே வாந்தியெடுத்துவிட்டாள்.

'இது காப்பியா, விஷமா?' என்று கர்ஜித்தாள் மிஸஸ் பன். பாவம், தலைவலியின் கொடுமை; தவிரவும் அவள் மேலும் முழுதும் குற்றமில்லை. காப்பி 'இங்க்' வர்ணமாயிருந்தது; ஊற்று ஜலம் போலும் இருந்தது.

'இந்த ஊரில் டாக்டர் யாராவது இருக்கிறானா?' என்றாள் மிஸஸ் பன்.

'பேஷான வைத்தியன் இருக்கிறான். எங்கள் கூனக் குசவன் கையால் மண்ணைக் கிள்ளிக் கொடுத்தால்கூடப் போதும். அழைத்துக்கொண்டு வரட்டுமா?' என்று அநுதாபத்துடன் கேட்டாள் குப்பிப் பாட்டி.

பொங்கி வந்த ஆத்திரத்தில் மிஸஸ் பன்னுக்குப் பேசக்கூட முடியவில்லை; 'ராத்திரி ரயில் எத்தனை மணிக்கு?' என்று கேட்டாள் தன் கணவனை.

'ஒன்பது மணிக்கு.'

'அதற்குக் கட்டாயம் புறப்பட்டுவிட வேண்டும். இந்தத் தலைவலி என்ன விபரீதத்தில் முடியுமோ!'

ராமஸுப்பன் ஜவானை அனுப்பி வண்டி ஏற்பாடு செய்ய மணியகாரரை அழைத்துவரச் சொன்னான்.

மணியகாரர் வந்தார். 'மாடுகளை எரு அடிக்க அனுப்பி யிருந்தேன்; அழைத்து வரும்படி ஆளை

அனுப்பிவிட்டேன். ஆனால் வண்டிதான் —' என்று அவர் கையைப் பிசைந்தார்.

'ஏன்? வண்டிக்கு என்ன?' என்றான் ராமஸுப்பன்.

'இல்லை — கிராமத்தில் கூடு போட்ட வண்டி முதலியாருடையது ஒன்றுதான். அதைத்தான் துரையவர்களுக்குக் காலையில் அனுப்பி யிருந்தேன். முதலியார் மத்தியானம் வண்டியைக் கட்டிக்கொண்டு சுருள்பாக்கம் போயிருக்கிறாராம். நாளை காலையில்தான் வருவாராம்.'

'சுருள்பாக்கம் இங்கிருந்து எவ்வளவு தூரம்?'

'எட்டு மைல் தூரம். அங்கும் வண்டியைக் கொண்டு வரும்படி ஆள் அனுப்பியிருக்கிறேன்.'

'எட்டு மைலா? அந்த வண்டி வந்து ரயிலுக்குப் போவதென்றால்—' என்று ராமசுப்பன் கொஞ்சம் சிந்தனையில் ஆழ்ந்தான். அந்த வண்டியை நம்பினால் ரயில் கிடைப்பது சந்தேகமென்று தீர்மானித்துத் தன் மனைவியைப் பார்த்து, 'லக்ஷ்மி! கட்டாயம் இன்று ராத்திரியே போயாக வேண்டுமா? கூடு வண்டி கிடைப்பது கொஞ்சம் கஷ்டமாயிருக்கிறது. சமையற்காரனுக்கும் கொஞ்சம் தேள் கடுப்பு குறைந்திருக்கிறது. ராத்திரி தங்கிவிட்டு காலை ரயிலில் போவோமே!' என்றான்.

'முடியவே முடியாது. இது சாமானியமான தலைவலி யென்று நினைக்கிறீர்களா? இது "மெனிஞ்ஜைடிஸ்" சம்பந்தம்; தாமதிக்கும் ஒவ்வொரு க்ஷணமும் பிராண பயம்.'

'ஆனால் மொட்டை வண்டியில்தான் போகவேண்டும்.'

'எப்படியானாலும் சரி; இன்று 9-மணி ரயிலில் ஏறி ஆகவேண்டும்.'

எரு அடித்துக் களைத்துப்போன மாடுகள் பூட்டப்பட்டு, வைக்கோலைப் பரப்பி அதன் மேல் அழுக்கு ஜமக்காளம் ஒன்றைப் போட்டு, மணியகாரர் வண்டி வாசலில் கொண்டுவந்து நிறுத்தப்பட்டது. ஜவான் வண்டியில் மெத்தையை விரித்தான். மெதுவாய் 'கைலாகு' கொடுத்து மிஸஸ் பன் வண்டியில் ஏற்றப்பட்டாள். ராமசுப்பன் பக்கத்தில் அமர்ந்தான். சமையற்காரன் சாமான்களைக் கட்டிக்கொண்டு பின்னால் வருவதாய் ஏற்பாடு. 'வழியில் எப்படியிருக்குமோ, என்னவோ, பியூன் வண்டியின் கூடவே வரட்டும்' என்றாள் மிஸஸ் பன்.

வண்டி புறப்பட்டது. சக்கரம் சேற்றில் புதைவது, கடையாணி தொலைந்து போவது, கட்டுத் தளர்ந்து போவது, மாடுகள் மண்டி போடுவது, இவைகளுக்கிடையில் 'பிசு பிசு' வென்று சிறு தூற்றல், — முதலிய பல கண்டங்களைத் தாண்டி வண்டி ரயில்வே ஸ்டேஷனை அணுகியது.

ராமசுப்பன் கடிகாரத்தைப் பார்த்தான். ரயில் வருவதற்கு இன்னும் பத்து நிமிஷங்கள்தான் இருந்தன. ஸ்டேஷன் இன்னும் ஒரு பர்லாங்கு தூரத்திற்கு மேல் இருந்தது. ராமசுப்பன் மாடுகளை விரட்டி ஓட்டச் சொன்னான்.

கலெக்டர் உத்தரவிற்கு வண்டிக்காரன் பயப்படுவான்; மாடு பயப்படுமா? வண்டிக்காரன் ஓங்கி அடித்ததுதான் தாமதம்; இரண்டு மாடுகளும் திடீரென்று படுத்துக்கொண்டு விட்டன. ராமசுப்பன் சமயோசித புத்தியுடன் ஜவானை ஸ்டேஷனுக்கு ஓடி, ஸ்டேஷன் மாஸ்டரிடம் தாங்கள் வந்துகொண்டிருப்பதாய்த் தெரிவிக்கச் சொன்னான்.

மாடுகள் எழுந்திருப்பதாயில்லை. வேறு வழியில்லாமல் கலெக்டர் தம்பதிகள் பாதசாரிகளாய் ரயில்வே ஸ்டேஷனுக்குப் புறப்பட்டார்கள். வேளையின் கொடுமை!

குடைநிழ லிருந்து குஞ்சர மூர்ந்தோர்
நடை மெலிந் தோரூர் நண்ணினும் நண்ணுவர்.
கார் தனி லேறிக் காற்றாய்ப் பறந்தோர்
கால் நடை நடக்கும் காலமும் வருமால்.

மிஸஸ் பன் ஸ்டேஷனுக்கு வந்து சேர்ந்தாள். ரயிலும் வந்தது. கலெக்டர் தம்பதிகள் ரயிலில் அமர்ந்தார்கள்.

'லக்ஷ்மீ! ஒரு வாரம் கிராமத்தில் இருக்கவேண்டுமென்று ஆசைப்பட்டாயே யென்று நானும் ஒரு வாரம் ரஜா வாங்கிக்கொண்டு வந்தேன். இப்படி ஒரு நாளில் வந்து போவதென்றால் ஒரு ஞாயிற்றுக்கிழமை வந்து போயிருக்கலாமே!' என்றான் ராமசுப்பன்.

லக்ஷ்மி பதில் சொல்லவில்லை. 'மெனிஞ்ஜைடிஸ்' வந்து விட்டதாக எண்ணி நடுங்கிப் போயிருக்கும் மிஸஸ் பன்னுக்குப் பேச முடியுமா?

# 14. ரகசியம்

ஒரு நாள் மாலை சுமார் 4-மணி இருக்கும். விஜயா வின் வீட்டுக் கூடத்தில் விஜயாவும் கமலாவும் பேசிக் கொண்டிருந்தார்கள். திடீரென்று அம்புலு நுழைந் தாள். விஜயா அம்புலுவையும் கமலாவையும் ஒருவருக் கொருவர் அறிமுகப்படுத்தி வைத்துவிட்டுச் சம்பா ஷணையைத் தொடர்ந்தாள்.

அம்புலுவோ சம்பாஷணையில் கலந்துகொள்ள வில்லை; முள்ளின் மேல் நிற்பது போல் தவித்துக்கொண் டிருந்தாள்; கொஞ்சநேரம் பொறுத்துப் பார்த்துவிட்டு, 'விஜயா! நீ தக்கர ஆ நாடு —' என்று ஏதோ தெலுங் கில் ஆரம்பித்தாள்.

விஜயா விஷயத்தைத் தெரிந்துகொண்டுவிட்டாள்; அதாவது அம்புலு ஏதோ ரகசியத்தை வைத்துக் கொண்டு அவஸ்தைப்படுகிறுள் என்பதை. கமலாவுக் கோ தெலுங்கு தெரியும். கமலாவுக்குத் தெலுங்கு தெரியுமென்பது அம்புலுவுக்குத் தெரியாது. அம் புலுவோ ஒரே மூச்சில் எல்லாவற்றையும் தெலுங்கில் சொல்லித் தீர்த்துவிடுவாள் போலிருக்கிறது. கமலாவும் நகருவதாயில்லை. விஜயாவுக்கு என்ன செய்வதென்று புரியவில்லை. 'இதோ வருகிறேன்' என்று உள்ளே போய்விட்டாள். இதுதான் சமயமென்று அம்புலுவும் பின் தொடர்ந்தாள்.

கமலாவுக்குக் கோபம் வந்துவிட்டது; அம்புலுவுக் காகத் தன்னை விஜயா அவமரியாதை செய்ததாய் கமலா எண்ணிக்கொண்டு விட்டாள்; 'விஜயா! நான் போய்

வருகிறேன்!' என்று வெகு மிடுக்காய்ப் புறப்பட்டுவிட்டாள்.

புறப்பட்டவள் அப்படியே போனளா? அதுவும் இல்லை. 'ரகசியம்' என்று தெரிந்தவுடன் அது என்னவென்று தெரிந்துகொள்ளாமல் போகக் கமலாவுக்கு மனம் வரவில்லை. என்ன செய்வாள் பாவம்! அது அவளுடைய சுபாவம்.

வாசலில் வந்து கமலா சற்றுத் தயங்கி நின்றாள்; மனத்தைத் திடப்படுத்திக்கொண்டு ரகசியத்தைத் தெரிந்துகொண்டுதான் போவதென்று தீர்மானித்து விட்டாள்.

இதற்குள், கமலா புறப்பட்டுப் போய்விட்டதாய் எண்ணி விஜயாவும் அம்புலுவும் பேசிக்கொண்டே கூடத்திற்கு வந்துவிட்டார்கள். வெளியிலிருந்தபடியே கமலாவுக்கு அவர்கள் பேசுவது காதில் விழுந்தது; விவரமாகப் புரியாவிட்டாலும், ஸினிமா விஷயமாய் ஏதோ பேசிக்கொள்கிறார்கள் என்பது வரையில் தெரிந்தது.

யாரோ வெளியில் வருவது போல் சப்தம் கேட்டது. கமலா வெகு அவசரமாய்ப் புறப்பட்டாள். போதாத வேளை! சுவரில் இருந்த ஆணியில் புடைவை மாட்டிக்கொண்டு 'டர்'ரென்று கிழிந்தது. திருடனுக்குத் தேள் கொட்டியது போல் கமலா சந்தடி செய்யாமல் சென்றுவிட்டாள்.

அன்றிரவு முழுவதும் கமலாவுக்குத் தூக்கம் பிடிக்கவில்லை. புடைவை கிழிந்து விட்டதே என்று துக்கம் ஒருபுறம்; இவ்வளவு பாடுபட்டும் ரகசியம் முழுவதும்

தெரியவில்லையே என்ற குறை ஒரு பக்கம்; இத்துடன் புடைவை கிழிந்த விஷயம் அவர்களுக்குத் தெரிந்திருக்குமோ என்னும் கவலை வேறு.

மறுநாள் தன் புருஷன் வேலைக்குச் சென்றதுதான் தாமதம், கமலா தன் சிநேகிதி மரகதத்தின் வீட்டிற்குப் புறப்பட்டுவிட்டாள். மரகதத்தின் திறமையில் கமலாவுக்கு அபாரமான நம்பிக்கை. உண்மையாகவே மரகதத்திற்கு யூகம் அதிகம். ஏதாவது ஒரு விஷயத்திற்குக் கொஞ்சம் தலைப்பு அகப்பட்டால் போதும்; மரகதம் உடனே விஷயம் இப்படித்தான் இருக்க வேண்டுமென்று நேரில் பார்த்தவள் போல் சொல்லிவிடுவாள். கடவுள் அந்தச் சாமர்த்தியத்தை அவளுக்குக் கொடுத்திருந்தார்.

மரகதத்தைப் பார்த்தவுடன், கமலா தன் மனத்தில் இருந்ததையெல்லாம் திறந்து கொட்டினாள். தான் விஜயாவின் வீட்டிற்குப் போனது முதல் தன் புடைவை கிழிந்தது வரையில் ஒன்று விடாமல் கமலா சொல்லி முடித்தாள். ஒரு துப்பறியும் நிபுணரைப் போல் மரகதம் எல்லாவற்றையும் வெகு நிதானமாய்க் கேட்டுக் கொண்டிருந்தாள்; சிறிது யோசித்து விட்டு, ‘ப்பூ! இவ்வளவுதானே? விஷயம் இன்னதென்று தெரியவில்லையா?’ என்றாள்.

‘நானும்தான் யோசனை செய்து செய்து பார்க்கிறேன்’ என்று பதிலளித்தாள் கமலா.

‘விஜயாவின் கணவன் “டீ லக்ஸ்” டாக்கீஸில் மானேஜர் என்பது உனக்குத் தெரியுமல்லவா?’

‘ஆம்.’

'விஷயம் இதுதான்: அம்புலுவுக்குப் பாலிய விதவையான நாத்தனுர் ஒரு பெண் இருக்கிறது. அன்று கூட அம்புலு சொல்லிக்கொண்டிருந்தாள், இந்த நாத்தனுரைக் காப்பாற்றும் பொறுப்பு தனக்கு வந்துவிட்டதென்று. அந்தப் பெண்ணை ஸினிமாவில் சேர்க்க ஏற்பாடு. இதுதான் ரகசியம்' என்று சொல்லி முடித்தாள் மரகதம்.

மரகதத்தின் சாமர்த்தியத்தைக் கண்டு கமலா அப்படியே பிரமித்துப் போய்விட்டாள்; 'எல்லோரும் பதினெட்டு முழம் புடைவை உடுத்துக்கொண்டால் சரியாகி விட்டதா? இருந்தால் மரகதத்தைப் போலல்லவோ இருக்கவேண்டும்!' என்று நினைத்துக்கொண்டாள். வேறு விஷயங்களைப்பற்றிச் சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்து விட்டுக் கமலா வீடு போய்ச் சேர்ந்தாள்.

அன்றிரவு முழுவதும் மறுபடியும் கமலாவுக்குத் தூக்கம் இல்லை. விஜயாவைப் பார்த்து, 'என்னடீ அம்மா! பிரமாதமான ரகசியம்! இவ்வளவுதானே? என்று சொல்லி ரகசியம் தனக்குத் தெரிந்துவிட்டதென்பதை விஜயாவுக்குக் காண்பித்துக்கொள்ளும் வரையில் கமலாவுக்குத் தூக்கம் வருமா?

மறுநாள் பொழுது விடிந்தது. சீக்கிரத்தில் வீட்டு வேலைகளை முடித்துக்கொண்டு கமலா விஜயாவின் வீட்டிற்குப் புறப்பட்டாள். போகும் வழியில் அம்புலுவின் வீடு. அம்புலுவின் வீட்டைத் தாண்டிச் செல்லும் பொழுது கமலாவுக்கு ஒரு யோசனை தோன்றிற்று. அம்புலுவை முதல் முதலாக விஜயாவின் வீட்டில்தான் கமலா சந்தித்தாள்; அம்புலுவைப்பற்றிக் கமலாவுக்கு

அதிகம் தெரியாது. மரகதம் எவ்வளவுதான் புத்தி சாலியாய் இருந்தாலும், அம்புலுவுக்குப் பாலிய விதவை யான நாத்தனார் ஒருத்தி இருப்பதை நிச்சயப்படுத்திக் கொள்வது நலமென்று கமலாவுக்குத் தோன்றிற்று.

கமலா உள்ளே நுழைந்தாள். அம்புலு வெகு அன்புடன் வரவேற்றாள். பல விஷயங்களைப்பற்றிப் பேசிக் கொண்டிருந்துவிட்டு அம்புலுவின் நாத்தனார் சமீபத்தில் விதவையான விஷயத்தையும் வெகு சாமர்த் தியமாய்த் தெரிந்துகொண்டாள். கமலாவின் மனம் சந்தோஷத்தால் துடித்தது. ‘ இந்த நாத்தனாரின் விஷய மாய்த்தான் விஜயாவிடம் அன்று பேசிக்கொண்டிருந் தாயா ?’ என்று கேட்கலாமா என்று கூடக் கமலா வாயெடுத்தாள். ‘ இதைக் கேட்டு அம்புலுவின் மனத் தைக் கஷ்டப்படுத்துவானேன் ? அம்புலு நம்மை என்ன செய்தாள் ? விஜயா அல்லவோ நம்மை அவமானப் படுத்தினாள் ?’ என்று எண்ணிக்கொண்டு சும்மா இருந்துவிட்டாள் ; அம்புலுவின் நாத்தனாரைப்பற் றிய துப்புக் கிடைத்த பிறகு அங்கு அதிக நேரம் தாம திக்காமல் நேராக விஜயாவின் வீடு போய்ச் சேர்ந்தாள். விஜயா வழக்கம் போல் அன்புடன் பேசினாள். கமலா வுக்குத் தான் கோரிவந்த விஷயத்தை ஆரம்பிப்பது கூடக் கொஞ்சம் சிரமமாய் இருந்தது. கடைசியில் திடப்படுத்திக்கொண்டு, ‘ அது என்னடி அம்மா ! அன்றைக்கு அம்புலுவுடன் அவ்வளவு ரகசியம் ? என்னை உட்காரவைத்து விட்டுப் போய்விட்டாயே !’ என்று விளையாட்டாய்க் கேட்பது போல் ஆரம்பித்தாள் கமலா.

விஜயா சிரித்துக்கொண்டே, 'உன் ரகசியங்களை நீ எவ்வளவோ என்னிடம் சொல்லியிருக்கிறாய். அம்புலு அவை என்னவென்று கேட்டால் நான் சொல்லலாமா? நீயே சொல்' என்றாள்.

கமலா வெகு கம்பீரமாய், 'உங்கள் பிரமாதமான ரகசியம் எனக்குத் தெரியாதோ! அம்புலுவின் நாத்தனாரைப்பற்றித்தானே?' என்று கேட்டாள்.

'இல்லவேயில்லை' என்றாள் விஜயா.

'உண்மையை ஏன் மறைக்கிறாய்? ஏதோ பெண் ஜன்மம், பாவம்! கெடுதல் நேர்ந்துவிட்டது. அயலார் கையை எதிர்பார்க்காமல் தன் வயிற்றைத் தான் அலம்பிக்கொள்ள வழி தேடுவதில் என்ன தப்பு?' என்று கமலா சரமாரியாய்ப் பொழிந்தாள்.

விஜயா இதற்குப் பதில் சொல்வதற்குள் மரகதம் அங்கு வந்தாள். விஜயாவின் பதிலைக்கூட எதிர்பார்க்காமல் கமலா மரகதத்தின் எதிரில் பிரசங்கம் செய்ய ஆரம்பித்துவிட்டாள்; மரகதமும் ஆமோதித்தாள்.

முடிவில் விஜயாவும் வேறு வழியில்லாமல், 'ஆம், கமலா, நீ சொல்வது வாஸ்தவம்தான்' என்று ஒப்புக்கொண்டாள். அப்பொழுது பார்க்கவேண்டும் கமலாவின் முகத்தை! மரகதம் வெகு சாது போல் உட்கார்ந்திருந்தாள். விஜயா ஏதோ சிந்தனையில் ஆழ்ந்திருந்தாள். இரண்டு நிமிஷம் நிசப்தமாயிருந்தது.

'விஜயா! அன்று நான் உன்னைக் கேட்டதற்கு இன்றைக்கு வரச் சொன்னாயே!' என்று சொல்லிக்கொண்டே அம்புலு உள்ளே நுழைந்தாள். அவளுடன் சுமார் ஐம்பது வயதுள்ள ஒரு ஸ்திரீயும் வந்தாள்.

கமலாவும் மரகதமும் அங்கே இருந்ததை அம்புலு முதலில் கவனிக்கவில்லை. அவர்களைப் பார்த்தவுடன் அம்புலுவின் முகம் கொஞ்சம் அசடு தட்டியது ; ' அப்புறம் வருகிறேன் ' என்று சொல்லிக்கொண்டு திரும்ப யத்தனித்தாள்.

'பாதகமில்லை, உட்காரு' என்று கூறிவிட்டு விஜயா உள்ளே சென்று கையில் ஒரு கவருடன் திரும்பி வந்தாள்; அதற்குள்ளிருந்த சீட்டுக்களை எடுத்து அங்கிருந்தவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒன்று கொடுத்தாள்.

'கமலா ! இந்த ஸினிமா பாஸுக்காகத்தான் அன்று அம்புலு வந்தாள். இதை நான்கு பேர் எதிரில் கேட்க அவளுக்கு என்னவோ வெட்கம்' என்றாள் விஜயா. கமலாவும் மரகதமும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக்கொண்டார்கள்.

விஜயா புன்சிரிப்புடன் அம்புலுவைப் பார்த்து, 'உன்னுடன் வந்திருக்கும் அந்தப் பெரிய அம்மாள் யார் ?' என்று விசாரித்தாள்.

'உனக்குத் தெரியாதா என்ன ? அவர்தான் என் நாத்தனார்' என்றாள் அம்புலு.

## 15. மேல் விலாசம்

**நா**னும் ரங்காவும் பாலிய சிநேகிதம். இரண்டு பேரும் ஒரே கிராமம் ; ஒரே தெரு ; சற்றேறக் குறைய ஒரே வயது. கல்யாணமான பின்பு நான் பட்டணம் வந்துவிட்டேன். அவள் கிராமத்திலேயே இருந்துவிட்டாள் ; இதுதான் வித்தியாசம்.

நான் பட்டணம் வந்த பிறகு எனக்கும் ரங்காவுக்கும் கடிதப் போக்குவரத்து உண்டு. ஆனால் அவளை நேரில் பார்த்து வெகு நாளாயிற்று.

ஒரு நாள் ரங்காவிடமிருந்து கடிதம் வந்தது. தை மாதத்தில், அதாவது ஒரு மாதத்திற்கப்புறம், அவளும் அவள் மாமியாரும் பட்டணம் வரப்போவதாய்த் தெரிவித்திருந்தாள். பட்டணத்தில் தான் இறங்கப் போகும் வீட்டின் மேல் விலாசத்தைக் கொடுத்து என்னை அங்கு வந்து தன்னைக் காணும்படி எழுதியிருந்தாள்.

ரங்கா எழுதின தேதிக்குச் சரியாக நான் ரங்காவைப் பார்க்கப் புறப்பட்டேன். அவள் எழுதின கடிதம் அகப்படவில்லை. மேல் விலாசம் மாத்திரம் ஞாபகம் இருந்தது. திருவல்லிக்கேணி சாமிப் பண்டாரம் தெரு என்று ஞாபகம். வீட்டு நம்பர்தான் கொஞ்சம் சந்தேகம். அது முப்பத்திரண்டா அல்லது இருபத்துமூன்று என்பதுதான். அதை அங்கு போய்த் தெரிந்துகொள்ள முடியாதா ?

என் அகத்துக்காரர் திருவல்லிக்கேணிக்குக் காரியமாய்ப் போவதாய்ச் சொன்னார். அவருடன்கூட நானும் காரில் புறப்பட்டேன். வழியில், ‘மேல் விலாசம் தெரியுமல்லவா ?’ என்று கேட்டார். ‘திருவல்லிக்கேணி சாமிப் பண்டாரம் தெரு’ என்றேன்.

உடனே டிரைவர், ‘சாமிப் பண்டாரம் தெரு சிந்தாதிரிப்பேட்டையில் அல்லவா இருக்கிறது !’ என்றான்.

எனக்குக் கொஞ்சம் சந்தேகம் உண்டாகிவிட்டது. நான் சந்தேகப்படுவதைத் தெரிந்துகொண்டு, ‘உன் சிநேகிதி எழுதின கடிதம் கையில் இருக்கிறதோ இல்

லயோ?' என்று சிரித்துக்கொண்டே கேட்டார் என் கணவர். 'கடிதத்தைக் கொண்டு வரவில்லை. போகிற வழிதானே சிந்தாதிரிப்பேட்டை? பார்த்துக்கொண்டு வேண்டுமானல் போய்விடுவோமே!' என்று சொல்லி டிரைவரைச் சிந்தாதிரிப்பேட்டை வழியாய் காரை விடச் சொன்னேன். என் கணவர் திருவல்லிக்கேணி போகவேண்டியது அவசரமாயிருந்ததால் கடைசியாய் திருவல்லிக்கேணிக்கே நேராய்ப் போவதென்று தீர் மானித்தோம்.

தாம் இறங்கவேண்டிய இடத்தில் இறங்கிக் கொண்டு, 'உன் இஷ்டப்படி 5 மணி வரையில் மேல் விலாசம் தேடிக்கொள்!' என்று சொல்லி என் கண வர் காரை என்னிடம் ஒப்புவித்தார்.

வழியில் ஒருவனை சாமிப் பண்டாரம் தெரு எங்கு இருக்கிறதென்று விசாரித்தேன். 'திருவல்லிக்கேணி யில் சாமிப்பண்டாரம் தெருவே கிடையாதே!' என் ருன். டிரைவர் முதலிலேயே சொன்னது சரியென்று தோன்றிற்று.

சிந்தாதிரிப்பேட்டை வந்து சேர்ந்தோம். டிரை வருக்கு சிந்தாதிரிப்பேட்டை முழுவதும் தெரிந்திருக்கு மென்று நினைத்திருந்தேன். எனக்குச் சந்தேகத்தைக் கிளப்பிவிட்டுக் கலவரமுண்டாக்குவதற்கு எவ்வளவு வேண்டுமோ அவ்வளவுதான் அவனுக்குத் தெரியும்! ஏனென்ருல் அங்கு போய் வழி விசாரிக்க ஆரம்பித் தான்.

காரை நிறுத்தி ஒருவரை, 'சாமிப் பண்டாரம் தெருவுக்கு எப்படிப் போகவேண்டும்?' என்று டிரைவர்

கேட்டான். அவர் நின்று பதில் சொல்லாமல் போலீஸ் காரன் கை காண்பிப்பது போல் ஏதோ கையைக் காட்டி விட்டுச் சென்றார். அவர் காண்பித்த திக்கை நோக்கிக் கார் நகர்ந்தது.

கொஞ்ச தூரம் சென்றபின் மறுபடி விசாரணை. கடைசியாய்த் தேடும் தெரு இதுதான் என்று ஒருவித மாய் முடிவுக்கு வந்தோம். ஒரு கோடியிலிருந்து மற்றொரு கோடி வரையில், ஊர்வலத்தில் விடுவதுபோல், காரை மெதுவாய் ஓட்டிக்கொண்டு, வீடு வீடாய்க் கதவு நம்பர்களைக் கவனித்துக்கொண்டு வந்தோம். 32-ஆம் நம்பரே இல்லை!

நகரத்தில் நம்பர் போடும் விசித்திரமே விசித்திரம்! குறுக்கே வரும் சந்துகளில் நம்பர் வரிசையை மடித்துக் கொண்டு வருவதொன்று! ஒரே நம்பருக்கு A, B, C என்று எழுத்துக்களைச் சேர்த்துக்கொண்டே போவது வேறு. தெருவின் நடுவில் கட்டைத்தொட்டி ஒன்று வரும். அதற்கு நம்பர் இருக்கும் இடமே தெரியாது. இதெல்லாம் போதாதென்று வீட்டுக் கதவுகளின் மேல் புது நம்பர் ஒன்று; பழைய நம்பர் ஒன்று. இவ்வளவு தெளிவு!

மேலும் கீழுமாய் தெருவில் நாலைந்து தடவை கார் அலைந்ததுதான் மிச்சம். வீடு அகப்படவில்லை. ஒருகால் தெருவே சரியான தெருத்தானோ என்று சந்தேகம் வந்துவிட்டது. கடைசி முறையாகக் காரை தெருக் கோடிக்கு விட்டோம். தெருவின் பெயர் என்னவென்று பார்த்தேன். அது சாமி **நாயக்கர்** தெரு! சாமிப்பண்டாரம் தெருவல்ல! அட நாராயணா! இவ்வளவு அலைச்சலும்,

பெட்ரோல் செலவும், கழுத்து ஓடிய நம்பர்களைப் பார்த்ததும், வாய் வலிக்க ஆள் ஆளாக விசாரித்ததும் - எல்லாம் வீணு !

திரும்பவும் விசாரித்து, சரியான சாமிப் பண்டாரம் தெருவையே அடைந்தோம். 32-ஆம் நம்பர் வீடு பூட்டப்பட்டிருந்தது; 'டு லெட்' போர்ட் தொங்கவிடப்பட்டிருந்தது. 23-ஆம் நம்பர் வீட்டில் ஒரு முதலியார் குடித்தனம் இருந்தார். நான் தேடும் ரங்காவோ பிராமணப் பெண். அதிலும் ரொம்ப வைதிகம். ஆகையால் அங்கு வந்து இறங்கமாட்டாள்.

எனக்கு என்ன செய்வதென்று தோன்றவில்லை. அப்படியும் இப்படியும் திரும்பிப் பார்த்தேன். இன்னும் யாரை விசாரிக்கலாம் என்று யோசித்துக் கொண்டிருந்தேன். வழியே போய்க்கொண்டிருந்த ஒரு பிராமணக் கிழவர் என்னைப் பார்த்து, 'இந்தத் தெருவில் பிராமணர்கள் குடித்தனம் அதிகம் கிடையாது. அக்கிரகாரத்தில் போய் வேண்டுமானல் தேடிப் பாருங்கள்' என்று அனுதாபத்துடன் சொன்னர்.

'முழுகிப் போகும் சமயத்தில் துரும்பு அகப்பட்டாலும் பிடித்துக் கொள்வான்' என்று வசனம் சொல்வது உண்டு. அதைப் போல ரங்காவைத் தேடிக் கிடைக்காமல் தவித்துக்கொண்டிருந்த எனக்குக் கிழவர் சொன்னது ஓர் அபார யோசனையாய்த் தோன்றியது. உடனே காரை அக்கிரகாரத்திற்கு விடச் சொன்னேன். 'சுங்குவார் அக்கிரகாரம்தானே?' என்று கேட்டான் டிரைவர். 'ஆம்' என்று சொல்லி வைத்தேன்.

அங்கே போன பிறகுதான் என் புத்தியில் பட்டது. நான் தேடி வந்தது திருவல்லிக்கேணி சாமிப் பண்டாரம் தெரு. நான் இப்போது வந்திருப்பது திருவல்லிக் கேணியுமல்ல, சாமிப் பண்டாரம் தெருவுமல்ல. இரண்டு மல்லாமல் சிந்தாதிரிப்பேட்டை சுங்குவார் அக்கிரகாரத் தில் வந்து நிற்பது முட்டாள்தனமென்று அப்போது தான் எனக்குத் தெரிந்தது.

உடனே காரை மறுபடி திருவல்லிக்கேணிக்குத் திருப்பினேன். திருவல்லிக்கேணியில் 'சாமி' என்னும் பெயருடன் ஆரம்பிக்கும் எல்லாத் தெருக்களையும் பார்த்துவிடுகிறதென்று வைராக்கியம்.

சாமிப் பிள்ளை தெருவுக்கு வந்தேன். கிரமப் பிர காரம் மேலிருந்து கீழ் ஒரு நடை ; கீழிருந்து மேல் ஒரு நடை காரை நடத்தி, இடது சாரி, வலது சாரி வீடுகளின் நம்பர்களைக் கவனித்தேன். 32-ஆம் நம்பர் வீடு கிடைத் தது. பெரிய வீடு, வாசலில் ஒருவர் உட்கார்ந்திருந்தார்.

நான் கேட்கச் சொன்ன பிரகாரம் டிரைவர் அவரை, 'இந்த வீட்டில் ரங்கா அம்மா என்று யாராவது வந் திருக்கிறார்களா ?' என்று கேட்டான்.

'தெரியாது. உள்ளே போய் வேண்டுமானால் வண் டியில் இருக்கும் அம்மா விசாரிக்கட்டும். நீ உள்ளே போகக்கூடாது' என்றார் அவர்.

வண்டியிலிருந்து நான் இறங்கினேன். வாசல் திண்ணையில் 'கொக்' 'கொக்'கென்று இருமிக்கொண்டு ஒரு கிழம் உட்கார்ந்திருந்தது.

'நீங்கள் இந்த வீடுதானே ?' என்று மரியாதை யாய்க் கேட்டேன்.

'நான் இந்த வீடுதான்; இந்த வீட்டுக்காரனும் தான். ஆனால் இந்த வீட்டில் ஆறு குடித்தனம் இருக்கிறார்கள். வேண்டுமானால் உள்ளே போய் விசாரித்துக் கொள்ளலாம்' என்றார் கிழவர், மிகுந்த அலுப்புடன்.

'உங்களுக்குத் தெரியாதா? ரங்கா என்று யாராவது வெளியூரிலிருந்து வந்து இறங்கி யிருக்கிறார்களா?' என்று மறுபடியும் கேட்டேன்.

கிழவருக்குக் கோபம் வந்துவிட்டது. 'எத்தனையோ பேர்கள் வருகிறார்கள், போகிறார்கள். அதற்கெல்லாம் நான் கணக்கு வைத்துக்கொண்டிருக்கிறேனா? அல்லது மேல் விலாசம் பார்த்துக் கொடுக்கும் தபால்காரன் உத்தியோகமா எனக்கு?' என்று கிழவர் தம் உத்தியோகம் என்ன வென்பதை என்னிடமிருந்து கேட்டுத் தெரிந்துகொள்ளப் பார்த்தார்.

இந்த ரஸமான அனுபவங்களெல்லாம் கிராமத்தில் கிடைக்குமா? கிராம எல்லைக்குள் அடி வைத்தவுடனேயே யார் வீட்டையும் சுலபமாய்த் தெரிந்துகொள்ளலாம். பத்து வருஷங்களானாலும் பக்கத்து வீட்டில் யார் இருக்கிறார்களென்று தெரிந்துகொள்ளாமல் வசிப்பதற்குப் பட்டணத்தில்தான் முடியும். நாலைந்து குடித்தனங்கள் இருக்கிற வீட்டில் பின் கட்டில் இருந்துவிட்டால், தபால்காரனுக்கே தபாலைக் கொண்டு சேர்ப்பது கஷ்டம். நம்மைப் போல் தேடிச் செல்கிறவர்களுக்கு முன் கட்டுக்காரர்கள் தயவு வைத்தால்தானே உண்டு!

கிழவரைத் தாண்டிச் செல்வதற்கு எனக்குத் தைரியம் வரவில்லை. 'இவ்வளவு இடங்களிலெல்லாம் தேடி அகப்படாத ரங்கா இங்குதான் அகப்படப்போகிறாளா?'

என்று மனத்துக்குள் ஒரு ஆயாசம். தவிர, மணியும் 5 ஆகிவிட்டது. என்கணவருக்குக் காரைக் கொண்டுபோக வேண்டும். 'தாறுமாருய் மேல் விலாசம் இப்படியா ஒருத்தி கொடுப்பாள் ?' என்று ரங்காவை மனத்துக்குள் வைதுகொண்டே திரும்பி வந்து காரில் ஏறிவிட்டேன்.

நானும் என் கணவரும் வீடு வந்து சேர்ந்தோம். எங்களுக்கு முன்பே ரங்காவும் அவள் மாமியாரும் வந்து காத்துக்கொண்டிருந்தார்கள்.

'நன்ருய் மேல் விலாசம் கொடுத்தாயடீ, ரங்கா! இன்று முழுவதும் உன்னைத் தேடித் தேடிப் பட்டணத்தில் எல்லா வீதிகளையும் தெரிந்துகொண்டேன்' என்றேன்.

'இல்லையடீ! நான் கொஞ்சம் தப்பாய் எழுதிவிட்டேன். திருவல்லிக்கேணி சாமிப் பிள்ளை தெருவுக்குப் பதிலாய் சாமிப் பண்டாரம் தெரு என்று எழுதிவிட்டேன். சாமிப் பிள்ளை தெரு, 32-ஆம் நம்பர் வீட்டிற்குத்தான் வந்திருக்கிறேன். வாசலில்கூட ஒரு கிழவர் இருமிக்கொண்டே உட்கார்ந்திருப்பார்' என்று சொல்லி முடித்தாள் ரங்கா.

## 16. காமு

**நா**னும் என் பாட்டியும் பல்லாங்குழி ஆடிக்கொண்டிருந்தோம்.

என் பாட்டிக்கு சானுப்பாட்டி என்று பெயர்; ரொம்பக் கர்நாடகம்தான். ஜானகி—ஜானகம், ஜானகா, ஜானம்மா, ஜக்கம்மா, ஜானு, ஜான், ஜானி, ஜாகி என்றெல்லாம் மாறுவது இந்தக் காலத்து 'பாஷன்'. அந்தக்

காலத்தில் ஜானகி சானுவாக மாறுவதுதான் சாதாரணம்

என் பாட்டியின் பிறந்த அகம் கும்முட்டிப்பாக்கம். தன் ஊரைப்பற்றிப் பேச ஆரம்பித்துவிட்டால் என் பாட்டி மெய்மறந்து விடுவாள். எனக்கும் கேட்பதில் ஆசை. 'அக்கரை கோபு, மேலத்தெருக் குப்பு, கீழாத்துச்சேசு, வாமனன் பிள்ளை ராமு' என்றெல்லாம் இருப்பவர்கள், இறந்தவர்கள் எல்லாரையும்பற்றிப் பாட்டி கதை கதையாய்ச் சொல்லிக்கொண்டேயிருப்பாள். அடைமொழி இல்லாத பெயரே இராது.

நானும் என் பாட்டியும் பல்லாங்குழி ஆடிக்கொண்டிருக்கும்போது, எதிர் வீட்டுத் தங்கம் வந்தாள்.

'பாட்டி! கும்முட்டிப்பாக்கத்தில் நாணுவாத்துக் காமு போயிடுத்தாமே, பாவம்! தெரியுமா?' என்ருள் தங்கம்.

'என்ன? என்ன? நாணுவாத்துக் காமுவா?' என்று இடி விழுந்தது போல விசாரித்தாள் பாட்டி.

'என் அகத்துக்காரருக்கு உறவுக்காரர்கள் கும்முட்டிப்பாக்கத்திலிருந்து வந்திருந்தார்கள். அவர்கள் பேசிக்கொண்டிருந்தார்கள். அதுதான் எனக்குத் தெரியும்.'

'அடெப் பாவி பிள்ளை நாணு!' என்று பாட்டி ஒரு விம்மு விம்மினுள்; அவ்வளவுதான்; உடனே கண்களில்நீர் தாரை தாரையாய்ப் பெருக ஆரம்பித்தது.

'காமுவை உனக்குத் தெரியுமா, பாட்டி?' என்றேன்.

'தெரியாமலென்னடீ! நடுத்தெரு வாசு பிள்ளை நாணு, பதினெட்டு வருஷம் குழந்தை குட்டியில்லாமல் தவம் கிடந்தான். நாலாம் வருஷம்தான் அவனுக்கு ஒரு பெண் பிறந்தது. புண்யாவாசனத்திற்கு நான் அங்கே இருந்தேன். குழந்தை கிளியாட்டமா யிருந்தது.— ஹூம்! அதுவும் போரேன்னு போயிடுத்தா? அடத் துக்குறி நாணு!' என்று பாட்டி தரையைத் தட்டிக்கொண்டு அழ ஆரம்பித்தாள்.

வெகு சீக்கிரத்தில் பாட்டி தீர்மானத்திற்கு வந்து விட்டாள்,— உடனே நேரில் போய் நாணுவைத் துக்கம் விசாரிக்க வேண்டுமென்று.

'துக்கம் விசாரித்துக் கடிதம் எழுதினல் போதாதா?' என்றேன் நான்.

'போதுமடீ! இந்தக் காலத்து நாகரிகம் எல்லாம் எனக்கு வேண்டாம். என் கைச் சாதம் சாப்பிட்டு வளர்ந்தவண்டி நாணு! பாழும் தெய்வத்திற்குக் கண் இல்லையே! அவனுக்கா இந்தக் கஷ்டம் வரணும்? சுவத்தோடாவது சொல்லி அழணும். அப்போதான் துக்கம் தீரும். நான் கட்டாயம் குழந்தை நாணுவைப் போய்ப் பார்த்துவிட்டுத்தான் வரவேணும்' என்று முடிவு கட்டினுள் பாட்டி.

நானும் என் பாட்டியுடன் புறப்படுவதாய்த் தீர்மானித்தேன். இந்தச் சந்தர்ப்பத்தை ஒட்டியாவது என் பாட்டி பிறந்து வளர்ந்து விளையாடின கும்முட்டிப் பாக்கத்தைப் பார்த்துவிட்டு வரலாமென்று எனக்கு ஆசை.

மறுநாளே புறப்படுவதாய் ஏற்பாடு ஆயிற்று. வார சூலையாய் இருக்குமோ என்று முதலில் கொஞ்சம் சந்தேகம் இருந்தது. கும்முட்டிப்பாக்கம் இருந்த திக்கு தென் மேற்கு. அந்த ஊருக்குப் போகவேண்டுமானுல் தெற்கு வாரசூலையைக் கவனிக்கவேண்டுமா, அல்லது மேற்கு வாரசூலையைக் கவனிக்கவேண்டுமா என்று சந்தேகம். கடைசியில் இரண்டையும் கவனிக்க வேண்டாமென்று தீர்மானித்தோம். தவிர, விஷயம் வெகு அவசரமானதல்லவா? நாணு தம் துக்கத்தைச் சானுப் பாட்டியிடம் சொல்லி ஆற்றிக்கொள்ள வேண்டு மென்று எப்படித் தவித்துக் கொண்டிருக்கிருரோ! நாங்கள் தாமதிக்கலாமா?

புறப்படும்போதே என் பாட்டிக்கு வாசற்படி காலில் இடறியது. 'நாசமாய்ப் போற தெய்வம் என்னைப் போல் கிழங்களையெல்லாம் வச்சு ஆட்டறதே! ஸ்வர்ண மாட்டமா இருந்த காமுவைக் கொண்டு போயிடுத்து; என்னைக் கொண்டு போகக் கூடாதா?' என்று அலுத்துக்கொண்டே, கொஞ்சம் மோர்த் தீர்த்தம் கொண்டுவரச் சொல்லி, சாப்பிட்டுவிட்டுப் பாட்டி புறப்பட்டாள்.

ரயில் ஏறினேம். நாங்கள் ஏறின வண்டியில் என் பாட்டிக்குத் தெரிந்த ஒருவர் ஏற்கெனவே இருந்தார். தான் போகும் இடத்தையும் காரியத்தையும் பாட்டி அவருக்குத் தெரிவித்தாள்.

அவரும், 'ஏன் சானுப்பாட்டி! இந்தச் சின்னச் சாவுக்காக இப்படித் தள்ளாத வயதில் நீங்கள் அலையணுமா? துக்கம் விசாரித்து ஒரு கடிதம் எழுதினுல் போதுமே!' என்று என்னைப் போலவே கேட்டார்.

'நன்ஞயிருக்குடா, ரங்கா! நீ கூடப் புது பாஷ னில் இறங்கிவிட்டாயா? சாவில் சின்னதாவது, பெரி சாவது! இன்றைக்குக் குழந்தை, நாளைக்கே பெரியவ ளாகி, கொள்ளுப்பேரனும் எள்ளுப்பேரனுமாய் இருக்க மாட்டாளா!' என்று பாட்டி ரங்கனைக் கண்டித்தாள்.

ஒரு சமயம் யோசித்தால் நமது புது நாகரிகத்தில் எல்லாமே சுருங்கி வருவது போலத்தான் தோன்று கிறது. ஐந்துநாள் கல்யாணம் ஒரு நாளாய்ச் சுருங்கிவிட் டது. புருஷர்களின் தலைமயிர் சுருங்கிவிட்டது; பெண் களுடைய ரவிக்கையின் கை நீளம் சுருங்கிவிட்டது. இல்லாவிட்டால், என்னைப்போலவே, ரயிலில் வந்த ரங்க னும் விஸ்தாரமாய் துக்கம் விசாரிக்கப் போகும் சானுப் பாட்டியைச் சுருக்கமாய்க் கடிதம் எழுதினுல் போதாதா என்று கேட்பாரா?

எதற்கும் பாட்டி போட்ட கேள்விக்கு ரங்கனுல் பதில் சொல்ல முடியவில்லை. அடுத்த ஸ்டேஷனில் ரங் கன் இறங்கிவிட்டார். மிகுதி ரயில் பிரயாணம் முழுவ திலும் பாட்டி மௌனமாய் இருந்தாள். என்னைப்போல் ரங்கனும் இப்படிக் கேட்டதில் கோபமோ என்னவோ!

இறங்கவேண்டிய ஸ்டேஷன் வந்தவுடன் ரயிலை விட்டு இறங்கினேும். அங்கிருந்து கும்முட்டிப்பாக்கம் இரண்டு மைல் தூரம். ஒரு மாட்டு வண்டி அமர்த்திக் கொண்டு புறப்பட்டோம்.

வண்டியில் ஏறியவுடன் வண்டிக்காரனைக் காமுவின் சமாசாரத்தைப்பற்றிப் பாட்டி விசாரிக்க ஆரம்பித்தாள். காமுவின் சாவைப்பற்றி உலகமெல்லாம் தெரிந்திருக்கு மென்று பாட்டியின் அபிப்பிராயம். பாவம், வண்டிக்

காரப் பையனுக்கு ஒன்றும் தெரியவில்லை. பாட்டியோ விடுவதாயில்லை; 'அதாண்டா நடுத்தெரு வாசுவையர் மகன் நாணுவையரைத் தெரியாதா உனக்கு?' என்று வண்டிக்காரப் பையனைக் குறுக்கு விசாரணை செய்ய ஆரம்பித்தாள்.

பையன் வேறு வழியில்லாமல், 'ஆமாங்க, பாட்டியம்மா! இப்ப ஞாபகம் வந்திடிச்சு. கும்முட்டிப்பாக்கத்திலே ஏதோ ஒரு அய்யுரு வூட்டிலெ ஒரு சாவு நடந்திச்சுன்னு சொன்னுங்க' என்றுன்.

காமு இறந்ததற்குக் காரணம் என்ன வென்று தெரிந்துகொள்ளப் பாட்டிக்கு ஆவல். வண்டிக்காரப் பையனுக்கு விவரங்கள் ஒன்றும் தெரியவில்லை.

கடைசியாய் ஊர் போய்ச் சேர்ந்தோம். தெருக்கோடியிலேயே பாட்டி வண்டியிலிருந்து இறங்கிவிட்டாள்; நானும் இறங்கிவிட்டேன். துக்கத்திற்குப் போகிறவர்கள் நேராய் வீட்டு வாசலுக்கெதிரில் போய் இறங்குவது தப்பு என்று பாட்டி சொன்னுள். கிரமப்படி பாட்டி தெருக்கோடியிலிருந்தே அழுதுகொண்டு போனுள். பாட்டியின் குரல் மாத்திரம்தான் அழுவது போல் இருந்தது; பாட்டியின் வாயிலிருந்து வந்தவைகளெல்லாம் வெகு அழகான கவிகள். காமுவின் அழகு, சமர்த்து, அவளுடைய தந்தைக்கு அவள் நாள் கழித்துப் பிறந்தது, காமு உயிருடன் இருந்திருந்தால் எப்படியெப்படி யெல்லாம் வாழ்வாள், தெய்வம் செய்த அநீதி முதலியவைகளைப் பற்றியெல்லாம் அற்புதமான கண்ணிகள் பாட்டியின் வாயிலிருந்து உதிர்ந்துகொண்டிருந்தன. இந்தக் காலத்தில் நாமும் இவ்வளவெல்லாம் படித்

திருக்கிறோமே; நம்மால் ஒரு கவி கவனம் செய்ய முடியுமா?

* * *

நாணு தம் வீட்டு வாசல் திண்ணையில் உட்கார்ந் திருந்தார். அவர் முகத்தில் துக்கக் குறிகள் தென் பட்டன. நாணுவைப் பார்த்ததுதான் தாமதம்; உடனே என் பாட்டி, மார்பில் அடித்துக்கொண்டு 'கோ' வென்று அழ ஆரம்பித்தாள்; 'என்னப்பா நாணு! உனக்கா இந்தக் கஷ்டம் வரணும்?' என்றாள்.

நாணு ஒன்றும் பேசவில்லை. அதிக துக்கத்தால் ஒன்றும் பேசவில்லை யென்று நான் நினைத்துக்கொண் டேன்.

'ஏண்டா அப்பா! என்ன உடம்பாய்க் கிடந் தது?' என்று விசாரித்தாள் பாட்டி.

'இடறி விழுந்தது; அவ்வளவுதான், அத்துடன் மூச்சு நின்றுவிட்டது. அந்தப் பச்சை மண்ணுக்கு எவ் வளவு வேணும்!'

'தெய்வத்தின் சோதனையடா சோதனை! ஊரார் "ஓமலு"ம்தான்' என்று பாட்டி அழுகையை நிறுத்திக் கொண்டு பெருமூச்சு விட்டாள்.

'அதேதான் சானுப் பாட்டீ! அதைப் பார்த்துக் கண் போடாதவர்களே கிடையாது. என்ன விளையாட்டு விளையாடித்துத் தெரியுமா?' என்று சொல்லி நாணு வும் பெருமூச்சு விட்டார்.

பாட்டி ஊரிலிருந்து புறப்படும்போது எனக்கு வேடிக்கையாயிருந்தது. இப்போது எனக்குக்கூட கண் ணில் ஜலம் வந்துவிட்டது. பாவம், புத்திரசோகம்.

'அதன் அழகை என்னுன்னு சொல்லறது? இவர் "காமூ"ன்னு கூப்பிடவேண்டியதுதான், துள்ளிக் குதிச்சுண்டு ஓடிவரும்' என்று சொல்லிக்கொண்டே நாணுவின் சம்சாரம் வெளியே வந்தாள்.

'நாம் கொடுத்து வச்சது அவ்வளவுதாண்டி அம்மா!' என்று பாட்டி மறுபடியும் கண்ணீர் விட்டாள்.

நாணுவின் சம்சாரத்தின் கண்கள் கலங்கின. பெற்ற வயிறல்லவா?

இந்தத் துக்க சாகரத்தில், இடையன் பசுவை வீட்டுக்குள்ளிருந்து ஓட்டிக்கொண்டு வந்ததைக் கூட ஒருவரும் கவனிக்கவில்லை; 'ஒதுங்குங்க அம்மா!' என்று இடையன் கூச்சல் போட்ட பிறகுதான் தெரிந்தது.

இவ்வளவு துக்கத்தினிடையிலும் பாட்டி கவனித்து, 'ஏண்டா கோவிந்தா! மாட்டை மாத்திரம் ஓட்டிண்டு போறயே கன்னுக்குட்டியை விட்டு விட்டு!' என்று எச்சரிக்கை செய்தாள்.

'அந்த வவுத்தெரிச்சலெ ஏம்மா கிளப்பறிங்க? காம தேனுன்னு காமதேனுதான். அய்யரும் வாய் ஓயாமே "காமூ! காமூ! காமூ"ன்னுக்கிட்டிருப்பாரு. அது போறேன்னு போயிடிச்சு, பத்து நாளாச்சு!' என்முன் கோவிந்தன்.

# 17. காபி

காபியை ஓட்டிவிட வேண்டுமென்று டாக்டர்களும்தான் எத்தனையோ வருஷ காலமாய் பிரயத்தனப் பட்டுக்கொண்டு வருகிறார்கள். ஆனால், இது முடிகிற காரியமா?

ஒரு உதாரணம் பாருங்கள்! நாம் காபி ஹோட்டலுக்குப் போகிறோம். தித்திப்பு பக்ஷணம், உப்பு பக்ஷணம் எல்லாம் சாப்பிடுகிறோம். பரிமாறும் பையன் உடனே 'பில்'லை எழுதிக்கொண்டு வந்துவிடுகிறானா? 'காபி ஒரு கப்பா அரை கப்பா ஸார்?' என்றுதானே விசாரிக்கிறான். காபி கொண்டுவந்து கொடுத்த பிறகு அங்கே நிற்கிறானா? காபி டம்ளரின் கீழேயே பில்லை வைத்துவிட்டுப் போய் விடுகிறான். இதன் அர்த்தம் என்ன? சிற்றுண்டிக்குச் சிகரம் காபி என்பதுதானே!

அதைப்பற்றிச் சந்தேகமும் உண்டா? ஜிலேபி ஹோட்டல், போண்டா ஹோட்டல், பஜ்ஜி ஹோட்டல் என்றெல்லாம் பெயர் வைக்கக்கூடாதா? காபி ஹோட்டல் என்றுதானே பெயர் வைத்திருக்கிறார்கள்! காபியின் மகிமைக்கு இதைக் காட்டிலும் வேறு என்ன அத்தாட்சி வேண்டும்?

இப்படி யிருந்தும், 'நான் காபியை விட்டுப் பத்து வருஷமாகிறது', 'எங்கள் குழந்தைக்குக் காபி பிடிக்கிற தில்லை. ஓவல்டின்தான் வழக்கம்', 'எங்கள் வீட்டில் ஒரு வேளைதான் காபி, மத்தியானம் டீதான்' என்றெல்லாம் சிலர் சொல்லிக் கொள்ளுகிறார்கள். காபி ஒன்றைத் தியாகம் செய்வதைப்பற்றி இப்படி விசேஷமாய் சொல்லிக் கொள்ளுவதென்றால், காபி எவ்வளவு

முக்கியமானதென்று இதிலிருந்தே தெரியவில்லையா? தியாகம் செய்யும் வஸ்து அற்பமானதாயிருந்தால் அதைப்பற்றி ஏன் சொல்லிக்கொள்ளப் போகிறார்கள்?

என் சிநேகிதி குமுதாவின் வீட்டுக் காபி மிகவும் பெயர் பெற்றது. மிக ருசியாய் இருக்கும். நான் குமுதாவின் வீட்டிற்குப் போவதானால் காபி வேளை பார்த்துத்தான் போவேன். வழக்கப் பிரகாரம் ஒரு நாள் போயிருந்தேன். நான் போய் சிறிது நேரத்திற்கெல்லாம் குமுதாவின் சிநேகிதி வேறொருத்தி அங்கே வந்தாள்.

குமுதா உள்ளே சென்று சமையற்காரனுக்குத் தெரிவித்து எங்கள் இருவருக்கும் காபி கொண்டு வரச் சொன்னாள். இரண்டு டம்ளர்களில் சமையற்காரன் காபி கொண்டுவந்து வைத்தான்.

'என்ன குமுதா! சமையற்காரன் புதிதாய் இருக்கிறானே!' என்று சொல்லிக்கொண்டே எனக்கு வைத்த காபியை எடுத்துச் சாப்பிட்டேன். 'ஆம், வந்து இரண்டு நாளாயிற்று' என்று சொல்லிவிட்டு, சமையற்காரன் உள்ளே சென்றவுடன், 'பரம அசடு!' என்று முகத்தைச் சுளித்துக்கொண்டாள் குமுதா.

சமையற்காரனைக் குமுதா அசடு என்று சொன்னது நியாயம்தான் என்று எனக்குத்தோன்றிற்று. காபி வழக்கம் போல் ருசியாய் இல்லை. ஆனால் அங்கு வந்திருந்த குமுதாவின் சிநேகிதி காபியை மிகவும் புகழ்ந்து பேசினாள். கொஞ்சம் முகஸ்துதியாய் பேசுகிறாளோ என்னவோ என்று நான் நினைத்துக்கொண்டேன்.

சிறிது நேரத்திற்குப் பிறகு புதிய சிநேகிதி புறப்பட்டுப் போய்விட்டாள்.

'குமுதா! நீ சொன்னது வாஸ்தவம்தான். சமையற்காரனுக்கு நன்ருய்க் காபி போடத் தெரியவில்லை. காபி இன்று வழக்கம் போல் இல்லை' என்றேன் நான்.

'இல்லையடீ பத்மா! அவன் முதல்தரமாய்க் காபி போடுகிறவன்தான். அவன் செய்த அசட்டுத்தனம் வேறு. அவளுக்குக் கொடுக்கச் சொல்லியிருந்த காபியை உனக்குக் கொடுத்துவிட்டான்' என்ருள் குமுதா.

பார்த்தீர்களா! ஆளுக்குத் தகுந்தபடி மாறும் சக்தி காபிக்குத்தான் உண்டு.

காபிக்குப் பெருமை வீட்டிலும் ஹோட்டலிலும்தான் இருக்கிறதென்று நினைக்கிறீர்களா? வேறு இடங்களிலும் இருக்கிறது. பாட்டுக் கச்சேரிக்குப் போய்ப் பாருங்கள். அப்போது தெரியும்.

பாடகர் இடையிடையே காபி சாப்பிடுவதைப் பற்றி நான் சொல்லவில்லை; 'காபி' ராகத்தைப்பற்றித்தான் சொல்லுகிறேன். ராகத்திலும் பாருங்கள்! 'கோகோ' ராகம், 'டீ' ராகம், 'ஓவல்டின்' ராகம் என்று இருக்கிறதா? காபி ராகம் என்றுதானே இருக்கிறது! ராகங்களுக்குள் எல்லோருக்கும் பிடித்த ராகங்களில் காபி ஒன்று என்று சங்கீத ரஸிகர்கள் சொல்லுகிருர்கள். என்னைக் கேட்டால் ராகமாலிகைக்கு மிகவும் எடுத்த ராகம் காபி என்று சொல்லுவேன். பூபாளம் பாடி, அதற்கப்புறம் காபி பாடினுல் அனுபவத்திற்கு எவ்வளவு பொருத்தமாய் இருக்கும் பாருங்கள்.

காபி சாப்பிடுவதிலும்தான் எத்தனை விதங்கள்! காபியைக் கையில் கொடுத்தால் சிலர் விளக்கெண்

ணெயும் கஷாயமும் கலந்து சாப்பிடுவது போல் கலக்கிக் கலக்கிக் குடிப்பார்கள். வேறு சிலர் பின்தலை முதுகைத் தொடும் வரையில் அண்ணாந்து பாத்திரத்தில் ஒரு சொட்டுக்கூட மிச்சம் வைக்காமல் வாயில் வடித்துக்கொள்வார்கள். இதெல்லாம் அவ்வளவு கௌரவமானதல்ல என்பது நான் சொல்லாமலே உங்களுக்குத் தெரியும்.

கௌரவமாய்க் காபி சாப்பிடவேண்டுமானால், காபியை வாங்கிக்கொள்ளும் போதே 'நான் காபி சாப்பிடும் வாடிக்கை இல்லையே!' என்று சொல்லிக் கொண்டே வாங்கிக்கொள்ள வேண்டும். அதன் பிறகு கொண்டுவந்த காபியைப் பாதிக்கு மேல் பக்கத்தில் உள்ளவர்களுக்காவது, கொடுத்தவரிடமாவது திருப்பிக் கொட்டிக் கொடுத்துவிட வேண்டும். மிஞ்சிய காபியில் கொஞ்சம் டம்ளரின் அடியில் வைத்துவிடுவது ரொம்ப கௌரவம். அமிர்தத்துக்குச் சமானமான காபியைக் கூட நாம் அளந்து சாப்பிடுவதாய் இருக்கவேண்டும்.

ஹோட்டலில் காபி சாப்பிடும்பொழுது நாகரிகத்தைக் காண்பிக்கும் விதம் வேறு. புதிதாய் சென்னைக்கு வந்திருந்த என்னை என் கணவர் காபி ஹோட்டல் ஒன்றுக்கு அழைத்துச் சென்றார். ஹோட்டல் பையன் காபி கொண்டு வந்து வைத்ததுதான் தாமதம், அவசரமாய் நான் எடுத்துக் குடிக்கப்போனேன். என் கணவர் எனக்குக் கண்ணால் ஜாடை செய்துவிட்டு, பையனைப் பார்த்து, 'டிகாஷன் கொஞ்சம் கொண்டு வந்து போடு' என்றார்.

'ஏன் சரியாய்'— என்று ஆரம்பித்தேன் நான்.

‘உனக்குத் தெரியாது. சற்று இரு!’ என்று சிரித்துக்கொண்டே பதிலளித்தார் என் கணவர்.

கொடுத்தபடியே காபியைச் சாப்பிடாமல் இப்படியெல்லாம் நோட்டம் பார்த்துச் சாப்பிட்டால்தான் நாகரிகமோ என்னவோ என்று நான் எண்ணிக்கொண்டேன்.

இதற்குள் பையன் கெட்டிலுடன் டிகாஷனைக் கொண்டு வந்து எங்கள் இருவர் காபியிலும் ஊற்றினுன்.

‘இரு! இரு! அதிகமாய் ஊற்றிவிடாதே!’ என்ருர் என் கணவர்.

‘காபி ரொம்ப கறுப்பாய்ப் போய்விட்டதே! இன்னம் கொஞ்சம் பால் சேர்த்தால்தான் நன்ருய் இருக்கும்’ என்று யதார்த்தமாய்ச் சொன்னேன் நான்.

பையன் எங்கள் இருவரையும் ஏற இறங்கப் பார்த்தான். அவன் மனத்தில் என்ன தோன்றியதோ என்னவோ! ஏதோ சொல்ல வாயெடுத்தவன் நிறுத்திக்கொண்டு, ‘உங்களுக்கு வேறு காபி கொண்டு வருகிறேன்’ என்று சொல்லிவிட்டு மேஜை மேல் இருந்த காபியை எடுத்துக்கொண்டு போய்விட்டான்!

காபியைப்பற்றி இன்னும் எவ்வளவுதான் எழுதக்கூடாது? அதுதான் உலகத்தின் ஜீவரஸமாயிற்றே!

3466.